www.padippakam.com

# தாமரை



'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

ஆகஸ்ட் '90
ரூ. 2

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

தாமரை

நிறுவக ஆசிரியர்:
ப. ஜீவானந்தம்

ஆசிரியர் :
ப. மாணிக்கம்

பொறுப்பு ஆசிரியர் : கே. சி. எஸ். அருணாசலம்

மலர் : 33 ஆகஸ்டு 1990 இதழ் : 1

# வ. ரா. என்றொரு மாமனிதன்

பாரதிதாசன் நூற்றாண்டும் அம்பேத்கர் நூற்றாண்டும் நடைபெறும் இத்தருணத்தில் நூற்றாண்டு கண்ட புகழ்மிக்க தமிழ் எழுத்தாளர் வ. ராவையும் நாம் நினைந்து போற்றுகின்றோம்.

வ.ரா. எழுத்தாளர் மட்டுமல்ல தேச விடுதலைப் போரில் களங்கண்டு சிறை கிடந்த சிப்பாயுமாவார்.

தேசபக்தர் சுப்ரமணிய சிவா நடத்திய 'ஞானபானு' இதழில் எழுதத் தொடங்கி மணிக்கொடி முதலான பல பத்திரிகைகளுக்கு எழுதி வந்தார்.

இவரது 'கோதைத் தீவு' 'சின்னசாம்பு' 'விஜயம்' சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு முதலான நாவல்கள் பிரசித்தமானவை. இதுவன்றி ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள் எழுதி தமிழிலக்கியத்துக்குப் பெருமையும் வலுவும் சேர்த்த பெருமகன் வரா.

வ. ரா. சீர்திருத்தம் பற்றி எழுத்திலும் பேச்சிலும் மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் தன் வாழ்விலும் அதற்கு இடமளித்த தைரியசாலி

விருப்பு வெறுப்பற்று நடுநின்று பேசும் துணிச்சலும் அஞ்சாமையும், மனதில் பட்டதை பட்டவர்த்தனமாக எடுத்துச் சொல்லி கண்டிக்க அல்லது பாராட்டவல்ல விசால மனமும் படைத்தவர் வ ரா.

மக்கள் சிறந்த பண்புமிக்கவர்களாக உயர்வடைய வேண்டுமென்பதை தனது படைப்புகளில் இழையோடச் செய்த எழுத்தாளர். இவரது தமிழ்நடை கவர்ச்சியும் ஜீவசக்தியும் ஆற்றலும் மிக்கது. ''யாரோ எதிரிலிருந்து பேசுவது போன்ற பிரமையைத் தருவது வ.ரா.வின் நடையென்று'' சுட்டி பாராட்டியது முற்றிலும் பொருத்தமானது.

ஆனால் இவர் மறக்கப்பட்ட மாமனிதர்களில் ஒருவர்.

படிப்பகம்

# சிலேட்டு

www.padippakam.com

மீ. விஸ்வநாதன்

"ஏலேய் பாண்டி... இங்க வாலே...அங்க என்னல கிளிச்சுக்கிட்டுருக்க....... இந்த மொத்த சிலேட்டுகளுக்கும் சுத்தம்மா கரிதடவுல; நாளக்கி பட்ட பகல்ல மந்திரி வறப்போறாரு. அதுக்குத்தான் இந்தபாடு........ சீக்கிரம்.

"அப்போவ்......நானும் மந்திரியப் பாக்க வரட்டா? ......"

'ஒனக் கென்னத்துக்குலஇந்த கெட்ட புத்தி...ஒளுங்காப் போய் வேலயச் செய்லே...ஐநூறு சிலேட்டுக்குச் சட்டமடிச்சகரி பூசி நம் பொளப்பு நடக்கணுல்ல. சிலேட்டு நல்லா இருந்திச்சின்னா மந்திரி நம்மக் கூப்பிட்டு மாலபோட்டு துண்டு போத்துவாரு போட்டா புடிப்பாங்க. அவங்க பத்திரிகையில மொத்தம் பக்கத்திலயே நம்ம அளகு மூஞ்சியையும் அச்சடிப்பாங்க. அதனால இப்ப புத்திய கடங்கொடுக்காம வேலை சுத்தங்காட்டுலே போ"....... என்று மருது தனது பட்டறையில் வேலை செய்து கொண்டே பள்ளிக்கூட வாசனையே அறியாத ஒரே மகனிடம் வேலை வாங்கிக் கொண்டிருந்தான்.

அவனது பட்டறை அந்த ஊரின் ஒதுக்குப் புறத்தில் வயற்காட்டிற்கும் ரயில்வே லயனுக்கும் நடுவில் அமைந்துள்ள தென்னை, பனை ஓலைகளினால் வேயப்பட்ட, காற்று சுகமாக வந்து கொண்டிருக்கும் ஒரு கூடு போன்ற வீடு. மருது அநேகமாக எல்லா வேலைகளையும் தெரிந்து வைத்திருந்தான். மாட்டிற்குக் காலில் 'லாடம்' அடிப்பதில் இருந்து பள்ளிக் குழந்தைகளின் சிலேட்டுக்குச் சட்டம் அடிப்பது வரை அவனது பட்டறையில் முறையாக ஏதேனும் வேலை நடந்து கொண்டே தான் இருக்கும்.

'என்னலே மருது சுறுசுறுப்பால்ல வேல செய்யுதாய்.. என்ன விசயம்? என்றார் அந்த வழியாக வந்த முதியவர்.

'நாளைக்கு நம்மூர்ல ஒரு புதுப்பள்ளிக்கூடம் தெறக்கப்



படிப்பகம்

www.padippakam.com

போறாக அண்ணாச்சி, அந்தப் பள்ளிக்கூடம் போற சின்னப் புள்ளைங்களுக்கு நாளைக்கு நடக்கற விளாவுலேயே நம்ம மந்திரி வந்து இந்த அத்தனை சிலேட்டுகளையும், குச்சியும் கொடுத்து வாழ்த்தப் போறாராம். அதுக்குத்தான் இத்தன வேகங்காட்டி வேலை செய்யறேன்''

''அப்போ ஒனக்கு ஏகக் கொள்ளதான்னு சொல்லு...... வெளுத்துக் கட்டுல மருதுன்னு சிலேட்டுக்களுக்கு கரிதடவிக் கொண்டிருப்பவனிடம் ஒலிபெருக்கியைப்போல் ஒலித்துக் கொண்டே சென்றார் அந்த முதியவர்.

அந்த சின்ன அழகிய கிராமத்தில் எழுத்துப் படிப்பு வாசனையே இல்லாத மக்கள்தான் ஏராளம். இதை மனதில் வைத்துக் கொண்டுதான் அரசாங்கமே அங்கு ஒரு துவக்கப் பள்ளிக்கூடம் முதலில் துவங்கத் திட்டம் தீட்டியது. அதற்கான முறை விழாவிற்கு மந்திரியே நாளைய தினம் வர இருக்கின்றார். அவரே இந்தப் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்து, குழந்தைகளுக்குக் கரும்பலகைகளையும், எழுதுவதற்குரிய குச்சியையும் கொடுத்துவிட்டு, அவர்களது அறிவுக் கண்களையும் நாளை முதல் திறந்துவிடப் போகின்றார்!

★ ★ ★

''ஏலேய் எல்லாரும் ஓடிவாங்கலே .. மந்திரி காரு போவுது... போலீஸ் வேன் போவுது! அடடேய் நம்மூரு பெரியசாமியும்ல போறாரு...வாங்கலே சீக்கிரம்...

பள்ளிக்கூடத்தின் திறப்பு விழா அநதப் புதிய பள்ளிக்கூடத்திலேயே நடக்கின்றது.

''அன்புக்குரிய தாய்மார்களே, பெரியோர்களே குழந்தைச் செல்வங்களே இப்பொழுது இந்த விழாவிலே நமக்கெல்லாம் அறிவுக் கண்ணைத் திறந்துவிட எண்ணி வருகை புரிந்திருக்கின்ற நமது மாண்புமிகு 'ஐயா' அவர்களை, இந்த விழாவினைத் தொடங்கி வைத்து, பள்ளியையும் திறந்து வைத்து, நம்மூர் ஏழைக் குழந்தைகளுக்கெல்லாம் 'கரும்பலகை'களை வழங்கி வாழ்த்த வேண்டும் என்று மெத்தப் பணிவுடனும். மிகுந்த அன்புடனும் அழைக்கின்றேன்', என்று அந்த ஊரின் எம்.எல் ஏ அவர்கள் அழைத்து, கரஒலிகளுக்கிடையே மலைபோல் ஒரு மாலையை எடுத்து வந்து ஊர் மக்களின் சார்பாக மந்திரியின் கழுத்திலே அந்த எம்.எல்.ஏ'வே போட்டார். மந்திரியையே அந்த மாலை மூடிவிட்டதுபோல் இருந்தது.

''ஏய் சீக்கிரம் இந்த மாலைய எடுங்கப்பா... —மூச்சு முட்டுதுன்னு'' மந்திரி முணுமுணுத்த



படிப்பகம்

www.padippakam.com

போது இரண்டு பரிவாரங்கள் ஓடியே வந்து அந்த மாலையைத் தோளில்தாங்கிக்கொண்டு மேடைக்குப் பின்னால் ஓடியது. மந்திரி அந்த ஊர் குழந்தைகளுக்கு இலவச சிலேட்டும் குச்சியும் வழங்கத் துவங்கினார்.

'வாங்க... இப்படி மெள்ள வாங்க....வந்து பணிவாய் போயி நம்ம 'ஐயா'கிட்ட சிலேட்டும் குச்சியும் வாங்கிக்கங்க' என்று குழந்தைகளுக்கு வழி காட்டினார் மேடையில் உள்ள ஓர் உள்ளூர்.

''ஒன்பேரு என்னப்பா?

''அறிவுமணி''.

''என்ன படிக்கிறே?''

''என்னன்னே தெரியிலே ஐயா.''

''சரி சரி நல்லாரு போ.''

''இதுபோன்ற பொன்னான 'விளாக்கள்' மூலமாக ஏழைக் குழந்தைகளுக்காக அவர்களது அறிவு வளர்ச்சிக்காக நமது அரசு நல்ல பல புதிய திட்டங்களைச் செய்து வருகின்றதை நாடு நன்கு அறியும். அதன்படி இந்த ஆண்டும் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் சுமார் 'ஐநூறு' கரும்பலகைகள் வீதம் சுமார் 'பத்தாயிரம்' பள்ளிகளுக்கு இத்திட்டத்தைத் தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இங்கே உங்களுக்குத் தரப்பட்ட கரும்பலகை ஒன்றுக்கு சுமார் பத்து ரூபாயும், குச்சிக்கு சுமார் ஒரு ரூபாயும் சேர்ந்து மொத்தம் 'பதினோரு ரூபாய்' நமது அரசாங்கத்திற்குச் செலவாகின்றது. என்வே நீங்கள் பொறுப் புணர்ந்து படித்து வருங்காலத்தை வளமையாக்க வேண்டும் என வாழ்த்தி விடை பெறுகின்றேன்...நன்றி...வாழ்க நாடு! வளர்க மக்கள்...வணக்கம்,''

மந்திரி தனது பேச்சை முடித்தபோது, அறிவுக்கண்ணை திறந்துவிட்ட ஞான மணி என்று ஒரு குரல் கூட்டத்தில் இருந்து வானைப் பிளக்க, உடனே அனைவரும் 'வாழ்க வாழ்க' என்று ஒலி பெருக்கினர்.

காரில் ஏறிக்கொண்டு அந்த ஏழை பங்காளன் தனது இருப்பிடமான அரசாங்க 'கெஸ்ட் ஹவுஸ்' பங்களாவுக்கு விரைந்து பயணமானார்.

''ஏலேய் எங்கலே நாடு வாளுது, மக்கள் வாளறாங்க. இந்த மந்திரிகளும், மத்தவங்களும் அவங்க கொளந்தைகளும் தானேலே வாளுது....நல்லாப் பேகசறானுங்க ... அடச் சீ'... என்று மருதுவின் நண்பர் மருதுவிடம் குமுறினான்.

''என்ன அண்ணாச்சி ஒரு சிலேட்டுக்கும் ஒரு குச்சிக்கும் 'பதினோரு ரூபாய்ன்னுல கணக்



படிப்பகம்

www.padippakam.com

போடறாரு மந்திரி ஆனா மூனு நாளைக்கு முன்னால அந்த மந்திரியோட ஆளு வந்து ஒரு சிலேட்டுக்கும் குச்சிக்கும் மொத்தமே 'மூனு ருவாய்க்கு மேல போவக்கூடாதுன்னு சொல்லி, அதுக்கு மேலே போகும்னா நீ செய்ய வேண்டாம்னு போனானேய்யா...

புளுகுன்னிப் பயலுவ...

ஆனா இப்ப இந்த மேடையில் பதினொரு.வோய்ன்னுல' மந்திரி கணக்குப் போடறாறு. ஒரு சிலேட்டு ஒரு குச்சியில் எட்டு வோய்க் கொள்ளையா? அனல் கக்கிவிட்டு மருது பக்கத்தில் உள்ள அண்ணாச்சியைப் பார்த்தான்.

''ஆமாம்லே நமக்கு நல்லா வேணும். நாம ஒரு ஓட்டுக்கு 'பத்துருபாய்' அவங்க கிட்ட கைநீட்டி வாங்கினம். அதான் அவன் ஒரு சிலேட்டுக்கு பதினொரு ருபாய்ன்னு வட்டி போட்டு எடுத்துக்கிட்டான். எல்லாக் கணக்கும் 'சீ' கணக்குத் தாம்லே ....மொதல்ல நம்ம மூளைய தீய வைக்கனும்'' என்று அந்த அண்ணாச்சி தனது துண்டை உதறித் தேளில் ஏற்றிக் கொண்டு நடந்தார்.

'ஏலே' பாண்டி இந்த மிச்ச சொச்ச'சிலேட்டு' எல்லாத்தயும் எடுத்து நொறுக்கி சாக்கடைல போடுல... இவனுகளெல்லாம் என்னிக்குத் திருந்தறானுவளோ அன்னிக்குத் நாம 'சிலேட்டுக்கு நல்லா கரிபூசிக் கொடுப்போம். இப்ப அவங்க தான்லே நம்ம மூஞ்சில கரியப் பூசிட்டுப் போயிட்டானுவ... போலே போ நமக்கு சத்தியம் தான் படிப்பு என்று மருதுமனம் நொந்தவாறே தனது பட்டறையின் ஓலையில் மாடுகளுக்குக் காலில் அடிப்பதற்காக அனலில் காய்த்து கொண்டிருந்த லாடத்தை' ஒருபெரிய சம்மட்டியால் ஓங்கி அடித்துச் சரி செய்த போது அதில் இருந்து ஒரு அனல் துண்டு வான் நோக்கிப் பறந்து சென்று ரயில்வே லயனின் இடைவெளியில் பரந்து கிடைக்கின்ற கருங்கற்களின் மீது விழுந்து சிதரியது.

---

## அறிவிப்பு

தாமரை மாவட்ட மலர் விளம்பரங்களுக்கு காசோலை வாங்கும்போது இனிமேல் தாமரை என்ற பெயரிலும் வாங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி



படிப்பகம்

www.padippakam.com

# நானும் உன்னை வாழ்த்துகிறேன்

பரிமளமுத்து

சூரியனே!
ஏழை உழவனுக்கு
உன் ஒளிக் கதிர்கள் மட்டுமே
இங்கு இலவசமாய் கிடைக்கிறது.
ஏரும்சொந்த மில்லை
எருதும் சொந்தமில்லை
பூமியும் சொந்தமில்லை
புது நெல்லும் சொந்தமில்லை

நீ அந்தகனல்ல
நான் புதிதாய் செய்திகள் சொல்லிவிட
உன்பார்வையின் கீழ்தான்
பாட்டாளி உழவனின்
நேற்றையும் இன்றையும்
நாளையும் கூட நாடகமாகிறது
மாற்றங்கள் எதுவும் நடக்கவில்லை.

உன் கரங்களை உயர்த்து
என்பவர் கூட



படிப்பகம்

www.padippakam.com

கரங்களைக் குவிக்கவே
கற்றுத் தருகிறார்கள்.

சூரியனே!
தாவரங்களில் கூட
பச்சையத்தை உண்டாக்கும் உன்னால்
ஏன் பட்டுப் போன மானிடத்தைத்
துளிர்க்கச் செய்ய இயலவில்லை,
நீயும் கூட தீய்க்கின்றாய்
நிதானமாக எரிக்கின்றாய்.

ஆதியானவனே!
ஆதவனே
உனக்கு வருடம் ஒரு முறை
பொங்கலிடக் கூட
நெல்மணிகளைத் தேடும்
ஏழை உழவரை வாழவை
அன்று நானும் உன்னை வாழ்த்துகிறேன்.

---

இளங்குருத்துகள் எழுதிய கவிதைகள்

## விபரீதம்

உண்மையான அன்பு ஆபத்தை தரும்!
போலியான அன்பு காதலை தரும்!
உண்மையான பண்பு பாசத்தை தரும்
போலியான பண்பு மோகத்தை தரும்
உண்மையான காதல் அன்புக்கு பதிலாய்
போலியான காதல் வாழ்க்கை அமைகிறது.

அ. ப. கவிதா



படிப்பகம்

www.padippakam.com

# கீறல்கள்

முகில்

பக்கத்தில் மச்சக் காளை கோணை வழிய மல்லாந்து கிடக்கிறான். பொழுதெல்லாம் அவனுடைய கிழட்டு ரிக்ஷாவை எத்தனை மிதி மிதிச்சானோ. அழுக்கு டிரவுசருக்கு கீழே ஓய்ந்து கிடக்கும் அவன் கருப்புத் தொடையில் தன பிஞ்சுக் கரங்களை 'விசிறிப் போட்டுக் கொண்டு கலாவும் தூங்குகிறாள்.

திரும்பத் திரும்ப கண்ணை மூடிப் பார்த்தும் பாமாவுக்கு தூக்கம் வரவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிந்து விடும். இதற்கு முன் இப்படி இரவை முழுசாகத் தொலைத்தது அந்தப் படுபாவி ராசாங்கம் துண்டித்துக் கொண்டு போன அன்றுதான். சுத்தமா மறந்தாச்சின்னு எத்தனையோ முறை தீர்மானித்தும் மறுபடி மறுபடி அவன் வத்து வந்து கொல்லுகிறான். மனசை சுருக்கென்று குத்துகிறான். இந்த வேதனையைவிட இன்று மாலை ராஜம் வீசிய ஈட்டிதான் பாமாவை உலுக்கியெடுத்துக் கொண்டிருந்தது. "அந்தத் தேவிடியா கையில யாரு கொடியக் குடுத்தா" என்று என்னமாய் கத்தினாள்! அருகில் நின்றவர்கள் ஓடிவந்து, உயிர் நரம்பையே பிய்த்தெடுத்த மாதிரி, கொடியைப் பிடுங்கிக் கொண்டார்கள். உடல் நடுங்கி வெல வெலத்து வெடித்துக் கிளம்பிய பாமாவின் அழுகை 'மகளிர் மன்றம் வாழ்க' சத்தத்தில் காணாமல் போய் விட்டது.

* * *

கலா அப்போது கைக் குழந்தை. டீக்கடை மாணிக்கம் தாத்தா தான் மகளிர் மன்றத்துக்கு அழைத்துப் போனவர். மன்றத் தலைவி ராஜாத்திடம் அவரே முழு விபரங்களையும் சொன்னார். அனுதாபத்தோடு எல்லாத்தையும் கேட்ட பிறகு பாமா விசாரிக்கப் பட்டாள்:

"கல்யாணம் ஆயி எவளவு நாளாச்சி?"

"மூணு வருஷம் ஆச்சிங்க"

"ஒம் புருஷனுக்கு கெட்ட சகவாசம் உண்டுங்குறது முன்னாடியே தெரியுமா?"

"தெரியுங்க. அத நான் கேட்டேன்னுட்டு அடி அடின்னு



படிப்பகம்

www.padippakam.com

அடிச்சாரு. தாத்தா மட்டும் வந்து தடுக்கலேன்னா அன்னக்கி செத்தே போயிருப்பேன்''

''அப்பா அம்மால்லாம் எங்கம்மா இருக்காங்க''

அவுங்க உசுரோடு இருந்தா இவன் இம்மாங் ஆட்டம் போட்டுருப்பானா· என்னை அனாத நாயா அலைய உட்டுட்டு ரெண்டு பேரும் போய் சேந்துட்டாங்க''

இதைச் சொல்லும் போது பாமா கண்களில் நீர் திரண்டது. அழுது விட்டாள்.

''ஓம் புருஷன ஒன்னோட சேத்து வச்சா சந்தோஷந்தான?'' ராஜம் கேட்டதும் இது சாத்தியமா எனும் குழப்பத்தில் பாமாவின் முகம் மாறியது. பதிலொன்றும் சொல்லவில்லை.

''அம்மா கூப்புடுறாங்கன்னா அலரியடிச்சிகிட்டு ஓடியார மாட்டான்? இவன மாதிரி எத்தன பேர் பாத்திருப்பாங்க. பாமாவுக்கு இனிமே தான் நல்ல காலமே பொறக்கப் போவுது''— தாத்தா.

''அவுரு கட்டுப்பட்டு வருவாரான்னு எனக்கு சந்தேகமா இருக்குங்க'' என்றாள் பாமா. சொன்ன விதம் நம்பிக்கை முழுசும் வடிந்துவிட வில்லை என்கிற மாதிரி இருந்தது.

''நீ ஒண்ணும் கவலப்படாத.... ஓம் புருஷன இழுத்தாந்து ஒன்னோட வாழ வைக்கிறது ஏம் பொறுப்பு. போதுமா?'' ஒரு நீதிபதியைப் போல் தீர்மானமாக சொல்லிக் கொண்டே ராஜம் சேரிலிருந்து எழுந்து மேஜை நடுவில் சிதறிக் கிடந்த நோட்டுகளை ஒன்று சேர்த்து சின்ன கட்டு போட்டார். அதை அறை ஓரத்தில் நின்று கொண்டிருந்த பெஞ்சில் வைக்க நடந்த போது, பர்மா பஜார் குதிஉயரச் செருப்பு சந்தமெழுப்பியது. மடிப்பு குலையாத உயர்ரக சேலையும் ஒருவித சின்னஓசையுடன் தன் பெருமையை அறிவித்துக் கொண்டது. ராசாங்கம் திரும்பி வந்து சுகமாய் மீளப்போகும் வாழ்க்கையைப் பற்றிய ஓராயிரம் கனவுகளுடன் பாமா வீட்டுக்குப் புறப்பட்டாள்.

மகளிர் மன்ற சாதனைகளையெல்லாம் போகும் வழியில் தாத்தா சொல்லிக் கொண்டே வந்தார், கல்யாணத்தப்ப தர்றதா சொன்ன பணம் மாமனார் குடுக்கல்லேன்னுட்டு ஒரு காலேஜி வாத்தியாரு பொண்டாட்டிய நெருப்பு வச்சி கொளுத்துனதையும் மகளிர் மன்றத்துக்கு இது தெரிஞ்சி பெரிய வெவகாரமாயி இப்ப அந்த வாத்



படிப்பகம்

www.padippakam.com

தியாரும் அவுங்க அம்மாவும் ஜயில்ல கம்பி எண்ணுறதைப் பத்தியும் தாத்தா விவரித்த போது பாமாவுக்கு ஆச்சரியமா இருந்தது. ஊட்ல திருடு போச்சின்னு போலிஸ் ஸ்டேசனுக்கு ஒரு பொம்பள கம்ப்ளெய்ண்ட் குடுக்க போச்சி. திரும்பி வர்ல ரா முச்சூடும் ஸ்டேசன்லே விசாரன நடந்திச்சாம் காலைல ஊட்டுக்கு வந்து ஒடம்பெல்லாம் வலிக்குன்னு படுத்ததுதான். போயிருச்சி. போலிஸ் ஸ்டேஷனியே ஒருகலக்கு கலக்கி புட்டாங்கல்ல! இன்ஸ்பெட்டர், ஏட்டு, தோலான் துருத்தி எல்லாம் சஸ்பண்டு. அதுலருந்து மகளிர் மன்றம்னா இந்த ஏரியாவுல தனிமரியாததான் இவுங்க தலையிடுறாங்கண்ணா சம்மந்தப்பட்டவங்க பயப்புடுறாங்க. இது போல ஏராளமான விஷயங்களை தாத்தா சொல்லச் சொல்ல ராஜம் ஒரு மிகப் பெரிய தலைவியாக பாமாவின் நெஞ்சில் இறங்கினார்.

சாக்குப் பந்தலைச் சுற்றி கலா மண்ணை அளைந்து விளையாடுவாள். அவளையும் ஒரு பார்வை பாத்துகிட்டு வாடிக்கையாளர்கள் எந்த பூவக் கேக்குறாங்களோ அந்த சரத்த எடுத்து விடுவ டுன்னு எண்ணி பாதி பிளேடால அறுத்து இலையில் கட்டிக் கொடுத்துவிட்டு காசை வாங்கிப் போட்டுக் கொள்ளும் லாவகம் அந்த கடைத்தெரு முச்சந்தியில் வேறு யாருக்கும் வராது. காலையில மார்க்கட்டக்குப் போயி ஏலம் எடுத்து பூக்கூடையைக் கொண்டு வர்ரது தான் அவளுக்கு பெரிய சிரமமாக இருந்தது, கலாவை கையில் கிடுக்கிக் கொண்டு டவுன் பஸ் நெரிசலில் கூடையைக்கொண்டு வந்து சேர்ப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிடும். ராத்திரி எட்டானாலும் ஒன்பதானாலும் பூவெல்லாம் வித்து தீர்ர வரைக்கும் வீட்டுக்குப் போகமாட்டாள். ஒரு சில நாளில் மீந்து போவதும் உண்டு. மகளிர் மன்ற தொடர்பு கிடைத்த பிறகு ஆர்ப்பாட்டம், ஊர்வலம் இருக்குற நாட்களில் சாயந்திரம் நாலு அஞ்சிக்குள்ள வியாபாரத்த ஏறக்கட்டி விடுவாள். பாதிப் பூவ அப்பிடியே கொண்டு போயி வீட்ல தூங்கப் போட்ட நாட்களும் பல உண்டு. பாமாவின் குரல் மட்டும் ஊர்வலத்தில் தனியாகக் கேட்கும். அவள் மனசின் அடியாழத்திலுள்ள சோகமும் கோபமும் கலந்து கனக்கும். அவளுக்கு முன்னாடியும் பின்னாடியும் அணிவகுத்துப் போறவங்க வாய்க்குள்ளியே மொணவிகிட்டு சிரிச்சி சிரிச்சி பேசிகிட்டு போறதப் பாத்தா பாமாவுக்கு எரிச்சலா யிருக்கும். செல பேரு கொண்டை கலைஞ்சிருக்கான்னு தொட்டு தொட்டு பாத்துகிட்டு



படிப்பகம்

www.padippakam.com

ராஜம் கண்ணுல பட்ற மாதிரியே நடக்குறதப் பாக்கவும் இவளுக்கு சகிக்காது. ஊர்வலம் முடிஞ்ச கையோட தலைவர்கள் பேசு வாங்க. ஊர்வலமா வந்தவங் பாதி பேரு கும்பல் கும்பலா டீ குடிக்க போயிடுவாங்க, இவ மட்டும், உக்காந்தா கூட்டம் முடிஞ்சிதான் எழுந்திரிப்பாள். தலைவர்களின் ஒவ்வொரு சொல்லையும் உற்றுக் கவனிப் பாள்.

* * *

அன்னிக்கி பாமா எப்போதும் போல் முதல் வரிசையில் சம்மண மிட்டு உட்கார்ந்திருந்தாள். தூக் கத்துக்கமுத கலாவை வலது தொடைமீது கிடத்தி விசுக்கு விசுக்கென்று காலை மேலும் கீழும் ஆட்டிக்கொண்டே, பட் டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று தொடங்கி உச்சஸ்தாயிக்கு தாவிக் கொண்டிருந்த தலைவ ரின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு பத்து வயசுப் பாப்பா வெளயாட்டுத் தனமாஓடிவந்துத்தலைவர் அம்மா கூப்பிடுறாங்கன்னு சொல்லி விட்டுஓடி வந்திருச்சி. கலாவை தோளில் சாய்த்துக் கொண்டு பாமா எழுந்து போனாள். நாலைந்து பேரோடு டீ குடித் துக் கொண்டிருந்த ராஜம் அதட்டலாகக் கேட்டாள்.

"ஒன்ன யாரு ஜம்பமா முன் னாடி போயி உக்காரச் சொன் னது?"..........

"இந்த வெளுத்துப் போன கந்தல உட்டா வேற சேலயே இல்லையா ஒங்கிட்ட? காட்டன் சேலய கட்டிகிட்டு நடக்குறியே காலு சிக்குல?"..........

"எம்மாங் காசு சம்பாரிக்குற —அதயும் இதயும் வாங்கி வவுத் துல கொட்டிகிட்டா போதுமா. பாலியஸ்டர்ல ஒண்ணு எடுத்து கட்டிகிட்டுவரக் கூடாது."....

"போ போ பின்னாடி போயி உக்காரு. அடுத்த தடவ இந்த சேல ஏங்கண்ணுல படபுடாது ஆமாங் சொல்லி புட்டேன்"

பாமாவுக்கு அழுகை பொங் யது. ராஜம் அதட்டிய போது பக்கத்தில் நின்றவர்களின் ஏளனப் பார்வை ஆத்திர மூட் டியது. பேசாமல் திரும்பி வந்து கடைசி வரிசையில் நின்றவாறு தலைவர்களின் பேச்சைக் கேட்டு விட்டு கூட்டம் முடிந்த பின் வீட்டுக்கு வந்தாள். ஒரு வேலையும் ஓடவில்லை. விஷய மெல்லாம் சொல்லக் கேட்ட தாத்தா ப்ச் என்று சப்புக் கொட்டியதைத் தவிர வேறொன் றும் சொல்லாதது வருத்தமாயி ருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அன்று மார்க்கட் லீவு. முதல் நாள் மீதியான பூ காலை பத்து மணிக்கெல்லாம் விற்றுத் தீர்ந்தது. ஒரு வாரத்துக்கு முன்னால ஏங் விஷயம் என்னாச் சிண்ணே தெரியிலியே என்று தாத்தாவைக் கேட்ட போது அவுங்களுக்கு இருக்குற வேலயில இத மறந்திருப்பாங்கம்மா... நீயும் நேரம் கெடைக்கிறப்போ ஞாபகப் படுத்துணுமல்ல என்று அவர் சொன்னது நினைவுக்கு வரவே மன்ற அலுவலகத்துக்குப் போனாள். ராஜம் பெஞ்சில் ஒருக்கனித்து தூங்கிக் கொண்டிருந்தார். இப்போ தொந்தரவு செய்யக் கூடாது, விழிக்கட்டும் என்று பாமா அறை மூலையில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள். கலா அம்மாவின் பிடியிலிருந்து நழுவி அறையின் ஒரு கோடிக்கும் மறு கோடிக்கும் ஓடி ஓடிக் காட்டினாள். ஏங் ஓட்டம் எப்பிடி என்று கேட்பது போல பாமாவைப் பார்த்து சிரித்தாள். உஸ்ஸ் என்று ஆட்காட்டி விரலால் வாயை மூடி சத்தம் போடக் கூடாதென்று பாமா எச்சரித்தும் கலா அடங்க மறுத்தாள். முன்னிலும் வேகமாக ஓடி முன்னிலும் பலமாச் சிரித்தாள். கலாவின் சிரிப்பு சத்தம் ராஜத்தின் தூக்கத்தைக் கலைத்து விட்டது. விழி கசக்கி அலுப்பாய் எழுந்து உட்கார்ந்ததும் வணக்கம்மா என்றாள் பாமா.

''என்னா வேணும்?''

''சும்மா பாத்துட்டு போலாம்ணு....''

''சும்மா பார்த்ன்ட்டுப் போறதுக்கு இது என்னா சத்தரமா சாவடியா? விஷயமிருந்தா வரணும். இப்படி அனாவசியமா வந்து தொல்ல பண்ணக் கூடாது தெரிஞ்சிதா?''

''திங்கிற புள்ள ஒண்ண வச்சிகிட்டு ரொம்ப கஷ்டமா இருக்கும்மா. அவ்ரு கூப்புட்டு விசாரிக்கரேன்னு சொன்னீங்க. அதாங் என்னாச்சின்னு கேட்டுட்டு போலாம்னு வந்தேன்''

''ம்.... ஒங் அவசரத்துக்கு நாங்க ஒண்ணும் ஆட முடியாது. இந்த மாதிரி கேசுல்லாம் ஒரு வருசமும் ஆவும்''

''அவுரு என்ன உட்டுட்டு போயி நாலு வருசம் ஆச்சிம்மா''

''நாலு வருசம் முடிஞ்சி போச்சி நீங்க ஏன் இன்னும் கேக்கலண்ணு கேள்வி கேக்க வந்துருக்கியா? பத்து வருசங்கூட ஆவும். விவாகரத்து பெட்டிசன் போட்டுட்டு எத்தன பேரு வருசக் கணக்கா கோர்ட்டுக்கு அலையிறாங்க தெரியுமா?''

ஒரு பெண் பதட்டத்துடன் ஓடி வந்து, அம்மா.... அண்ணா நகர் குடிசையெல்லாம் பத்தி



படிப்பகம்

www.padippakam.com

கிட்டு எரியுதுன்னு ராஜத்திடம் சொன்னாள். அந்தப் பெண்ணை மகளிர் மன்ற ஊர்வலத்தில் பாமா பார்த்திருக்கிறாள். அய்யோ பாவம் என்று பாமா எழுந்து கொள்ள கலாவும் புறப்படத் தயாராய் அம்மாகையைப் பிடித்துக் கொண்டாள். ராஜம் உட்கார்ந்த இடத்திலிருந்தே எந்த அண்ணா நகர் .எப்படி தீப் பிடிச்சிதுன்னு அந்தப் பெண்ணை நிதானமாக விசாரித்தார். அவள் பொறுமையிழந்து பட பட வென எல்லாத்தையும் சொன்னாள். சரி கொஞ்சம் இருன்னுட்டு பக்கத்து அறைக்குள் ராஜம் நுழைந்தார். ஐந்து நிமிடம்... பத்து நிமிடம்.. வெளியே வர வில்லை. அப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சு பூப் போட்ட கர்சீப்பை இடிப்பில் சொருகிக்கொண்டே முகமெங்கும் பவுடர் நிறைத்து ராஜம் வெளிப்பட்டார். பாமாவுக்கு ச்சே என்றாகி விட்டது. பொறப் படுங்க போவோம்னு அந்தப் பெண்ணோடு ராஜம் கிளம்ப பாமாவும் பின் தொடர்ந்நாள். முதல் சந்திப்பில் படிந்த ராஜத்தின் பிம்பம் பாமாவின் மனசிலிருந்து சரியத் தொடங்கியது. பெருமைக் குரியதாய் தெரிந்த மகளிர் மன்ற அலுவலகம் சாதாரண இடமாய் நிறம் மாறியது.

* * *

முதலில் பாமா பஸ்ஸிலிருந்து கீழே இறங்கினாள், படியை ஒட்டிய நீள சீட்டினடியில் இருந்த கூடையை அசைத்து அசைத்து வெளியில் இழுத்தாள். தரையில் வைத்துவிட்டு கையை நீட்டு முன் தானாக இறங்கிய கலா தடுக்கி பொத்தென்று கீழே விழ ஒனக்கென்னாடி அம்மாங் அவசரம்னு பாமா கலாவை வாரியெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள்.

கலா முழங்காலை உதறிக் கொண்டு அழவே கீழே இறக்கி விட்டாள். முட்டியில் சிராய்ப்பு லேசாய் ரத்தம் படர்வதைப் பார்க்க பாமவும் அழுதாள் அப்போது உரசின மாதிரிரிக்ஷாவை நிறுத்தி ஏறி உக்காரும்மா என்றான் மச்சக்காளை. அவனே கலாவைத் தூக்கி சீட்டில் கிடத்தினான் கூடையை சீட்டுக்கு முன்னால் உள்ள பள்ளமான இடத்தில் சாய்த்து வைத்தான் பாமா விசும்பியவாறே ஏறி உட்கார்ந்து கலாவின் இரண்டு கால்களையும் மடியில் தூக்கி வைத்துக் கொண்டாள். திரும்பிக் கூட பார்க்காமல் மச்சக்காளை வேக வேகமாக அழுத்தினான். பெரியாஸ்பத்திரி கேட்டில் நிறுத்தி கலாவை தூக்கிக் கொண்டு உள்ளே போனான். பாமா பின்னாடியே ஓடினாள். டாக்டரிடம் காண்பித்துவிட்டு வேறொரு அறைக்கு கொண்டு போய் கட்டுப் போட்டுக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

வெளியே கொண்டு வந்தான். கலாவை ரிக்ஷாவில் படுக்க வைத்துவிட்டு பக்கத்து பொட்டிக் கடையில் குச்சி மிட்டாய் இரண்டு வாங்கிக் கொண்டு வந்து கலா கையில் கொடுத்தான். இதற்குள் பாமா ஏறி உட்கார்ந்து விட்டாள். ரிக்ஷாவைத் திருப்பி ஏறி உட்கார்த்து மெதுவாக மிதித்துக் கொண்டே கேட்டான்,

''வூடு எங்க?''

பாமாவால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் முதுகையே வெறித்துப் பார்த்தாள். முண்டா பனியன் மறைக்காமல் விட்டிருந்த கழுத்துப் பின்புறம் கருப்பாய் திரண்டிருத்தது. ரோடுபிரியும் இடத்தில், வூடு எங்கண்ணு மீண்டும் கேட்டான். நேரா போங்கண்ணு மெதுவாய்ச் சொன்னாள் பாமா குடிசைமுன் ரிக்ஷாவை நிறுத்தினான். பாமா இறங்கி படலைத் திறந்து உள்ளே போய் பாயை விரித்தாள். அவன் கிடத்தினான். கூடையும் உள்ளே நுழைந்தது. கொழந்தய ஜாக்கிரதையா பாத்துக்குங்கண்ணுட்டு புறப்படத் திரும்பினான். மாமா என்று கலா அழ ஆரம்பித்தாள். அருகில் உட்கார்ந்து தலையைக் கோதி விட்டான் அழக்கூடாது......

மாமா அப்புறமா பாப்பேன். இப்ப நல்லா கண்ணமூடித் தூங்கணும் என்னா என்று கூறி எழுந்தான். நான் போய்ட்டு வர்ரங்க என்றான். பாமா கைகளைக் குவித்து கும்பிட்டாள், ரிக்ஷா நகர்ந்து விட்டது. பாமா முழங்காலிட்டு உட்கார்ந்தவள் வெகு நேரம் எழுந்திரிக்கவில்லை. ரொம்பநன்றிங்கண்ணு சொல்லாம விட்டுட்டமேன்னு வருத்தப்பட்டாள். ஒரு டீயாவது வாங்கித் தந்திருக்கணும் அவுரு தான் காசு கேக்கலண்ணா நானாவது தந்திருக்கணும். குடுத்து அவுரு வேண்டாம்னு சொன்னா அது வேற விஷயம். என்னென்னவோ நினைத்தாள்.

மறுநாள் காலை நேற்று முடியாத பூவை கடைவிரித்தாள் கலா அம்மா பக்கத்திலிலேயே மரப்பெட்டியில் உட்கார்ந்து கொண்டாள் பொழுதுக்கும் வியாபாரம் சரியில்லை. கடையைக் கட்டும் நேரம் மச்சக்காளை ரிக்ஷா வந்தது. அய் மாமான்னு கலா கையசைத்தாள் மிக்சர் பொட்டலமொன்றை கையில் கொடுத்து அலாக்காக தூக்கிக் கொண்டான். முழு பாரத்துடன் ரிஷா குடிசைக்கு விரைந்தது. இறக்கி விட்டபின்புறப்பட்டவனை கலா விடவில்லை. கைகளைப் பிடித்து உலுக்கிக் கொண்டே சிணுங்கினாள்.



படிப்பகம்

www.padippakam.com

''இறங்கி சாப்டுப் போங்களேன்''

சொல்லும் போதே பாமாவுக்கு நெஞ்சமெல்லாம் நிறைந்தது. அவன் உதவிகளுக்கெல்லாம்' சேர்த்து நன்றி சொல்லி விட்ட மாதிரி உணர்ந்தாள்.

மச்சக்காளை தரையில் உட்கார்ந்து கலாவோடு கொஞ்சினான். அவனுக்குத் தெரிந்த ஆனா ஆவன்னா சொல்லிக் கொடுத்தான். காக்காவ ஏமாத்தி நரி வடையத் தூக்கிகிட்டு ஓடுன கதையச் சொன்னான். கலாவுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

சுறுசுறுப்பாக சமையல் ஆகிக் கொண்டிருந்தது. நேரம் கூடக் கூட பாமாவின் படபடப்பும் அதிகரித்தது. நெஞ்சு தித்திக்கென்று அடித்துக் கொண்டது. தட்டில் சோறு போட்டு கொண்டு வந்து வைத்தாள். கையைக் கூடக் கழுவாமல் மச்சக்காளை பிசைந்தான். கலாவுக்கும் ஊட்டி விட்டுக் கொண்டே நீ சாப்டுல என்றான் இவ்வளவு வஞ்சையோடு யாரிவளைக் கடைசியாகக் கேட்டார்களோ! நெஞ்சு குளிர்ந்தது. நான் அப்புறமா சாப்டுறேன் என்றாள்.

மச்சக்காளை புறப்பட ஆயத்தமானான் மீண்டும் கால சிணுங்கினாள் நீபோய் தூங்கு .. நல்ல புள்ள இல்ல ..போம்மா என்று பாமா தாஜா செய்தும் அது பலிக்கவில்லை. சாப்பிட்ட இடத்துலியே போர்வையை விரித்து கலாவை படுக்கவைத்து இவனும் ஒருகளித்து சாய்ந்து மெது பாகத் தட்டிக் கொடுத்தான். இவன் இடுப்பின்மீது கை போட்டுக் கொண்டு கலா கண்ணயர்ந்தாள். அதற்குள் அடுப்படி பக்கமாக திரும்பி உட்கார்ந்து பாமாவும் நாலைஞ்சி கவளத்தை உள்ளே தள்ளினாள். யோசித்த வாறே போய் படலை இழுத்து சாத்திவிட்டு கலா பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள். விளக்கை ஊதியணைத்தாள். பதட்டம் கூடிக் கொண்டேயிருந்தது. மரத்துப் போன உடம்பில் சூடு ஏறியது மல்லாந்து கைகளை தலைக்குப் பின்னால் நீட்டி கோர்த்துக் கொண்டு பிசைந்தாள் தாத்தாவும் ராஜமும் தேவையின்றி நெஞ்சைக் குடைந்தார்கள். ராசாங்கத்தின் முகம் விகாரமாய் தோன்றியது. எவ ஊட்டுல கவுந்து கெடக்குறானோ இனிமேவா வரப் போறான். மன்றத்துக்காரங்களும் முயற்சிஎடுக்கப் போறதில்ல. நெஞ்சு நாலா பக்கமும் தாவித் தாவி முட்டி மோதி திரும்பி வந்தது. கலங்கிய கண்களை துடைத்துக் கொண்டாள். இடையிடையே பெருமூச்சு ட்டாள். அது அனலாய் வெளியேறியது. மனம் இறுதித்



படிப்பகம்

www.padippakam.com

தீர்மானத்துக்கு வந்து சேரவில்லை. ஒருக்களித்தாள் வலது கை விரல்கள் தயங்கித் தயங்கி நகர்ந்து மசக்காளையின் தலை முடிக்குள் புதைந்தது. காத்துக் கொண்டிருந்தவனைப் போல் மச்சக்காளையும் சடக்கென விரல்களை அழுத்திக் கொண்டான். இரவு வித்தியாசமாய் கழிந்தது.

ஆண்டுப் பொது மகாசபை. நிறைய பேர் வந்திருந்தார்கள். எந்த ஊர்வலத்திலும் ஆர்பாட்டத்திலும் பார்க்காத முகமெல்லாம் கணிசமாய் இருந்தது. நாம் கடந்த காலத்தில் செயல்பட்ட முறை, வருங்காலக் கடமைகள், ஸ்தல மற்றும் மேல் மட்ட நிர்வாகிகள் பற்றிய உங்கள் ஒவ்வொருவருடைய கருத்துக்களையும் விமர்சனங்களையும் கட்டாயம் கூற வேண்டுமென ராஜம் பேசி அமர்ந்தார். மூன்று நான்கு பேர் காரசாரமாகப் பேசினார்கள். பாமா எழுந்து போய் தன் கதையைச் சொன்னாள். வார்த்தைகள் கோர்வையாக இல்லை. ஆனால் என்ன சொல்கிறாள் என்பது எல்லோருக்கும் விளங்கியது. ராஜத்தின் மீதுள்ள கோபம் வெளிப்பட்டது. திரும்பி வந்து இடத்தில் அமரும் வரை கரவொலி ஓய வில்லை. நிறைய தலைகள் இவள் உட்கார்ந்த இடம் நோக்கித் திரும்பின. மகாசபைக் கூட்டம் வீர முழக்கங்களுடன் முடிந்தது ஊர்வலத்துக்கு எல்லோரும் தயாரானார்கள். 'காகிதத்தாலும் துணியாலும் வித விதமான படங்களோடு செய்யப் பட்ட கலர்க் "காடிகள் மூங்கில் குச்சிகளின் தலையில் ஏறிக் கொண்டன. நாலைந்து பேர் பாமாவை தனியாக சூழ்ந்து கொண்டு மகாசபையில் பேசிய பேச்சுக்காக பாராட்டினார்கள். ஒரு பெண், நீதான் ஒரு ரிக்ஷாக்காரன சேத்துகிட்டியாம என்று ஏளனமாகக் கேட்டாள். குத்தம் சொல்லவேண்டியதுதான், அதுக்காவ ஒரேடியா தாக்கிப் பேசக் கூடாதுன்னு அவளே மீண்டும் தொடர்ந்தாள். பாமாவுக்கு சங்கடமாக இருந்தது. சோர்வோடு வரிசையில் இணைந்தாள். துணியாலான கொடி ஒன்று அவனுக்கும் தரப்பட்டது. அதை நீவி விட்டு வலது கையில் பிடித்துக் கொள்ள வாட்டமாக சாய்த்துப் பார்த்தாள். அப்போதுதான் ராஜத்தின் அந்தக் சொடூர ஆனை பிறந்தது.

தாத்தாவைப் பார்த்து சொல்ல வேண்டுமென்று நினைத்தாள் அவுங்க மூலமா விவாகரத்து வாங்கி வேற ஒருத்தன கட்டிக் கிட்டா நல்லவ ...இல்லண்ணா தேவிடியாளா? புருஷனப் பலி கொடுத்தவ வேற ஒருத்தன கட்டிககிட்டாலும் தேவிடியா தானா? எனக் கேட்க வேண்டு மென்று நினைத்தாள். அதெல்லாம் அப்படித்தாம்மா இருக்கும். நீதான் பொறுத்துப் போவணும்னு ஏதோ ஒண்ணுக்கு அவர் சொன்னது ஞாபகத்துக்கு வர சலிப்பாய் உணர்ந்தாள் இரவு விலகும் நேரம் மச்சக்காளையை தட்டியெழுப்பினாள். காலங்காத்தாலியே மார்க்கட்டுக்குப் போகலண்ணா நல்ல பூவா கெடைக்கமாட்டேங்குது. ●



படிப்பகம்

www.padippakam.com

# உடல் எடையைக் குறைக்க

டாக்டர் அ. கதிரேசன்

நெல்லை மாவட்டத்தில் உடல் பருமனான நபரைப் பார்த்தால் நீங்கள் எந்தக் கடையில் அரிசி வாங்குகிறீர்கள் என்று கிண்டலாகக் கேட்பதுண்டு. அளவுக்கு மீறி உடல் பெருத்து இருப்பது எல்லா வகைகளிலும் இடைஞ்சல்தான். நடக்கும்போது பெருமூச்சு வாங்கும். துரிதமாக, சுறுசுறுப்பாகச் செயல்பட முடியாது. அதிகமான எடை இருதயப் பணிக்குப் பெரும் பளுவைக் கொடுக்கிறது. இருதயப் பணி பாதிக்கப்படுகிறது. பெருத்த உடலைத் தாங்க வேண்டியிருப்பதால் உடலின் முக்கிய மூட்டுக்களான முழங்கால் மூட்டு எளிதில் அழற்சி அடைந்து சிதைவடைகிறது. மூலம் போன்ற நோய்கள் இவர்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இரத்த மிகு அழுத்தம், இருதயத் தாக்குதல், நீரிழிவு நோய், பித்தப்பையில் கற்கள் போன்றவை இவர்களில் அதிகமாகக் காணப்படுகிறது. அவசர அவசிய அறுவை செய்ய நேர்ந்தால் அறுவையாளருக்கு (Surgeon) மிகவும் சிரமம் உண்டாகும். தட்டையான பாதங்கள் உருவாக நேரிடும். ஆகவே எந்த வகையிலும் வயதுக்கும், உயரத்திற்கும் ஏற்ற உடல் எடை இருக்க வேண்டும் அதற்காக எத்தகைய முயற்சி எடுத்துக் கொண்டாலும் பலனளிக்கும்.

உடல் பெருத்த பெண்மணி, தனது எடையைக் குறைக்க மருத்துவ ஆலோசனை பெற்றாள். தினமும் காலையும் மாலையும் அரை மணி நேரம் குதிரை சவாரி செய்தால் நல்லது என்று டாக்டர் கூறினார். இந்தப் பெண்மணியும் டாக்டர் சொன்ன படியே செய்து வந்தாள். ஒரு மாதம் கழித்து விளைவு குதிரையின் எடை குறைந்ததே ஒழிய



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பெண்மணிக்கு எந்த மாற்றமும் தெரியவில்லை. ஏனெனில் இந்த அம்மாள் குதிரை சவாரி செய்தாளே தவிர உணவைப் பற்றிக் கவலையே படாமல் நன்றாக வயிறு புடைக்க சாப்பிட்டு வந்தாள், இதன் பாடம் என்னவெனில் உடற்பயிற்சியுடன் உணவுக் கட்டுப்பாடும் தேவை என்பதை உணர வேண்டும். அப்போதுதான் எடை குறையும்.

உணவுக்கட்டுப்பாட்டைப் பின்பற்றுவோர் பலர், சில நாட்கள் கழித்து அதைக் கைவிட்டு விடுவர். இதனால் உடல் மீண்டும் பெருத்து விடுகிறது. நாம் சாப்பிடும் உணவு முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். கொழுப்புப் பண்டங்களைத் தவிர்த்து, இனிப்புகளை அறவே ஒதுக்கிவிட்டு, நொறுக்குத் தீனிகளையும் குறைக்க வேண்டும். (நொறுக்குத் தீனி என்பது கண்ட கண்ட நேரத்தில் எதையாவது சாப்பிட்டுக் கொண்டே இருப்பது). மேலும் திடீரென்று உடல் எடையைக் குறைக்க முயற்சி செய்யக் கூடாது. எடையைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும். வாரத்திற்கு அரை கிலோ என்ற விகிதத்தில் எடையைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும். திடீரென்று அதிக அளவில் எடையைக் குறைத்தால் பலவீனமாகவும், உளவய மாற்றங்களும் உண்டாகும்.

உடல் எடையை அதிகரிக்கும் பொருள்களின் பட்டியல் தயார் செய்து, அதில் ஒவ்வொன்றாக படிப்படியாக நிறுத்த வேண்டும். உதாரணமாக வறுத்த உணவுப் பொருள்களை நிறுத்தினால், அந்த மாற்றத்தால் உடல்நிலை எவ்விதம் உள்ளது எனத் தெரிந்து, சில நாட்கள் கழித்து மற்ற உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றாக நிறுத்த வேண்டும். அதாவது எடையை அதிகரிக்கும் எல்லாப் பொருள்களையும் ஒரே நாளிலேயே நிறுத்திவிடக் கூடாது. நாம் தினமும் சாப்பிடும் உணவின் தரம், அளவு, போன்றவற்றை குறித்து வைத்துக்கொள்வது நல்லது. (உடல் எடையைக் குறைக்க முயற்சி செய்பவர்கள் இத்தகைய பட்டியலைக் குறித்துக் கொள்ள வேண்டும்.)

சிலர் ஒருவேளை உணவை நிறுத்தினால் எடையைக் குறைத்து விடலாம் என எண்ணுகின்றனர். இது அவ்வளவு பலன் தராது. ஏனெனில் அடுத்த தடவை அதிகமாகச் சாப்பிடுவது மட்டுமின்றி, அப்போது வளர்சிதை மாற்றமும் அதிகரிக்கிறது. ஆகவே மூன்று தடவை சாப்பிட்டாலும் சாப்பிடும் உணவின் அளவைக் குறைக்க வேண்



படிப்பகம்

www.padippakam.com

டும். எப்போதும் பசியுடன் இருந்தால் உடல் எடையைக் குறைத்து விடலாம் என்று நினைப்பதும் தவறு. பசியாக இருப்பதால் உடலில் மூன்று விளைவுகள் ஏற்படுகின்றன.

1. உடலில் நீர்த் தேக்கம் ஏற்படலாம். 2. வளர்சிதை மாற்றம் மந்தநிலை அடையலாம். 3. அடுத்து எப்போது சாப்பிடுவோம் என்ற ஆர்வம் அதிகரிக்கும்

உண்ணும்போது மிகவும் மெதுவாக, நன்றாக மென்று சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது, மற்றவர்களுடன் பேசுவதையோ, செய்தித் தாள் படிப்பதையோ, தொலைக் காட்சி பார்ப்பதையோ தவிர்க்க வேண்டும். சாப்பிடும்போது இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம் என்ற நினைப்பு வரும்போது சிறிது நேரம் பொறுத்திருங்கள். உங்களது வயிறு நிறைந்து விட்டது என்பதை உணர மூளைக்கு சுமார் 15 நிமிடம் ஆகின்றன.

கொழுப்புப் பொருள்களைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும். அவையாவன:வெண்ணெய், கிரீம், ஐஸ் கிரீம், நெய், எண்ணெய், சர்க்கரை, ஜாம், தேன், சாக்கலேட்டுகள் இனிப்புப் பொருள்கள், புட்டியிலடைக்கப்பட்ட உலர்ந்த பழங்கள், கொட்டைகள், பிஸ்கோத்துகள், கேக்குகள், மதுபானம் முதலியன—ஒரு கிராம் கொழுப்புப் பொருளில் காணப்படும் கலோரிகள், புரதத்தில் மாவுப் பொருளில் காணப்படுவதை விட இரண்டு மடங்கு இருக்கும். மேலும் கொழுப்புப் பொருள்களிலிருந்து கிடைக்கும் கலோரிகள் கொழுப்பாக உடலில் தேக்கி வைக்கப்படுகிறது.

உருளைக் கிழங்கு, அரிசி, சோளம் போன்ற உணவுப் பொருள்களில் காணப்படும்மாவுப் பொருள்களில் குறைந்த அளவில் கொழுப்பும், சர்க்கரையும், கலோரிகளும் இருப்பதால், அவை எடையைக் குறைக்க ஏற்ற உணவுகளாகும். இது தவிர மீன், காய்கறிகள், சாலடுகள், பருப்பு, தேயிலை, காபி, சோடாபானம், பால், மோர், பழங்கள் (மாம்பழம் தவிர) ஆகியவை எடையை அதிகரிக்காத உணவுப் பண்டங்களாகும். எடையைக் குறைக்க வேண்டும் என்பதற்கு தனக்குப் பிரியமான அனைத்தையும் விட்டுவிடக் கூடாது. தேவையானபோது விரும்பியவற்றைச் சாப்பிட்டுக் கொள்ளவும்.

உணவை மட்டும் கட்டுப்படுத்தினால் போதாது. உடற்பயிற்சி மிகவும் அவசியம் என டாக்டர்



படிப்பகம்

www.padippakam.com

கள் கூறுகின்றனர். உடற்பயிற்சி முடிந்த 12 மணி நேரம்வரை, கலோரிகள் எரிக்கப்படுகின்றன. மேலும் உடற்பயிற்சியால் உடல் கொழுப்புதான் குறையுமே தவிர தசையின் பருமன் குறையாது. நடப்பது, உலாவுவது நல்லது. படிக்கட்டுகள் இருக்கும்போது, லிஃப்டை உபயோகிக்கக் கூடாது. படிக்கட்டுகளைப்பயன் படுத்தவும். உங்கள் அலுவலகத் திற்கு பஸ்ஸில் போவதாக இருந் தால், உங்கள் அலுவலகத்திற்கு 100-200 மீட்டர் முன்பே பஸ்ஸி லிருந்து இறங்கி நடக்க வேண் டும். சிலர் தங்களுக்கு, உடற் பயிற்சி செய்ய நேரமே கிடை யாது என்பர். அது தவறு. படிப் படியாக அதிக தூரம் நடக்கவும், துரிதமாக நடக்கவும் பழகவேண் டும். சிலர் தங்களது எடை குறையும் விகிதத்தைக் குறித்து வைக்கவும். ஒல்லியாக இருப்ப தற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உடற்பயிற்சி செய் வதில் தவறி விட்டாலோ, அல் லது உணவுக் கட்டுப்பாடு நிய தியை மீறி விட்டாலோ, மனம் தளர்ந்துவிடக் கூடாது. இடை விடாது முயற்சி செய்ய வேண் டும். தவறுகள்தான் வெற்றிக்கு அடிப்படையாக அமைகிறது.

கொழுத்த உடலில் முன்னர் கூறிய சில உபாதைகளைத் தவிர ஹெர்னியா எனப்படும் குடல் பிதுக்க நோயும் ஏற்பட லாம். உடலில் தோன்றும் புண் கள் சீரடைய தாமதமாகும். சரு மத்தில் கால்விரல்களுக்கிடையில் புண்கள் தோன்றி சிரமம் உண் டாகும்.

ஏன் ஒருசிலர் மட்டும் மிகை யான எடையுடன் இருக்கின்ற னர் என்பதற்கான காரணத் தைக் கண்டுபிடித்து அதற்கு சிகிச்சை செய்ய வேண்டும். கொழுத்த உடலுக்கான கார ணங்கள் வருமாறு: பாரம்பரிய அம்சம், நாளிமில் சுரப்பிகளின் மந்தமான பணி (எ.கா°-மிக்ச டிமா எனப்படும் தைராய்டு மந்தநிலை); உணவுப் பழக்க வழக்கங்கள். ஒருவன், அள விற்கு அதிகமான உடல் எடை யைச் சுமப்பதால் அதை மிகக் குறுகிய காலத்திற்கே சுமக்க வேண்டியிருக்கும். (அதாவது விரைவிலேயே இறந்து விடு வான்). வயிறு பெருக வாழ்வு சுருங்கும்; வயிறு சுருங்க வாழ்வு பெருகும்.'' சகஜமாக இருக்க வேண்டிய எடையைவிட 10% அதிகமாக இருந்தால் ஒருவனது வாழ்வின் காலகட்டம் 13% குறைகிறது எனக் கூறப்படு கிலது.

உடல் எடையை அதிகரிப்ப தில் உப்பு பெரும் பங்கு வகிக் கிறது. ஆகவே உணவில் உப் பைக் குறைத்து விட்டால் உட லில் நீர் தேக்கம் குறைகிறது.



படிப்பகம்

www.padippakam.com

தேங்கிய நீர், சிறு நீரகத்தால் சிறுநீராக வெளியேற்றப்படுகிறது. உடல் எடையைக் குறைக்க வேறு மருந்து எழுதித் தாருங்கள் என்று ஒரு டாக்டரைக் கேட்க, அவர் ஒரு மருந்தை எழுதிக் கொடுக்க, உடல் கொழுத்தவர் ''இந்த மருந்து சாப்பாட்டிற்கு முன்பா அல்லது பின்பா என்று கேட்க, டாக்டர் ''உமது ஒரு நாளைய உணவே அதுதான்'' என்று சொன்ன சம்பவம் நினைவுக்கு வருகிறது.

சரியான உடல் எடையைக் கணக்கிட உள்ள சூத்திரம்;—

உதாரணமாக $$\frac{\text{உயரம் செ. மீ ல்} \times \text{மார்பின் சுற்றளவு}}{240}$$

= சரியான எடை

அதாவது ஒருவனது உயரம் 170 செ. மீ. என்றால், மார்பின் சுற்றளவு 85 செ. மீ. என்றால் அவனது சரியான விடை வருமாறு:

$$\frac{170 \times 85}{240}$$ = 60 கிலோ. செ.மீ என்றால்

சென்டிமீட்டர்.

நமது உடலில் ஒரு குறிப்பிட்ட வயதிற்குமேல் ஏறும் ஒவ்வொரு பவுண்டும், நமது தேகத்தின்மீது ஏற்றப்படும் பெரும் சுமை என்பதை உணர்ந்து அதைத தவிர்த்து நடந்து கொண்டால் நாம் சுகமாக வாழலாம்.

படிப்பகம்

www.padippakam.com

# 'தடைக்கல்'

சிலம்பு ராமசாமி

அதிகாலைப் பொழுது. கங்குமங்கலான நேரம், இரவு பகற்பொழுதிற்காக வழிவிட்டு விடை பெற்ற சமயம்.

அமைதி கலைந்து பறவையினங்களின் கீச்சொலிகளினூடே மனித இனங்களின் குரலும் இணைந்து விடியலை வெளிக் கொணர்ந்து கொண்டிருந்தது.

சாணிகரைந்த நீரை சிதற விட்ட சப்தம் 'சொட்டு .. சொட்டென' ஒலி எழுப்பி நின்றது.

''ஏய் முத்தம்மா என்ன விடிஞ்சி நாழிகை ஆச்சா'' கேட்டவாறே எழுந்து படுக்கையிலமர்ந்து தனது இருகைகளாலும் முகத்தை அழுத்தி துடைத்து விட்டுக் கொண்டிருந்தார். சாமிக்கண்ணு.

விடிய விடிய எங்கெல்லாமோ அலைஞ்சிட்டு நடுச்சாமத்துலயோ பொழுது விடியிறதுக்கு முன்னாலேயோ வந்து படுத்தா பொழுது விடியிறது தான் தெரியுமா அல்லது அடையிறதுதான் தெரியுமா'' முத்தம்மா

''சூரியன் தெரியுமுன்ன புஞ்சைக்காட்டுக்குப் போயிட்டு பொழுது சாய்ந்த பின்னால் வீடு வந்து அடுப்பண்டை போய் ஆக்கி முடிச்சி தூங்கி எந்திரிக்கிற ஒனக்கு எங்கே தெரியப் போகுது நாட்டுநடப்புக

''வீட்டுப்பாட்ட நாங்க கவனிக்கலேன்னா எப்படி இருக்கும் நாட்டு நடப்புக......?''

தனக்குள் சிரித்தவாறு, ''முத்தம்மா நான் ஒன்ன எப்படியோ நினைச்சிருந்தேன்''.

''எப்படி நினைச்சிருந்தேயளாம்?''

''ஒன்ன கல்யாணம் முடிச்சி வந்தப்போ ஒனக்கு கிழக்கன்னா மேற்க எதுன்ன தெரியாது. என் மாம மக்க, அத்தமக்கலாம் என்ன மச்சான் இத எந்த சந்தையில புடிச்சி வந்தீங்கன்னு எக்காளமா கேட்டானுக''

''அவ்வளவுக்குவிவரம்பத்தாத வளாவா இருந்தேன் நான்''



படிப்பகம்

www.padippakam.com

''ரெண்டு பேருக்கும் கால்படி அரிசிகூட வேகவைச்சி இறக்கத் தெரியாதவளாதான் இருந்தே நீ சரி—சரி தண்ணிய எடு, மூஞ்சிய கழுவட்டும்.''

''ஏம்மா காபி போட்டுட்டியா?'' அடுப்பண்டை நின்ற மகள் மாரியம்மாளை நோக்கிக் கேட்டாள் முத்தம்மா.

''நானும் அடுப்ப பத்தவச்ச நேரத்துல இருந்து ஊதி ஊதித் தான் பார்க்கேன் புகைதான் மேல போகுதேதவிர தீபுடிச்ச மாதிரி தெரியல''

தற்காலத்து மழைகூட இப்படி பெய்யாது போலிருக்கு நித்தமும் வெள்ளம் ஓட பெய்திட்டிருக்கு இந்த கோடை நேரத்துல''

-நாளும் அந்திபொழுதுலமழை வர்றது தெரியுதுல்ல காலங்காத்தால விறகுகள் எடுத்து ஒதுக்குப் புறத்துல வைக்கிறதுதான''.

''ஆமா ஆமா சொல்றதுல ஒண்ணும் கொறைச்சல் இல்ல ஒழுங்கில்லாத வீடு ஒரு முழ வீடுன்னுதான் நாட்டுப்புறத்துல சொல்லுவாக ஆனா நம்ம குடிசையோ ஒருசாண் இடைவெளி கூட இல்லாத அத்தனையும் ஒட்ட''

''முத்தம்மா நான்என்ன நிலம தெரியாம இருக்கேன்னு நினைச்சியா''

''நிலம தெரிஞ்சதனால தான் ஓலைய மாத்தி நாலைஞ்சி வருஷம் ஆகியும் மேகாத்துல தாழ் வாரம் முழுதும் பிஞ்சுபோன பின்னும் அத ஏறெடுத்து பார்க்க மறந்து பகல்ல சூரிய ஒளி அம்புட்டும் வூட்டுக்குள்ள வெளிச்சம் போட மழை நேரத்துல பெய்ற மழை முழுதும் குளமா பெறுகிட்டிருக்க அத்தனையயும் அனுபவிக்கிறது நாங்க. விடிஞ்சா போனா அடைஞ்சா வர்ற நீங்க சமயங்கள்ல அடுத்த நாள் காலையிலேயும் வர்றீங்க''

தனக்குப் சிரித்தவாறு ''அடுப்ப பற்றவைக்கதீப்பற்றாத விறகை நினைவூட்ட இத்தன விவரங்களையும் கொட்டி தீர்த்துட்ட. எவ்வளவு நாள் இந்த சந்தர்ப்பத்த எதிர்பார்த்திருந்தியோ சுருக்கமா சொல்றதுன்னா அப்போதுநான் பொறுப்பில்லாதவங்கிற'' என்றார் சாமிக்கண்ணு.

''ஐய்யோ அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லீங்க இவ்வளவு கஷ்டங்களுக்குக் கிடையிலும் இரண்டு புள்ளங்களை வாத்தியாரி வேலைக்குப் படிக்க வச்சிருக்கிற ஓங்கள அப்படி சொல்ல முடியுமாங்க''.

''பின்ன ஏன் இத்தனை ஒப்பாரிக''.

''ரெண்டு புள்ளைங்கள காதுல



படிப்பகம்

www.padippakam.com

கழுத்துல கிடைந்த மட்டுமல்லாம குடிக்கிற குவளைய கூட வித்து படிக்க வச்சோம் ஏன்? அதுக படிச்சுவந்து ஏதாவது வேலைக்குப் போகும் நம்ம பட்ட கஷ்டம் மாறுனும்தான''

''அதெல்லாம் சரிதான்முத்தம்மா அதுல நீ இன்னொரு விசயத்த மறந்துட்டது நினைக்கேன்''.

''என்ன அது?'' என்று ஆச்சர்யமாகக் கேட்பது போலிருந்தது முத்தம்மாளின் பார்வை.

நம்ம கஷ்டங்களைப் பற்றி கூட நான் பெரிசா நினைக்கல்''

''அப்புறம்''

''வரதட்சனை கொடுமை மிகுந்த இந்த காலத்துல மாத சம்பளம் வாங்குதுகனு தெரிஞ்சா வர்ற மாப்பிளை விட்டார் வரதட்சனையில நகைநட்டுகள்ல சீர்வரிசைகள்ல கொஞ்சம் குறைச்சிக்கிட மாட்டாங்களா என்ற நப்பாசையும் திருமணத்துக்கு முன்னால ரெண்டொரு ஆண்டுக வேலைபார்த்தா அதுகளுக்கு ஏதும் உதவியா இருக்காதா அபிலாசையும்தான்,

''அந்தஆசை எனக்கும் இருக்காதுங்களா''

''வேற என்ன?

''நான் சொல்ல வந்தது அது இல்லீங்க''

''பின்ன எது?''

''படிச்ச புள்ளையங்களுக்கு இன்னும் வேல கிடைக்க காணோம் அதுகளுக்காக வாங்குன கடன்களையும் அடைக்க முடியல அதுக்குள்ள அடுத்த புள்ளையையும் படிக்க.... ..''

''இந்த புள்ளையை எத வித்து படிக்க வைக்கன்னு கேக்கிற அப்படித்தான''

ஆமா'' என்பது போல் தலையசைத்தால் முத்தம்மா

''பெத்தவங்களுக்கு பிள்ளைகளைப்பற்றிய சில கடமை இருக்கு தெரியுமில்ல''

அம்மா காபி ரெடியாயிட்டு'' அடுப்பண்டையிலிருந்து வந்தது இப்படியொரு குரல்

அந்த கப்புல ஊட்டு கொண்டு வா''

சிறிது நேரத்தில் கப் நிறைந்த காபியை கொண்டு வந்து முன்னால் வைத்தாள் மாரியம்மாள்.

மிகுந்த சூட்டையும் பொருட்படுத்தாது ஊதி ஊதி வேகமாக் குடித்து விட்டு வெளியேறினார் சாமிக்கண்ணு.

''ஏம்மா நான் கேக்குறனேனு கோபப்பட மாட்டீங்களே''

தாமரை



படிப்பகம்

www.padippakam.com

"ஏன் என்னத்த கேக்கப் போற?"

"அப்பா எங்கள எல்லாம் வேலைக்கு படிக்க வைக்கனுங் கிறது. என்னம்மா தப்பு"

"முறைத்துப் பார்த்தாள் முத்தம்மா தலையை தாழ்த்திக் கொண்டாள் மாரியம்மா

"ஒங்களை படிக்க வைக்கிறத நான் என்ன வேண்டாம்னா சொல்லிடப் போறேன்"

தலையை சற்று உயர்த்தி முத்தம்மாவின் மீது ஓடவிட்ட மாரியம்மாவின் கடைக்கண் பார்வை "அப்புறம்" என்று கேட்பது போலிருந்தது.

"அதெல்லாம் நேரம் வரும் போது சொல்கிறேன் மொதல்ல பானையில இருந்து பத்து பருக் கயை அள்ளிப் போட்டு கலையம் நிறைய தண்ணிய உட்டு எடுத்துட்டு வா"

வேகமாக தனது கடமைய முடித்து கஞ்சிக் கலயத்தை தலையிலும் களைவெட்டியை தோளிலும் சுமந்து புஞ்சைகாடு நோக்கி நடந்தாள்மாரியம்மாள்.

வெளியே சென்று வீடுதிரும் பிய ஆசிரிய பயிற்சி முடித்திருந்த மகள் முருகேஸ்வரியிடம் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஒப்படைத்து தன் னுடன் காட்டு வேலையில் ஈடு படும் அக்கம் பக்கத்தாருக்கு குரல் கொடுத்து வாய்நிறைய வெற்றிலைய மென்று சக்கை யை உதப்பி சாற்றை உமிழ்ந்த வாறு வேலை நடைபெறும் விளங்காடு நோக்கி தனது பாதங்களை நடக்க விட்டிருந் தாள் முத்தம்மா.

"ஏக்கா முத்தம்மாக்கா கொஞ் சம் நில்லேன் மாடத்தி அக்காள எதிர்பார்த்திருந்தேன் பேச்சு துணைக்காக அவ கொழந்தைய அமர்த்தி தொட்டுல்ல போட் டுட்டு வர்றேனுட்டா" சொல் லியவாறு முத்தம்மாளைப் பின் தொடர்ந்திருந்தாள் கனியம்மா.

"வழக்கமா ஏழு ஏழரை மணிக்கெல்லாம் வெட்ட குனிஞ் சிடுவோம். தொடர்ந்து பெய்த மழையில நனஞ்ச விறகு கம்பு கள்ள தீப்பற்ற நேரமானதால வெளியே போற ஆம்பளக்கி காபி போட்டு கொடுத்துட்டு புறப் பட நேரமாச்சி"—முத்தம்மா.

"ஒம்புகல அப்படி சொல் லிட்ட என் வீட்டுக்கார ஆம்ப ளக்கி இறப்புல நாலு காசு இருக் கிறது தெரிஞ்சிட்டா உடனே எடுத்துட்டுப் போய் குடிச்சி தீர்த்தாதான் நிம்மதி"—கனி யம்மா.



படிப்பகம்

www.padippakam.com

பேச்சோடு கால்களும் வேகமாக நடை போட்டன வேலை நடக்கும் இடம் நோக்கி!

''என்ன முத்தம்மா நேரம் என்னாச்சி பார்த்தியா சூரியன் தலைக்குமேலே வந்துட்டு இந் நேரம் குளிஞ்சி எந்நேரம் களவெட்டி முடிக்கப் போறிய'' கடிந்து கொண்டார் நில சொந்தக்காரர் நாராணசாமி நாயக்கர்.

''நாயக்கர் அய்யா கோபப் பட்டுக்கிடாதீய நேத்து முந்தா நாள்லாம் நேரம் காலம் வராமலா இருந்தோம்.''

''நேற்று முந்தா நாள் எப்படி வந்தேயளோ எனக்குத் தெரியாது. நாளமுத கிழக்கே சூரியன் அடிவானத்துல தெரியிறபோது குனிஞ்சி மேல்வானத்துல மறைஞ்ச பின்தான் நிமிறணும். அப்படின்னா வேலைக்கு வாங்க முடியலின்னா சொல்லிடுங்க. கூரையில சோறு போட்டா ஆயிரம் காகம் ஆமா''.

''திடுதிப்புனு வேறு யாருட்டயும் சொல்லி எங்க பொழப்புல மண்ண அள்ளி போட்டுறாதீங்க நாயக்கர் அய்யா,''

''நான் வீட்டுக்குப் போயிட்டு வர்றதுக்குள்ள ரெண்டு குறுக்கம் வெட்டி முடிச்சிறுக்கணும்! இல்லன்னா எனக்கு பொல்லாத கோபம் வரும்'' சொல்லிவிட்டு வீடுநோக்கி நடந்தார் நாயக்கர்.

''என்னக்கா நாயக்கர் அய்யா இவ்வளவு கோபப்பட்டுப் போறாக.''

''இவ்வளவு நேரம் ஆகியும் இந்த மாடத்தி இன்னும் வந்து சேர்ந்திருக்காளா பாரு நம்ம லட்சணமும் அங்கன தான இருக்கு. சரி சரி வேலைய பாரு கிழக்கு மேற்கா ஆரம்பிப்போமா அல்லது தெற்கு வடக்கா ஆரம் பிப்போமா''.

''தெற்கு வடக்காகவே கள வெட்ட துவக்குவோம் ஏன்னா பொழுது சாயும்போது மேற்கே முகம் வச்சி வேல ஓடாது''— பேச்சுகளினூடே வேலை தொடர்ந்தது.

''ஏக்கா முத்தம்மா கலயத்த எங்க வச்சிருக்கே'' கேட்டவாறே அருகில் வந்தாள் மாடத்தி.

''ஒனக்கு இப்பதான் பொழுது விடிஞ்சுதாக்கும் தோ தெரியுத அந்த கருவேல மரத்து மூட்டுல வச்சி மூடிட்டுவா''.

''தனக்கு வந்தாதான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்.''

''நமக்கு ஆயிரம் வேலைக இருக்கலாம் காசு வாங்கிட்டு



படிப்பகம்

www.padippakam.com

தான வேல செய்றோம் வாங்குற காசு வத்திக்க வேண்டாம்.''

''சரி சரி நான் எந்தப் பக்கத்துல இருந்து வெட்ட ஆரம்பிக்க'' கேட்டாள் மாடத்தி.

''தோ அந்த மூடடுப் பக்கமிருந்து வா''

''காலையிலே நாயக்கர் அய்யா வந்து ஒரு விரசு விரசிட்டுப் போயிருக்காருக்கா'' நடந்ததைச் சொன்னாள் கனியம்மா.

வழக்கத்திலிருந்து அன்று அவர்களது வேலை சற்று வேகமாகவே நடந்தது.

வீட்டிற்குச் சென்று மதிய உணவை முடித்து ரோட்டுப் பக்கமாக வந்து சேர்ந்தார் நாயக்கர்.

பாதையின் ஓர் ஓரத்தில் ஓர் உலுக்கு உலுக்கி நின்றது நகர்ப் பகுதியிலிருந்து அந்தக் கிராமத்தை வந்தடைந்த டவுன் பஸ் ஒன்று.

பஸ்ஸிலிருந்து கீழிறங்கிய இரண்டு மூன்று பேரில் கடைசியாக இறங்கிக் கொண்டிருந்தார் சாமிக்கண்ணு.

கண்டக்டர் விசில் ஊதியதும் டிரைவரால் ஓட்டப்பட்ட பஸ் புழுதிப் படலத்தை பெரிதாக்கி மறைந்தது.

தனது முகப் பக்கம் படர்ந்த புழுதியை வலது கையால்ஒதுக்கி விட்டவாறு அருகிலிருந்த டீக் கடை நோக்கி நடந்தார் சாமிக் கண்ணு.

''யாரு சாமிக்கண்ணா என்ன தூரப்பயணமா அல்லது பக்கம் தானா'' அருகில் நின்றவாறு கேட்டார் நாயக்கர்

இருகரம் குவித்து மரியாதை செலுத்திக் கொண்டு ''பக்கத்து ஊருக்குத்தான் போயிட்டுவற்றேங்க''

''புள்ளைங்க வேலைக்கு ஏதும் ஒழுங்கு பன்னியிருக்கேரா வேல எப்போ கிடைக்கிறாப்புல இருக்கு''

'ஒங்கள மாதிரி பெரியாளுங்க தயவு இருந்தா ஏதும் பார்க்கலாங்க''

''நமக்கு பள்ளிக் கொடத்துக்கும் தோட்டம் ரொம்ப தூரமாச்சே அதுல நான் என்ன செய்யமுடியும்து நினைக்கேரு சாமிக்கண்ணு''.

''யூனியன் சேர்மன் ஓங்க சொந்தக் காரபையன் தானாமில்லா நீங்க சொன்னா கேப்பாகனு சொல்லிகிட்டதாக''

''அதுவா அது விசயமா பின்னால பேசிக்கலாம் இப்போ அவசரமா ஏதும் போகவேண்டி



படிப்பகம்

www.padippakam.com

திருக்கா அல்லது சாவகாசமா பேசிட்டுப் போகலாமா''.

பேசுவோம் மொதல்ல ஏதாவது டீ குடிச்சிக்கிடலாமா''

புன்முறுவல் செய்து சம்மதம் தெரிவித்துக் கொண்டார் நாயக்கர்.

''என்னப்பா பால் வந்துட்டதா?''

டீக்கடைக்காரனை நோக்கிக் கேட்டார் சாமிக்கண்ணு.

''புதுப்பால் இப்போதுதான் வந்ததுங்க சூடாக கொஞ்சம் நேரம் ஆகுமா''

''அப்படி போய் ஒங்காந்து பேசலாமா'' தூரத்திலிருந்த வேப்பமர நிழலை சுட்டிக்காட்டி கேட்டுக் கொண்டார் நாயக்கர்.

''ஆகட்டுங்க''

இருவரும் அருகிலிருந்த வேப்பமர நிழலை நோக்கி நடந்தனர்.

''ஐயா பால் சூடானதும் டீயை கொடுத்து உடட்டுமா''

போர போக்கில் ''கொடுத்து உடப்பா'' என்று கூறிக் கொண்டார் சாமிக்கண்ணு.

''ஒம்ம பொண்ணுக்கு மாப்பிளை வீட்டார் யாரும் வந்து போனாங்களா''

''இரண்டொரு இடங்கள்ல இருந்து வந்தாங்க ஆனா இப்போ நான் முடியாதுனுட்டேன்.''

''ஏன்?''

''ரெண்டுமூனு வருஷம் வேல பார்த்து அது வாங்குற சம்பளத்த கொண்டு அதுக்கு ஏதும் தோடு மூக்குத்தி பண்ணிகிட்டு அப்புறமா கல்யாணத்த பத்தி யோசிக்கலாம்னுதான்.''

''குழந்தைக்கு வயசு என்னாச்சு?''

''வர்து வைகாசி பொறந்தா இருபத்தைந்து முடிஞ்சி இருபத்தாறு பொறக்கப் போகுதுங்க!''

''பட்டந் தவறுனா நட்டம் பாங்க! அது இது நடக்கவேண்டிய காலத்துல நடக்கலன்னா என்ன பிரயோஜனம் இருக்கு.''

''அந்த எண்ணம் பெத்தவங்களான எங்களுக்கு இல்லேனு நினைக்கீயளா!''

''பின்னே''

''வரதட்சணை; வறுமை இரண்டும் யாரைத்தான் விட்டு வச்சிது!''

''ஓ...அதை சொல்றீரா!''

''ஆமாங்க''.

''ஒங்க சாதிக்காரப் பையன் நமக்கு நல்லா தெரிஞ்ச குடும்



படிப்பகம்

www.padippakam.com

பம். எந்த வம்பு தும்புக்கும் போக மாட்டான். கெட்ட பழக்கம் எதுவும் கிடையாது. அவனும் வாத்தியார் வேலைக்குப் படிச்சி ஏதோ லீவ் இடத்துல தான் பார்க்கிறானாம். வேல பார்க்கிற பொண்ணு கிடைச்சா நல்லதுன்னு சொல்லிட்டிருந்தாப்புல''.

''நம்ம குழந்த இன்னும் வேலைக்குப் போகலியேங்க''

''டிரயினிங் பாஸ் பண்ணிட்டாளா!''

''பாஸ் பண்ணது மட்டுமில்ல மார்க்கும் நல்லா எடுத்திருக்காங்க!''

''பின்ன என்ன?''

''வேலை கிடைக்கணுங்களே!''

இரண்டு கண்ணாடி கிளாஸ்களில் டீயைக் கொண்டு வந்து நீட்டினான் டீக்கடைக்காரன்.

டீயைக் குடித்து முடித்து ''ஏம்பா பக்கத்துக் கடையில சுருட்டு இருந்தா வாங்கிட்டு வர்றியா?'' கேட்டுக்கொண்டு தனது சட்டைப் பையினுள்ளிருந்து காசுகளை எடுக்க முற்பட்டார் நாயக்கர்.

முந்திக் கொண்டு தனது வேஷ்டியின் நுனியில் முடித்து வைத்திருந்த முடிப்பை அவிழ்த்து அதனுள் மடித்து வைத்திருந்த அழுக்கேறிய இரண்டு ரூபாய் நோட்டை டீக்கடைக்காரனிடம் நீட்டினார் சாமிக்கண்ணு.

வாங்கிய இரண்டு ரூபாய் நோட்டை திருப்பித் திருப்பிப் பார்த்தான் டீக்கடைக்காரன்.

''ஏப்பா நோட்டு செல்லுமா செல்லாதானு பார்க்கியா'' கேட்டார் நாயக்கர்.

''இல்லங்க மத்தியில சின்ன கிழிசல் தெரிஞ்ச மாதிரி இருந்தது'' நோட்டை பையினுள் வைத்துக் கொண்டு அருகிலிருந்த கடை நோக்கி நடந்தான் டீக்கடைக்காரன்.

''நான் சொன்ன பையன் வீட்டாரோட பேசிப்பார்க்கலாமா''

''என்ன எதிர்பார்ப்பாங்களோ?''

''பையனோட அப்பா காலத்துல ஓரளவுக்குவசதியா வாழ்ந்த குடும்பம். தாய் பராமரிப்புல வளர்ந்த பையன் என்ன, எதிர்பார்ப்பான்னுதெரியல. எவ்வளவு வர செய்யலாங்கிறது ஒம்முடைய அபிப்பிராயம்''



படிப்பகம்

www.padippakam.com

"இப்போதைக்குஏதும் செய்ற மாதிரி நிலம இல்லியேங்க"

"வெழுங்கைமுழம் போடுமா".

"குழந்தைக்கு மாத வருமானம் வரும்லாங்க"

"அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பாங்கிற கதைதானா"

"அது என்ன நாயக்கர் அய்யா அப்படி சொல்லிட்டீக ரெண்டுக்கும் வித்தியாசம் இல்லீங்களா"

டீக்கடைக்காரன் கொண்டு வந்து நீட்டிய சுருட்டை வாங்கி நாயக்கரிடம் கொடுத்தார் சாமிக்கண்ணு.

"பொழுதும் சாயப்போகுது நான் புஞ்சைக்காடு பக்கமா போயிட்டு வரணும் வீட்டுல பொம்பளட்ட கலந்து வையும் நேரம்வரும்போதுபேசிக்கலாம்."

சாமிக்கண்ணு வீட்டை நோக்கியும் நாயக்கர் விளங்காடு நோக்கியும் நடந்தனர்.

அன்று நடந்த வேலையைப் பின்னோக்கி பார்த்தவாறு "ஏக்கா ஒன் மக மாரியம்மா என்ன செய்துட்டிருக்கா வெயில் முகம் காணாம இருந்தபுள்ளைய வேனா வெயில்ல கள வெட்ட உட்டு அவ முகத்த பாரு ஒரே நாளையில கருத்து கரிக்குழிச்சி போனா'ள. முத்தம்மாளை நோக்கி அனுதாபத்துடன் கேட்டுக்கொண்டாள் மாடத்தி.

"என்ன செய்றது வயித்துப் பாட்ட கழிக்க வேண்டாமா? மூத்தவளுக வாத்தியார் வேலைக்கு படிச்சிருந்தாலும் பீடி உருட்டவும் கத்துக் கிட்டாளுக. இதுக்கு பீடி சுத்த கைவர மாட்டேங்க"

"தாள விரிச்சி எழுதுன் கை இலையை சுருட்டி மடக்குற துன்னா அவ்வளவு சீக்கிரமா படிச்சிக்கிட முடியுமா என்ன? என் மகளையும் பக்கத்து ஊட்டுல போய் சுத்தி படிக்கச் சொல்லி அஞ்சாறு மாசமாச்சி இன்னும் இவ சுத்துறது சரி இல்ல சரி இல்லனு சொல்லி சுத்துற பீடிகள எல்லாம் சொல்லி கொடுக்கிறவ கணக்குல சேர்த்துக்கிடுதானாம்'"

"அவ – அவ காரியத்ததான் பார்க்கிற காலமா போச்சி இப்போ சேர்மன் எலக்ஸன்ல தேர் தல்ல நின்னவோ ராவாப்பகலா பணத்த மடியில கட்டிக்கிட்டு அலஞ்ச போது எங்க ஊட்டுக் காரவ கடிக்க பாக்கு வாங்குற துக்கு கூட காசு வாங்காம தான் ஊர்ல உள்ளவோ அத்தன பேரையும் அவுகளுக்கு ஓட்டுப் போடச் சொன்னாக. ஜெயிச்சி

தாமரை



படிப்பகம்

www.padippakam.com

வந்தபோது கூட எங்க ஊட்டுக் காரவ போட்ட மாலைய கழுத்து நிறைய வாங்கிகிட்டு இவுகள பார்த்து இங்கபாரும் இன்னாரு நீர் செஞ்ச உதவிய என் தலைமுறை தலை முறைக்கு மறக்க முடியாது என் பதவி காலத்துல ஒமக்கோ ஒம்ம ஊருக்கோ எது வேணும் னாலும் செய்றேனு தான் சொன்னாரு"

''அவுக என்ன செய்ய முடி யும் ஒன் மகளுக்கு''

''அவுக நினைச்சா வேல வாங்கி கொடுக்கமுடியும்னு சொல்லுதாக''.

சற்று நிமிர்ந்து தனது பார் வையை நடைபாதை நோக்கி ஓடவிட்ட மாரியம்மா ''ஏம்மா தோ நாயக்கர் அய்யா வர்ற மாதிரி தெரியுது'' என்றுஎச்சரித் தாள்.

''ஏ களியம்மா ஏ மாடத்தி கொஞ்சம் வேகமா வெட்டுங்க''

"நாமளும் கடவுளுக்குப்பயந்து தான் வேலை பார்க்கோம்.''

''என்ன முத்தம்மா நாளை யோட முடிஞ்சி போகுமா?'' சற்று தொலைவில் நின்றவாறு கேட்டார் நாயக்கர்.

''முடிஞ்சிடுங்க''

''இந்தா இந்த ஐம்பது ரூபா யையும் கொண்டு போ நாளை வேலைக்கும் சேர்த்து கணக்குப் பார்த்துக்கிடலாம் நாளைக்கு நேரம் காலமா வந்து வேலைய சீக் கிரமா முடிங்க.''

பணத்தை பெற்றுக்கொண்ட முத்தம்மா தனது வேலையைத் தொடர்ந்தாள்.

பொழுது சாய்ந்ததும் கரை யேறிவீடு நோக்கி நடந்தனர் முத்தமம்மாளும் மற்றவர்களும்.

முற்றத்தின் ஓர் மூலையில் கிடந்த உரலில் மசாலா இடித்துக் கொண்டிருந்தார் சாமிக்கண்ணு.

தலையில் சுமந்துவந்தவேலிக் கருவை முள்கட்டை ஓர் ஓரமா போட்டுவிட்டு ''ஏ புள்ள ஏய் முருகேஸ்வரி வடி தண்ணி இருந்தா கொண்டுவா. ஒரு படியா வருது என்னக்கிதான் இந்த பாடு தொலையப் போகுதோ'' அலுத்துக்கொண்டு வீட்டின் ஓரமாய் அமைந்திருந்த திண்ணையில் ஒக்காந்து சுவரில் றில் சாய்ந்தாள் முத்தம்மா.

''ஏன் ஒடம்புக்கு ஏதும் பண் ணுதா?'' படபடத்துக் கேட் டார் சாமிக்கண்ணு.

''ஓடம்பு என்ன இரும்பாலயா



படிப்பகம்

www.padippakam.com

அடிச்சி வச்சிருக்கு என்ன நோவு வந்து யாருட்ட சொல்லி என்ன பண்ண? நம்ம தலையில ஆண்டவன் உலக்கைய கொண்டு எழுதிபுட்டான்."

"முத்தம்மா நம்ம வாழ்க்கை இருக்கே இதுதான் உண்மையான வாழ்க்க நாம யாருக்கும் எதுக்கும் பயந்து வாழ வேண்டியதுல்ல. உழைப்ப கொடுத்து காச வாங்குறோம். ஒடம்புஎன்ன இரும்பாலா அடிச்சு வச்சிருக்குனு சொன்னியே இரும்பால உண்டாக்கிய பொருட்கள் என்ன தேய்ந்து போகாதா அல்லது பழுதுபட்டுதான் போகாதா! நம்ம ஊரு நாட்டாமை ஊட்டு மாட்டு வண்டியில இரண்டு சக்கரங்களையும் இணைக்கும் அச்சும் அதன் கடைக்காலில் போடப்பட்டிருக்கும் சாவியும் ஏன் சக்கரங்களை சுற்றியுள்ள பட்டைககூட இரும்பாலதான் உண்டாக்கப்பட்டிருக்கு. அவைகளும் ஒருநாள் பழுதடைகிறது. பழுது பார்க்கப்பட்டபின்தான் சக்கரங்கள் உருளுது; வண்டி ஓடுது."

"ஓங்ககிட்ட பேச்சு கொடுத்து மிச்சம் கொண்டு போக முடியுமா நானோ மத்தவகளோ" தனக்குள் முருவலித்துக் கொண்டாள் முத்தம்மா.

குவளை நிறைந்த வடி தண்ணீரை முன் கொண்டுவந்து வைத்துசென்றாள் முருகேஸ்வரி.

"உப்புபோட்டிருக்கியாம்மா".

"போட்டுட்டேம்மா"

"தொட்டுக்க ஊறுகாதுண்டு ஏதும் இருக்கா?"

"சட்டியில இருந்த களிம்பு கூட காலையில தான் காலியா போச்சு ரெண்டு வெங்காயம் ஒடச்சி கொண்டு வரட்டுமாம்மா?"

"ஏதாவது எடுத்துவா?

"முத்தம்மா ஒரு சங்கதி தெரியுமா"

"ஊர்நாடு சுத்தி வந்த நீங்க தெரிஞ்சிவந்திருப்பிய காடு மேடு போயிட்டு வந்த நான் எப்படி தெரிஞ்சிக்கிடுறது சொன்னா தான தெரியும்"

"மத்தியானம் நாயக்கர பார்த்தேன்"

"எந்நேரம்?"

"ரெண்டு மணி சுமார் இருக்கும்"

"ஏன் என்ன சொன்னாக?"

"நம்ம சாதிக்கார பையன் ஒருத்தன் நம்மள மாதிரி சாதாரண குடும்பமாம் .....

"ஏன் அவனுக்கு என்னவாம்'





படிப்பகம்

www.padippakam.com

"அட கூறுகெட்டவள செவரம் இல்லாம அவன் இவன்னு பேசிட்டிருக்காத".

"ஏன் இப்போ என்ன நடந்துட்டு"

"மத்தவங்கள மரியாதையா பேச தெரிஞ்சிக்கணும் முத்தம்மா"

பையன்னு சொன்னதால நான் அப்படி சொல்லப் போனே விவரத்த சொல்லுங்க"

"தகப்பனார் கிடையாதாம் பையனும் வாத்தியார் வேலைக்குப்படிச்சி ஏதோபதிலுக்குபார்த்துட்டிருக்குதாம்.

"அதுக்கு என்ன இப்போ?".

"நம்ம பெண்ண பையனுக்கு செய்து வைக்கலமானு கேக்கிற மாதிரி நாயக்கர் பேச்ச கொடுத்தாரு"

நீங்க என்ன சொன்னீய? '

"ஒன்ன எல்லாம் கலந்துக்காம என்ன பதில் சொல்லியிருப்பேன்"

அடுப்பண்டை நின்ற முருகேஸ்வரியின் கால்கள் கதவின் மறைவை வந்தடைந்து காதுகள் கூர்மையாயின.

அடுப்பறையை நிறைந்த புகைமூட்டம் வாசல் வழியாக வீட்டின் முன்பகுதியை எட்டி நிற்கின்றது.

லொக்........லொக் என இருமியவாறு அடுப்ப போட்டுட்டு" எங்கபோயி தொலைஞ்சா இவ புள்ள ஏ முருகேஸ்வரி எங்கடி போயிட்டா?"

ஊதுகுழலால் "பூ.......பூ" என ஊதியவாறு "அள்ளிப் போட உமியும் இல்ல எடுத்து ஊத்த சீம எண்ணெயும் இல்ல நான் என்ன செய்வேன்" பதிலித்தாள் முருகேஸ்வரி.

"கவனத்த வேற எங்கயும் ஓடவிடாம அடுப்ப பார்த்து ஊது"

"நீஎன்னக்கா?" முத்தம்மாளிடம் அபிப்பிராயம் கேட்டார் சாமிக்கண்ணு.

"கால் விரல்களுக்கு மெட்டி கூட இல்ல கல்யாணத்தைபற்றி பேசுறீயளேதான்யோசிக்கேன்"

"அதை எல்லாம் சொல்லி முடிச்சிட்டேன்"

"நாயக்கர் அய்யா என்ன சொன்னாக?"

"நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்முத்தம்மா"

"எப்படி?"



படிப்பகம்

www.padippakam.com

அவளோட மாத வருமானத்த எதிர்பார்த்து கூட்டிட்டுப் போறாதா போகட்டும்'' இந்த முடிவோடு இரவுப் பொழுது வேகமாக ஓடியது.

விரைவாக வந்த விடியலில் நாயக்கர் வீடுநோக்கி நடந்தார். சாமிக்கண்ணு.

நாயக்கரை கலந்துபேசி வீடு திரும்பிய சாமிக்கண்ணும் அவரது குடும்பத்தினரும் அன்றைய இரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தனர்.

கோடைக்காலமானதால் அன்றைய பகற்பொழுது அகன்று மெதுவாகவே நகர்ந்தது.

இரவு எட்டுமணி சுமாருக்கு நாயக்கரும் மாப்பிள்ளை உறவினர் இரண்டு மூன்று பேரும் வந்தடைந்தனர் சாமிக்கண்ணு வீட்டை.

தடுக்குகளை எடுத்துப் போட்டு வந்தவர்களை அமரச் செய்தார் சாமிக்கண்ணு.

தலைநிறைந்த பூச்சூட்டி உடுத்தி புதுப்பெண் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்தாள் முருகேஸ்வரி.

வெள்ளை மனசுடன் கருப்பு நிற காபி நிறைந்த டம்ளர்கள் வந்தவர்கள்முன் கொண்டுவந்து வைக்கப்பட்டது முத்தம்மாவால்.

''தாம்பூலம் இல்லையா?'' கேட்டுக்கொண்டார்நாயக்கர்.

''கடைக்குப் போன பையன் இப்போ வந்துடுவாங்க''-சாமிக்கண்ணு.

''வீட்டின் பின்புறமாக கொண்டுவந்த தாம்பூலத்துடன் பாக்கிட்டு நிரப்பிய தட்டைக் கொண்டுவந்து நாயக்கர்முன் வைத்தாள் முத்தம்மா.

''பேச்சை ஆரம்பிக்கலாமா'' கேட்டார் நாயக்கர்.

புன்முறுவலைப் பதிலாகத் தந்தார் சாமிக்கண்ணு.

''கல்யாணம்னு பேச ஆரம்பிச்சாலே ஊர்ல நாட்டுல என்ன பேசிக்கிறாங்க மாப்பிள்ள யாரு பொண்ணுயாருன்னு கேட்கிறதுக்கு முன்னால நகை எவ்வளவு வரதட்சணை எவ்வளவுனுதான் கேக்கிறான்க. சாதாரண பெட்டிக் கடை வச்சிருப்பவன்கூட ஐயாயிரம் ரொக்கம் கொடுக்கியா ஐந்து பவுன் நகை போடுறியானுதான் கேக்கிறான். அத்தகையகாலம். இதுல பையனோ வாத்தியார் வேலைக்குப் படிச்சிருக்கான்...'' இப்படி சொல்லிக் கொண்டிருந்தார் நாயகர்.

சாமிக்கண்ணுவின் பார்வை



படிப்பகம்

www.padippakam.com

வீட்டின் உட்பகுதியை ஊடுருவியது.

வீட்டினுள்ளிருந்து வெளியே பார்வையை பதித்த முத்தம்மாளின் விழிகள் மட்டுமட்டுமல்லாமல் கைகளும் என்ன கேக்கப் போறாரோ என்ற அச்சத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தது.

''பொண்ணோட அப்பாட்ட கேளுங்க பொண்ணுக்கு என்ன செய்வாகன்னு'' பக்கத்திலிருந்து சொன்னார் மாப்பிள்ளையின் உறவினர் ஒருவர்.

''என்னத்த சொல்லச் சொல்றிய நாய்க்கர் அய்யா. எம் பொண்ணையும்தான் வாத்தியார் வேலைக்கு படிக்க வச்சிருக்கேன்''.

''இங்க யாரும் சாமிக்கண்ணு, அவங்க கேக்கிறதனைத்தையும் அப்படியே நீர் செய்யணும்னு நான் சொல்லப்போறதுமில்ல. நீரு முடியாதுன்னு சொல்றத அப்படியே ஏத்துக்கணும்னு அவங்கள கேட்டுக்க போறதுமில்ல ஒம்ம பொண்ணுக்கு வேல வாங்க வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் அவங்களே செஞ்சிக் கிடுவாங்க! அதற்கான செலவை யாவது நீர் ஒத்துக்க முடியுமா?''

''கொஞ்சம் பொறுங்க'' என்றவாறு வீட்டினுள் சென்றார் சாமிக்கண்ணு.

''என்ன செலவாகும்னு கேட்டீங்களா? அதுக்குள்ள தடுதிப்னு எந்திரிச்சி வந்துட்டீயள''

''அஞ்சு ரூபாயானாலும் ஐயாயிரம் ரூபாயானாலும் சரி வேலைக்கான செலவை நாம ஒத்துக்கலாமா!''

''ஒத்துக்கலாம் ஆனா பணத்துக்கு வழி...''

''கோரங்காட்டுல நாற்பது ஐம்பது பன நின்னதா ஞாபகம் தாத்தா காலத்துலே உள்ளது. தூரம் எட்டிப் போனதனால அத பருவ காலங்கள்ல பயன் படுத்தவும் முடியல. கிடைக்கக் கூடிய பொருட்களை கொண்டு வந்து சேர்க்கவும் முடியல!''

''அதனால!''

''இந்த கல்யாண காரியத்துக்கு இல்லாதது இருந்து எதுக்கு?''

''அப்போ சொல்லி உடுங்க!''

முன்வந்து அமர்ந்த சாமிக் கண்ணு ''நாயக்கர் அய்யா நீங்க சொன்னபடி வேலைக்கு ஆகும் செலவ நாங்க ஒத்துக்கிறோங்க!'' என்று சம்மதம் தெரிவித்தார்.

தாம்பூலம் பரிமாறப்பட்டது.

திருமணத்திற்கான நாள் பார்ப்பதற்காக முருகேஸ்வரியின்



படிப்பகம்

www.padippakam.com

ஜாதகமும் வேலை வாங்குவதற்காக ஆசிரியர் பயிற்சி பெற்ற சர்டிபிகேட்டும் சாமிக்கண் மூலம் நாயக்கர் கைக்கு மாறியது.

புன்முறுவலுடன் விடை பெற்றுத்திரும்பினர் வந்தவர்கள்.

பணத்தை எப்படி தயாரிப்பது என்ற தயக்கத்துடன் படுக்கச் சென்ற சாமிக்கண்ணு முத்தம்மாள் இருவரது இதயங்களும் பல திசை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன.

வரவிருக்கும் புதிய உறவை எதிர்நோக்கிய ஏக்கம் கலந்த முருகேஸ்வரியின் இதயமும் எண்ணக் கனவுகளும் கண்களை உறக்கம் கொள்ள வைக்க சிரமப்பட்டன.

தான் எதிர்பார்த்த அடுத்த நாள் வந்தது காலைக்கடன்களை முடித்து மாப்பிள்ளையின் உறவினர் கண்ணுசாமியின் வரவை எதிர்பார்த்திருந்தார் நாயக்கர்

வாசற்படிகளைக்கடந்து கால்களை உள்நோக்கி நடக்க விடும் போதே ''அய்யா அப்பவே ரெடியாயிட்டிய போலிருக்கு'' சொல்லிக் கொண்டார் கண்ணுசாமி.

''இங்கபாரு கண்ணுசாமி இந்த நாராயணசாமிநாயக்கர் ஒரு காரியத்துல இறங்கமாட்டார் இறங்கினா முடிக்காம உட்கார மாட்டார்'' முறுவலித்தவாறு கூறிக்கொண்டார் நாயக்கர்.

''அவ்வளவு தெரியாமலாங்க இருக்கோம் ஒங்கள பத்தி''.

''புறப்படலாமா,'

''புறப்படலாங்க''

''மொதல்ல எங்க போறது ஜோஸ்யர் வீட்டுக்கா சேர்மன் வீட்டுக்கா?''

''மொதல்ல வேல அப்புறந்தானங்க கல்யாணம்''

''அப்போ மொதல்ல சேர்மன் வீட்டுக்குதான் போகணும்''

''ஆமாங்க''

''பொழைக்கத் தெரிஞ்ச புள்ளைங்கப்பா நீங்க'' புன்னகைத்து கூறியவாறு கண்ணுசாமி பின்தொடர சேர்மன் வீடு நோக்கி முன்னால் சென்றுகொண்டிருந்தார் நாயக்கர்.

''சேர்மன் யாரு தெரியுமில்ல''

''ஏதே ஒங்களுக்கு . சொந்தம்னு சொல்லிகிட்டாங்க''

''வேற யாருமில்ல உடன் பிறந்தவ பையன்தான்''



படிப்பகம்

www.padippakam.com

உரையாடலின் போக்கு தூரத்தைக் குறைத்தது.

சேர்மன் வீட்டின் முன்னால் கட்டியிருந்த நாய் "லொள்......" லொள்'' என்று குரைத்து வர வேற்றது நாயக்கரையும் கண்ணுசாமியையும்.

"நாயின் குரல் கேட்டு வெளியே எட்டிப்பார்த்தார் சேர்மன் அய்யலுசாமி.

"அவுகதான சேர்மன்'' கேட்டார் கண்ணுசாமி

"ஆமா''

"வாங்கமாமா சொல்லி உட்டிருந்தா வண்டி அனுப்பி வச்சிருப்பேனே''

—அதெல்லாம் எதுக்கு வீண் சிரமம்

"அப்படி ஒக்காருங்க'' என்று இருக்கையை சுட்டிக் காட்டினார் அய்யலுசாமி

சாய்வு நாற்காலியில் அமர்ந்து சாய்ந்து கொண்டார் நாயக்கர்

தயங்கிக் கொண்டிருந்தார் கண்ணுசாமி

"ஒக்காரு கண்ணுசாமி''

தயங்கி தயங்கி ஒக்கார்ந்தார் கண்ணுசாமி

"சாப்பிட ஏதாவது?'' கேட்டார் அய்யலுசாமி

"நான் ஒரு முக்கியமான வேலையா வந்தேன். நீ நினைனைச்சா நிச்சயமா முடியுங்கிற நம்பிக்கை எனக்கு உண்டு''

"என்னமாமா விவரம்?''

"நமக்கு வேண்டிய ஒரு குடும்பத்து பொண்ணுக்கு வாத்தியார் வேல போட்டு கொடுக்கணும்''

"இதுக்கு நீங்க வேல சோலிய போட்டுட்டு வரணுமா யாருட்டயாவது சொல்லிஉடுறதுதான''

"சொல்லி உடலாம் அய்யலு. இது உறுதியானாதான் கல்யாணம் உறுதியாகுங்கிற ஒரு இக்கட்டான நிலம''

"ஓ......அப்படியா அப்படின்னா அந்த பொண்ணோட சர்டிபிகேட் இருக்குதா?''

"அத எடுத்து கொடுக்கிறாய?'' கண்ணுசாமியை நோக்கி கேட்டுக் கொண்டார் நாயக்கர்.

தான் வைத்திருந்த பையினுள்ளிருந்த சர்டிபிகேட்டை எடுத்து சேர்மனிடம் கொடுத்தார் கண்ணுசாமி

சர்டிபிகேட்டில் பதித்திருந்த மார்க்குகளை ஒருமுறைக்கு பல முறை பார்த்த சேர்மன் மாமா நல்ல மார்க்கு எடுத்திருக்கு.



படிப்பகம்

www.padippakam.com

பொண்ணு ரொம்ப இண்டலி ஜன்டா இருக்கும் போலிருக்குது ஏ.இ.ஒ வை பார்த்துப் பேசி உடனே சொல்லி அனுப்பு கிறேன்''

''ஒனக்கு அந்த சிரமம் வேண் டாம்! மாலையில் இவர அனுப்பி வைக்கிறேன் அய்யலு.''

''ஆகட்டும் மாமா!''

விடை பெற்று வெளியேறினர் நாயக்கரும் கண்ணுசாமியும்.

காலை உணவை முடித்து பஞ்சாயத்து யூனியன் அலுவல கத்தின் பல்வேறு பகுதிகளிலும் சென்று தனது இருக்கையில் சென்றமர்ந்தார் சேர்மன்.

அமர்ந்தவாறு மேஜையில் மீதி ருந்த பொத்தானை அழுத்தியது சேர்மனின் வலது கரம்.

மணியின் ஒலி கேட்டு வேக மாக வந்து விவரம் கேட்டார் கடைநிலை ஊழியர்.

''ஏ.இ.ஒ. ஆபீஸ்ல தான இருக்கிறாரு''.

''ஆமாங்க!''

''நான் வரச் சொன்னதா சொல்லிட்டு வர்றியா?''

''ஆகட்டுங்க!''

கடைநிலை ஊழியர் சென்ற சிறிது நேரத்தில் சேர்மன் அலு வலகத்தை நெருங்கும்போதே ''கூப்பிட்டீங்களா?'' என்று கேட்டுக் கொண்டார் ஏ.இ.ஒ.

''ஆமா அப்படி ஒக்காருங்க'' இருக்கையில் அமர்ந்த வாறே விவரம் தெரிஞ்சிக்கலாமா எனக் கேட்டுக் கொண்டார் ஏ.இ.ஒ.

''சொல்றேன் நம்மயூனியன்ல டீச்சர் போஸ்ட் எல்லாம் ஃபுல் லப் ஆயிட்டா ரிட்டேயர்மென்ட்! போஸ்ட் ஏதும் இருக்கா!''

''மூணு போஸ்ட் வர இருக் குங்க நமக்கு வேண்டியவங்க யாரும் டிரயினிங் முடிச்சி வந் திருக்காங்களா?''

''ஆமா!''

''எப்போ பாஸ்பண்ணுனது?''

இதோ இருக்குங்க சர்டிபிகேட். என்றவாறு முருகேஸ்வரியின் சர் டிபிகேட்டை ஏ.இ.ஒ.விடம் கொடுத்தார் சேர்மன்.

சர்டிபிகேட்டை வாங்கிய ஏ.இ.ஒ. மார்க்குகளுடன் மறு பக்கத்தையும் புரட்டி பார்த் தார். அந்தப் பகுதியில் அச் சிடப்பட்டிருந்த சில வாசகங் கள் அவரது கண்களில் பளிச் சிட்டன.

''என்ன இது சீல் குத்தின மாதிரி இருக்குது?'' கேட்டார் சேர்மன்.



படிப்பகம்

www.padippakam.com

தனது பார்வையை ஊன்றிப் பதித்த ஏ.இ.ஓ. பார்வையை சற்று திருப்பி சேர்மன்மீது ஓட விட்டபோது தயக்கம் கலந்து வெளிப்பட்டது அந்த பார்வை.

"ஏன் அதுல என்ன எழுதியிருக்கு?"

"இது அங்கீகாரம் பெறாத டிரயினிங் ஸ்கூல்ல படிச்சிருக்குங்க."

"அப்படின்னா!"

"அதுக்கு வேல போட்டு கொடுக்கிறதுல சில சிரமங்கள் இருக்குங்க!"

"அப்படியானா பரீட்சை எப்படி எழுத முடிஞ்சுது?"

"கோர்ட்ல ஒரு ரிட்ட தாக்கல் செய்து கொண்டு பரிட்சை எழுத அனுமதி வாங்கிக்கிடுறது! அப்புறம் பின்னால இப்படி ஒரு விவரத்தையும் எழுதிக்கிடுறதுங்க" விவரம் சொன்னார் ஏ.இ.ஓ.

"அடப்பாவிங்களா இந்த விவரம் தெரியாம பெத்தவங்களும் புள்ளைங்கள படிக்க வச்சி நகை நட்டுகளோட அண்டா குண்டாகளையுமில்லா வித்து செலவழிச்சிப் புடுறாங்க."

"ஆமாங்க அவங்கள சொல்லி என்ன பண்ண? நாட்டுல ஏற்பட்டுள்ள வேலை இல்லா திண்டாட்டத்தின் கோர தாண்டவம் அவங்கள இந்த நிலைமைக்கு ஆளாக்கி இருக்குங்க" எனகூறியவாறு சர்டிபிகேட்டை சேர்மனிடம் கொடுத்தார் ஏ.இ.ஓ.

"சர்டிபிகேட்டைப் பெற்றுக் கொண்ட சேர்மன் முகம் தயக்கத்தின் சாயலை பிரதிபலித்தது. விடைபெற்றுச் சென்று தனது வேலைகளைத் தொடர்ந்தார் ஏ.இ.ஓ.

"நாட்டுல இப்படியும் விவரம் புரியாம ஒக்காந்துட்டிருக்காங்களா? என்ற வினாவிற்கான விடை காணுவதில் சிறிது நேரம் சிந்தனையை ஓட்டவிட்டாலும் ஒரு சில விநாடிகளில் கவனத்தைத் திருப்பி தனது பணிகளைத் தொடர்ந்தார் சேர்மன்.

பகலவன் மேல்வானத்தில் கீழ் நோக்கி சென்றுகொண்டிருந்தான்.

வீடு வந்த சேர்மன் பின்புறம் உள்ள வேப்ப மரத்தடியில் ஈஸி சேரில் சாய்ந்து படுத்து சிந்தனையை வேகமாக ஓடவிட்டுக் கொண்டிருந்தார்.

"ஐய்யா இருக்காங்களா?" வெளியில் நின்றவாறு கேட்டார் கண்ணுசாமி.

விட்டில் உட்பகுதியில் நின்ற குழந்தை ஒன்று முன் வந்து



படிப்பகம்

www.padippakam.com

வாசற் கதவுகளைத் திறந்து விட்டு சேர்மன் அமர்ந்திருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டியது.

கண்ணுசாமியைப் பார்த்த வுடனே ''நீங்க காலையில மாமாவோட வந்தவங்கல்ல!''

''ஆமாங்க அந்தக் காரியம்'' முடிக்காம தலையைச் சொரிந் தார் கண்ணுசாமி.

''இலை நிறைய பலவகைக் கூட்டுகளுடன் சாதம் படைத் தும் அதை எடுத்து உண்ண முடி யாத நிலையில் இருக்குங்க அந்த சர்டிபிகேட்.

திடுக்கிட்டு விவரம் கேட்டார் கண்ணுசாமி.

சர்டிபிகேட்டின் செயலற்ற நிலையை எடுத்துச் சொன் னார் சேர்மன்.

''நல்ல வேளங்க ஏமாந்திட பார்த்தோம்!''

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்ல ஏதாவது சாத்தியம் இருக்குமானு பாருங்க!''

வேக வேகமாக நாயக்கர் வீடு நோக்கி நடந்தார் கண்ணு சாமி.

வீட்டில் நாயக்கர் இல்லாத தால் முன்னிலும் வேகமாக ஓட்டமும் நடையுமாக சாமிக் கண்ணு வீட்டை சென்றடைந் தார் கண்ணுசாமி.

''என்னங்க ஏன் இப்படி பட படத்து வந்து நிக்கீங்க! என்ன நடந்தது'' விவரம் கேட்டார் சாமிக்கண்ணு.

''என்ன நடக்கணும் பாருங்க இந்த சர்டிபிகேட்ட! சர்டிபி கேட்டா இது'' கூறியவாறு கையிலிருந்த சர்டிபிகேட்டை வீட்டின் உள்பகுதி நோக்கி விட் டெறிந்தார் கண்ணுசாமி.

விழுந்த சர்டிபிகேட்டை குனிந்து எடுத்துக் கொண்டிருந் தாள் முருகேஸ்வரி.

சற்று விவரமா சொல்லுங் கையா!''

''சந்திரமண்டலத்துக்கு ராக் கெட் அனுப்பப்பட்டு கால் நூற் றாண்டுக்கும் மேல் ஆயிட்டுங்க'' கூறிவிட்டு வீதி நோக்கி நடந்து கொண்டிருந்தார் கண்ணுசாமி.

விவரம் புரியாமல் திகைத்து நின்ற கண்ணுசாமி சென்ற திசைவழியில் கண்களில் நீர் மல்க தங்களது பார்வையை ஓட விட்டுக் கொண்டிருந்தனர் சாமிக்கண்ணுவும் அவரது குடும் பத்தினரும்.

---

முகப்பு ஓவியம்: கவிஞர் இளவேனில்



படிப்பகம்

www.padippakam.com

# கம்பீரமாகக் கால்கள் பதியும்

எழில் வேந்தன்

அணுவுக்குள் இருக்கும்
ஆற்றலைப் போல
மிகச்சிறு விதைக்குள்
அடங்கியிருந்த
விசுவரூபம் நான்.

ஆலமரம்-
அற்புத விருட்சம்!

விழுதுகள் தான்-என் வேர்கள்
காற்றில் ஆடினாலும்
கம்பீரமாகக் கால்கள் பதிக்கும்.

என்
பரந்த நிழலுக்காகவும்
பழத்தின் சுவைக்காகவும்
நிறைய பறவைகள்
நேசமாய் வருகின்றன.

எல்லா பறவைகளும்
இங்கு வந்து சேரலாம்—
உழைக்கும் பறவைகளுக்கு
உற்சாக வரவேற்பு.



படிப்பகம்

www.padippakam.com

அவர்களின்
ஒவ்வொரு உற்சவமும் ...என்
கிளைகளிலே அரங்கேற்றம்
ஆனால்......

கழுகுகளையும் கோட்டான்களையும்
கூடுகட்ட விடுவதில்லை.
கட்டணம் செலுத்தினாலும்
கட்டாயம் அனுமதியில்லை.

சில பறவைகள்...
எங்கிருந்தோ வந்து
கனிகளை ருசித்தபின்
எழும்பிப் பறந்து—
என் தலை மீதே
எச்சமிட்டு செல்கின்றன.

சில...
இங்கே பழம் தின்று
பறந்து சென்று
எங்கோ கொட்டை போடுகின்றன.

சிலவோ...
சிறகுகள் முளைக்கும்
சின்னப் பறவைகளின்
பிள்ளைப் பருவப் பேச்சில்
பிழை காண முயன்று
முளைக்கும் சிறகுகளை
மொட்டையடிக்க முனைகின்றன.

வேறு சில...
கொஞ்சம்...வளர்ந்த பறவைகளின்





படிப்பகம்

www.padippakam.com

வனத்தை வர்ணித்து
"வா அந்தப் பக்கம் போகலாம்;
அமர்ந்து சிலாகிக்காலம்' என்று
அழைக்கின்றன.
மரங்கொத்திப் பறவைகளை
மன்னிக்க இயலாது-அவை

என்
ஆடையை விரித்து
அசிங்கப் படுத்துவதில்
ஆனந்தம் அடைகின்றன.

பொந்துகளைச் சிருஷ்டித்துப்
பாம்புகளை அழைத்துவரப்
பயணப் படுகின்றன பாவம்?
பாட்டுப் பறவைகளுக்கு
பழம் தின்னக் கொடுக்கும்
ஏழை மரம் நான்.

ஆனால்
வாழையைப் போல
வளைந்து கொடுக்கும்
வாய்ப்பு எனக்கில்லை.
என்னைப் பிடுங்க முடியவில்லையே
என்று
புயல்கள் என்னிடம் வந்து
புலம்பிவிட்டுப் போகின்றன.
காற்றுக்காகவா...நான்
கவலைப் படப் போகின்றேன்?

விழுதுகள் தான். என் வேர்கள்-
காற்றில் ஆடினாலும்
கம்பீரமாகக் கால்கள் பதிக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# திருக்குறளில் அறிவியல் அணுகுமுறை

பா. வீரமணி

திருக்குறளுக்கும் அறிவியலுக்கும் தொடர்பு உண்டா? திருக்குறளில் அறிவியல் உண்டா? எனச் சிலர் ஐயுறலாம்! வினவலாம்! வியக்கலாம். திருக்குறளில் சில அறிவியல் கருத்துக்களும் உண்டு. அறிவியல் சார்ந்த கருத்துக்களும் உண்டு. அறிவியல் அணுகு முறையில் (scientific Method) கூறிய கருத்துக்களும் உண்டு. அறிவியல் முழுமையாக தோன்றாத காலத்தில் வாழ்ந்த வள்ளுவரால், அறிவியல் கருத்துக்களையும், அறிவியல் அணுகுமுறையையும் எப்படிக் கூறமுடியும் என வினா எழுப்புவது நியாயமானதே. அறிவியல் கருத்து என்பது என்ன? மக்களாலோ, அறிஞர்களாலோ சிந்திக்கப்படுகிற ஒரு கருத்து வெறும் நம்பிக்கையினால் மட்டும் நிறுவப்படாமல் சோதனை மூலம் அல்லது காட்சியின் மூலம் நிறுவப்படுமேயானால் அது அறிவியல் கருத்தாகிறது. அறிவியல் அணுகுமுறை என்றால் என்ன? ஒரு கருத்தை விருப்பு வெறுப்பு அற்று, நடுநிலையோடு உண்மையை நோக்கி வருங்காலத்திற்குப் பொருந்த கூறப்படுமேயானால், அக்கருத்து அறிவியல் அணுகு முறையைச் சார்ந்த கருத்து எனலாம். வள்ளுவரிடத்தில் அறிவியல் அணுகுமுறையைப் பல இடங்களில் காண முடிகிறது. வள்ளுவரிடத்தில் காணப்படும் பொதுமை நெறி கூட அறிவியல் அணுகுமுறையை சார்ந்தது என்றே கூறலாம். வள்ளுவர், தாம் எழுதிய திருக்குறளில், நாடுபற்றிப் பேசுவார். ஆனால் எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடமாட்டார். ஏன்? தன் தாய் நாட்டின் பெயரையும்கூட குறிப்பிட மாட்டார். சொல்லின் வளத்தைப் பற்றிப் பேசுவார். ஆனால், அந்த சொல்லின் வளத்திற்கு மூலமான பிற மொழிகளையோ, தேனினுமினிய செந்தமிழையோ பெயரிட்டுப் பேசமாட்டார். மன்னர்களைப் பற்றி பேசுவார். மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிட மாட்டார். நீரைப் பற்றிப்



படிப்பகம்

www.padippakam.com

பேசுவார். ஆனால், அந்த நீர்க்குழுலமான ஆறுகளின் பெயரைக் குறிப்பிட மாட்டார். கடலைப் பற்றிப் பேசுவார். கடலின் பெய ரைக் கூற மாட்டார். கல்வி பற்றிப் பேசுவார். ஆனால் இந்தக் கல்விதான் என்று பெயரிட்டுப் பேசமாட்டார்.

கடவுளைப் பற்றிப் பேசுவார். ஆனால் கடவுளின் பெயரைக் குறிப்பிட மாட்டார். நூல்பற்றிப் பேசுவார். எந்த நூலின் பெயரை யும் குறிப்பிட மாட்டார். இவற்றில் வியக்கத்தக்கது என்ன வெனில், கடவுளின் பெயரைக் குறிப்பிடாததே ஆகும். இந்த ஒன்றைக் கொண்டே, வள்ளுவரை உலக உணர்வு கொண்ட பொதுமை நெறிச் சிந்தனையாளர் எனப் பகரலாம். அதனா லன்றோ அனைத்துச் சமயத்தினரும், திருக்குறள் எம் சமயத் தைச் சார்ந்ததேயாகும்'' எனச் சொந்தம் கொண்டாடுகின்றனர். வள்ளுவரிடத்தில் காணப்படும் இப்பொதுமை நெறி காலம் கடந்து சிறந்து நிற்கும் பெற்றி வாய்ந்தது எனில் மிகையன்று.

> ''பழங்காலத்தில் மனிதன் மரத்தைப் பார்த்து முத லில் அதற்கு வேம்பு, ஆல், அரசு என்று தனித்தனியாகப் பெயர் வைத்தான். அதற்குப் பின்னர் தான் அவை அனைத் தும் மரம் என்ற ஒரு பொதுக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற உண்மையைக் கண்டான். விலங்குகட்கு முதலில் சிங்கம், புலி கரடி என்று தனித்தனிப் பெயர்களைத்தான் கண்டான். பின்னர்தான் அவை அனைத்தும் விலங்கு என்ற ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை என்று கொண்டு இவை அனைத்தையும் குறிப்பிடும் விலங்கு என்ற சொல்லை உருவாக்கினான். எனவே, அறிவியல் பொறியியல் துறைக ளாயினும், சமுதாயத்துறையாயினும் விதிகளைப்பொதுமைப் படுத்துவது அந்தத் துறையின் அறிவு வளர்ச்சியின் உயர்ந்த நிலையாகும்.
>
> **தனித்தனிப் பொருள்களுக்கும் விதிகள் காண்பது அறி வின் முதல்நிலை. எல்லாப் பெருள்களுக்கும் பொதுவான விதிகள் காண்பது ஆய்வின் முதிர்ந்த நிலை.''**

(டாக்டர். வா. செ. குழந்தைசாமி வாழும் வள்ளுவம், பக் 48-49) என்று, அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தரும், உலகமறிந்த விஞ்ஞானியுமான வா. செ. குழந்தைசாமி கூறு



படிப்பகம்

www.padippakam.com

வதிலிருந்து வள்ளுவரின் பொதுமை நெறியை நன்கு உய்த்து உணரலாம். இந்தப் பொதுமை நெறி அறிவியல் அணுகுமுறையைச் சார்ந்ததேயாகும்.

## எது அறிவு?

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"—355

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"—423

ஆகிய குறள்கள் அறிவியல் துறைக்குத் தேவையான மிக இன்றியமையாத விதிகள் எனக் கூறலாம். ஒரு காலத்தில் அணுவைப் பிளக்க முடியாது என்று டால்டன் எனும் விஞ்ஞானி கூறினார். அது, சிலகாலம் உண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின்பு ருதர்ஃபோர்டு, அதனை உண்மையாக ஏற்றுக் கொள்ளாமல், சோதனைகள் மூலம் மெய்ப்பொருள் காண விழைந்தார். அதன் பயனாக, அணுவைப் பிளக்க முடியும் எனும் கருத்திற்கு வந்தார். டால்டன் எனும் பெரும் விஞ்ஞானி கூறிவிட்டார். அது உண்மையாகத்தான் இருக்கும் என்று ருதர்ஃபோர்டும் எண்ணி வாளா இருந்திருப்பாரேயானால், அணுக் கொள்கை இன்றைய வளர்ச்சியை அடைந்திருக்க முடியாது. எனவே, மெய்ப்பொருள் காண வேண்டும் எனும் நோக்கும், விருப்பும் ருதர்ஃபோர்டுக்கு இருந்ததைப் போன்று விஞ்ஞானிகள் பலர்க்கு இருந்ததால்தான், விஞ்ஞானம் இன்றைய வளர்ச்சியை அடைந்திருக்கிறது எனலாம். இது, அறிவியலுக்கு மட்டுமேயன்றி தத்துவம், உளவியல், சமூகவியல், இலக்கியம் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் பயன்படும் விதிகளாகும்.

"அறிவுடையார் ஆவது அறிவார்"—427

"அறிவுடையார் எல்லாம் உடையார்"—430

எனும் குறள்களும் அறிவியலைச் சார்ந்த கருத்துக்களேயாகும். (எ-டு.) (இக்கட்டுரையாசிரியனின் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' எனும் கட்டுரையைப் பார்க்க) வள்ளுவரைப்



படிப்பகம்

www.padippakam.com

போன்று அக்காலத்தில் அறிவை வானளாவப் புகழ்ந்து பேசியவர் வேறொருவர் இல்லையெனத் துணிந்து கூறலாம். எந்தக் கருத்தையும் ஆழ்ந்து நோக்கி முரண்பாடின்றி, நடுநிலையோடு ஆய்ந்து வருங்காலத்திற்கும் பொருந்துமாறு கூறும் நுண்மாண் நுழைபுலம் கொண்டவர் வள்ளுவர் எனலாம்.

"இயற்கையின் நிகழ்வுகளில் வாழ்வியலில் உண்மையைக் காண்பதற்காக இன்றைய ஆய்வுலகம் பயன்படுத்தும் நெறிமுறையை அறிவியல் அணுகுமுறை என்று கூறலாம். இது, ஏதோ அறிவியல் துறைக்கு மட்டும் உரித்தானது அன்று. அறிவியம் வேறு; அறிவியல் அணுகுமுறை வேறு. அறிவியலைக் கற்றவர்கள் எத்தனையோ பேர் அறிவியல் அணுகுமுறை இல்லாதவர்களாக இருக்கலாம். அறிவியல் துறைத் தொடர்பு இல்லாத எத்தனையோ பேர் அறிவியல் அணுகுமுறை உள்ளவர்களாக இருக்கலாம்.

"அறிவியல் அணுகுமுறை" (Seientific Method) என்பது வரையறுக்கப்பட்டு இடம் பெற்றது 17-ஆவது நூற்றாண்டில் இருந்துதான். அந்தக் காலப் பகுதியிலிருந்து உண்மை காண்பதற்கு அறிவியல் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதோடு, அதற்குக் கிட்டத்தட்ட இலக்கணமும் வகுக்கப்பட்டது. இன்று அது ஆய்வுக் கருவியாகப் பலராலும் பயன்படுத்தப்படுகிறது. பழைய காலத்தில் இருந்த மேதைகள் பலர், இயற்கையிலேயே அறிவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தும் சிந்தனை வளமும் தெளிவும் பெற்றிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த கால எல்லையைத் தாண்டி மரபுகளையும் மீறி எதிர்காலத்திற்குள்ளும் ஊடுருவும் திறனோடு பிரச்சனைகளை அவர்களால் அணுக முடிந்தது. இந்தக் கூறுபாடு வள்ளுவர் குறளில் பரவியிருப்பதைக் காணலாம்."

(வா. செ. குழந்தைசாமி, வாழும் வள்ளுவம் பக். 68-69)

எனும் அரிய விளக்கத்தால் வள்ளுவர் அறிவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தியவர் என்பதை தெள்ளிதின் உணரலாம். அப்படியெனில், வள்ளுவர் பயன்படுத்திய அறியல் அணுகுமுறையை அவருடைய குறளிலிருந்து விளக்க முடியுமா எனக் கேட்கலாம். அதனை இப்பொது பார்க்க முனைவோம்.



படிப்பகம்

www.padippakam.com

## வள்ளுவரின் அரசியல் கொள்கை

வள்ளுவர் பொருட்பாலில், அரசரைப் பற்றியும், அரசை பற்றியும் அரசாட்சியைப் பற்றியும் பலபடக் கூறுவதைக் காண லாம். அன்றைய முடியாட்சியில் (இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு) வள்ளுவர் கூறிய அரசியல் கருத்துகள், சிலஅடிப்படைக் கருத்துகள் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த இன்றைய முதலாளித் துவ ஆட்சிமுலறைக்கும் ஏன் சோசலிச ஆட்சிமுறைக்கும் இன்றி யமை யாதவையாக விளங்குவதை உணரமுடியும். அரசியல் இன்று ஓர் அறிவியல் கொள்கையாக (Political Seience) மாறி யும் கூட வள்ளுவருடைய அரசியல் கருத்துக்கள் கால வெள்ளத் தைக் கடந்து இன்றைய நூற்றாண்டிற்கும் வழிகாட்டுவதைக் காணலாம். குறிப்பாக, பொருட்பாலில் வள்ளுவர் குறிப்பிடும் படைமாட்சி (படையின் நன்மை அல்லது சிறப்பு) படைச் செருக்கு (படையினது வீரச் சிறப்பு) பகைமாட்சி (பகை கொள் ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல்) பகைத் திறம் தெரிதல் (பகைவர்மாட்டுச் செய்யும் திறம் பற்றிக் கூறுவது) ஆகிய அதிகாரங்களும் அவற்றில் உள்ள பல குறள்களும் இற்றைக் காலத்திலுள்ள அனைத்து ஆட்சி முறைகளுக்கும் சிறந்த போர்தந்திரங்களாக (Strctegy) விளங்குவதை நன்கு உணரலாம். எல்லாவற்றிலும் அறத்தை வற்புறுத்துபவர் வள்ளு வர், "அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை", ஒல்லும் வகை யான் அறவினை ஓவாதே, 'அறத்தான் வருவதே இன்பம்'' செயற்பால தோரும் அறனே'என்று அறத்தைப் பல்லாற்றானும் சிறப்பித்துக் கூறி, கொல்லாமையையும், இன்னா செய்யாமை யையும், அருளுடைமையையும் பாடிய வள்ளுவர், படைபலத் தைப் பற்றிப் பெரிதும் ஏன்பாட வேண்டும்?, என்ற ஐயம் பலர்க்கு ஏற்படலாம். உண்மையே அறத்துப்பாளில் கூறப்படு கின்ற அறம் சிறப்பாக தனிமனித வாழ்க்கைக்கு வற்புறுத்தியது. ஆனால், பொருட்பாலில் உள்ள படைமாட்சி போன்ற அதிகாரங் கள் நாட்டுத் தலைமைக்கு அல்லது அரசமைப்புக்குக் கூறிய அறமெனில் மிகையன்று. சுருங்கக் கூறின் மனித உடலுக்கு நோய்வராமல் தடுப்பதற்கு மருந்து தேவைப்படுவது போல், நாட்டில் குழப்பத்தை கலகத்தை அடக்கவும், அந்நியப் படை யெடுப் பிலிருந்தும் அந்நிய தலையீட்டிலிருந்தும் தன்னாட்டு மக்களையும் அரசையும் காப்பாற்றப் மருந்துபோன்று பயன்படு



படிப்பகம்

www.padippakam.com

வதே படைபலம் எனலாம். நோய்வரும்போது மட்டும் நாட்டைக் காப்பதே படையாகும் என்பதை உணர வேண்டும். எனவே, ஒருநாட்டின் பாதுகாப்பிற்கு சிறந்த படை மிகமிகத் தேவை என்பதால் வள்ளுவர் படையைப் பற்றிப் பெரிதும் பேசுகிறார் எனலாம்.

இந்தியா, சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளுக்குப்பின், இந்திய நாட்டுத் தலைவர்களில் பலர், அமைதியையும் சமாதானத்தையுமே இந்தியா நாட வேண்டுமென்றும், எக்காரணத்தைக் கொண்டும் ராணுவத்தைப் பெருக்கக் கூடாலதன்றும் கூறிவந்தனர். ஏன்? பத்தாண்டுகளுக்கு முன்பு கூட நம் தலைவர்களில் சிலர் அவ்வாறே பேசி வந்தனர். அமைதியும் சமாதானமும் மிகமிக முக்கியம் தான் இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் படைபலத்தைப் பெருக்காமல், வெறும் அமைதியையும் சமாதானத்தையும் பேசினால், அதனை எந்த நாடும் காதில் போட்டுக் கொள்ளாது. அதற்கு இன்றைய உலக நாடுகளின் நடைமுறையே சிறந்த சான்றாகும். இதைப் பற்றி வள்ளுவரின் அணுகுமுறை யாது?

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும் பகைவர்கண் பட்ட செருக்கு—878 செய்யும் வகையையறிந்து தம்மை வளமைப் படுத்திக்கொண்டு தற்காப்புத் தேடிக்கொண்டால் பகைவரிடத்தில் ஏற்பட்ட செருக்குத் தானாகவே அழியும். (டாக்டர் மு. வ.)

எந்தவொரு நாடும் மிகச் செம்மையாகவும் வளமையாகவும் படைபலத்தை வைத்துக் கொண்டால்தான் தன் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பற்ற முடியும்.

அந்நிய நாட்டிற்கு அடிமையாகாமல் தலைநிமிர்ந்து நிற்க முடியும். ஒரு நாடு, உள்நாட்டுக் கலவரத்திலிருந்தும் வெளிநாட்டுப் போரிலிருந்தும் விடுபட்டு அமைதியாக வாழ வேண்டின், அந்நாட்டிற்கு வலிவு மிகுந்த படைபலம் இருத்தல் காலத்தின் கட்டளையாகும். உலகில் உள்ள அனைத்து நாடுகளின் போக்கைச் சற்றுக் கூர்ந்து நோக்கினால் இவ்வுண்மை புலப்படும்.

ஒவ்வொரு நாடும் இன்று ராணுவத்தைப் பெருக்க பெருந்தொகையை வாரி இறைப்பதைக் கொண்டே, மேற்கண்ட கூற்று எத்துணை நடைமுறை உண்மை என்பதைத் தெளியலாம்,



படிப்பகம்

www.padippakam.com

1983-ஆம் ஆண்டில் நமது இந்திய நாடு, இராணுவத்திற்காக (வரவு-செலவுத் திட்டத்தில்) ரூ. 6000 கோடியை ஒதுக்கியது. அதே ஆண்டில் இஸ்ரேல் எனும் மிகச் சின்னஞ் சிறுநாடு, தனது பட்ஜெட்டில் இராணுவத்திற்காக ரூ. 14000 கோடியை ஒதுக்கியது. அதே ஆண்டில் அமெரிக்கா தனது பட்ஜெட்டான ரூ. 9,25,500 கோடியில் ரூ. 3,13,400 கோடியை இராணுவத்திற்கு ஒதுக்கியது. அதாவது மொத்த பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பகுதியை அமெரிக்கா இராணுவத்திற்கு ஒதுக்கியது எனலாம். உலகில் போர் ஏற்படுவதைத் தடுத்து, அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட பெரிதும் முயலும் சோவியத் யூனியனும், அமெரிக்காவுக்கு நிகராக இராணுவ செலவைப் பெருக்கி வருவதைக் காணலாம். கூட்டுச் சேரா நாடுகளுக்குத் தலைமை வகித்தும், முக்கியப் பொறுப்பு வகித்து வரும் நமது இந்தியா, இராணுவத்திற்காக இவ்வாண்டில் (90-91)ரூ. 15,750 கோடியை ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகை சென்ற ஆண்டைக் காட்டிலும் (19 9-1990) ரூ. 1250 கோடி அதிகமாக இருப்பதைக் காணலாம். குறிப்பாக, உலக சமாதானத்தை விரும்பும் சோயத்து யூனியன் அமெரிக்காவுக்கு நிகராக ஏன் இராணுவத்தைப் பெருக்க வேண்டும் என நன்கு கற்றறிந்தவர்கள்கூட வினா எழுப்புகிறார்கள். சோவியத்து யூனியன் இந்தியாவைப் போன்றோ, ஏனைய மூன்றாம் உலக நாடுகளைப் போலோ விளங்கி, அமெரிக்காவுடன் உலக சமாதானத்தைப் பற்றிப் பேசியிருக்குமானால், மிகப் பெரும் வல்லரசு நாடான அமெரிக்கா அதனைச் சிறிதும் பொருட்படுத்தியிருக்காது. ஒரு காலத்தில் சோவியத்யூனியனின் சமாதானத்தை அமெரிக்கா பெரிதும் புறக்கணித்ததுண்டு. ஆனால், இன்று சோவியத்துயூனியன் அமெரிக்காவுக்கு நிகராக ராணுவ பலததை வைத்திருப்பதனால் தான், சோவிபத்து யூனிபனின் வேண்டுகோளுக்கு ஏற்ப அமெரிக்கா இறங்கி வருகிறது. எனவே, இன்றைய நிலையில் உலக சமாதானம் ஏற்பட வேண்டுமானாலும்கூட வலிமையான இராணுவ பலம் தேவைப்படுவதைக் காணலாம். இவற்றான் ''வகையறிந்து தற்செய்து தற்காப்ப'' என்று வள்ளுவர் அன்றைய முடியாட்சிக்குக் கூறியது இன்றைக்கும் பொருந்துவதன்றோ!



படிப்பகம்

www.padippakam.com

## படையும் மாற்றமும்

வள்ளுவர் காலத்தில், காலாட் படை, யானைப் படை, குதிரைப் படை ஆகிய படைகள் இருந்திருக்கும். வள்ளுவர் இவற்றில் ஏதாவதொரு படையைப் பெயரிட்டு படைபலத்தைப் பெருக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால், இன்றைய அணு யுகத்தில் அடிப்படை தேவையற்றதாகவும், ஒதுக்க வேண்டிய தாகவும் ஆகியிருக்கும். வள்ளுவர் எதனையும் பெயரிட்டுக் கூறாமல் பொதுமையாகக் கூறியதால், அது காலவெள்ளத்தைத் தாண்டி வாழுகிறது எனலாம். மேலும் மன்னன் தம் படையைப் பெருக்க எந்த வகையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனப் பெயரிட்டுக் கூறுயிருப்பாரேயானால், அந்த வகையும் இன்று சிறிதும் பயனற்றதாக ஆகியிருக்கும். ஏனெனில், இந்நூற்றாண்டிலேயே விமானங்கள் மூலம் நாட்டைத் தாக்குகின்ற வழிமுறை மாறி, இருந்த இடத்திலிருந்தே ஏவுகணைகள் (Missiles) மூலம் தாக்கும் முறை வளர்ந்திருப்பதைக் காணலாம். இப்படி ஒவ்வொன்றிலும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டுதான் வருகிறது. இப்படி மாற்றம் ஏற்படுவதைப்போல், அக்காலத்திலும் மாற்றங்கள் ஏற்படுவதை வள்ளுவர் கூர்ந்து நோக்கியிருப்பார். எனவே, மாற்றம் ஏற்படுகின்ற மனித சமூகத்தில், எதனையும் பெயரிட்டுக் கூறாமல் பொதுமையாகக் கூறினால்தான் எதுவும் காலம் கடந்து நிற்கும் என்று வள்ளுவர் எண்ணியிருக்கலாம். அதனாலன்றோ, கடவுள், கல்வி, நாடு, மன்னன், நீர், கடல், படை ஆகியவற்றைப் பெயரிட்டுக் கூறாமல், காலம் கடந்து நிற்கும் வண்ணம் பொதுமையாகக் கூறினார். இவ்வாறு பொதுமையாகக் கூறியதாலும், படை வலிமை பற்றி கூறிய கருத்து இன்றும் பயனுள்ளதாக இருப்பதாலும், வள்ளுவரின் அணுகுமுறை அறிவியல் அணுகுமுறை எனலாம்.

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் வள்ளுவர் கூறியது போன்று படைபலத்தைப் பெருக்கினால் உலகில் அமைதி நிலவாமல் போர்தானே நிகழும் என சிலர் ஐயுறலாம். இதுமிகச் சரியான ஐயமே. வள்ளுவர் படைபலத்தைப் பெருக்கக் கூறியது காலந்தோறும் பிறநாட்டோடு போர் செய்வதற்காக அன்று. தவிர்க்கமுடியாத சிலவேளைகளில் தன் நாட்டைப் பாதுகாக்கவே. ஒருவன் உடலை உறுதியாக வைத்துக் கொள்கிறான்



படிப்பகம்

www.padippakam.com

என்றால் நாள்தோறும் வேறொருவருடன் சண்டையாடுவதற்காக அன்று மாறாக, சில சூழ்நிலைகளில் தகாதவர்களிடமிருந்து தன்னைக்காத்துக்கொள்வதற்காகவே என்றுணர்க. மற்றும் படை பலம் ஒன்று மட்டுமே பகைவனிடமிருந்து நாட்டைக் காக்க வல்லது என்று வள்ளுவர் கருதவில்லை. ஓர் அரசு கூடு மானவரை பகையை நட்பாகக் கொண்டொழுகும் பண்பை உடையதாக 'இருக்கவேண்டுமென்பதும் வள்ளுவரின் கருத் தாகும்.

பகையென்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று''—871
பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு—874

எனும் குறள்களால் பகையைக் கூடுமானவரை எவ்வாறு தவிர்க் கலாம் என்பதற்கு வழிகாட்டுவதைக் காணலாம். அவ்வாறு பகைதவிர்க்க முடியவில்லையெனில் அப்பகையை இறுதியில் வளமையான படையைக் கொண்டு முற்றிலும் ஒடுக்குவதே நேரிய முறை. நாட்டின் உள்ளேயும், வெளியேயும் பகையை யொழித்து அமைதியை நிலைநாட்ட முயல்வதே ஒருநல்லவரின் கடமையாகும்.

---

## காமராஜ் மாவட்ட மலர்

மாவட்டத் தோழர்கள் மாவட்ட மலர்களைத் தயாரிப்பதில் காட்டும் ஆர்வம் நமக்கு உற்சாகமளிக்கிறது. அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள். மாவட்ட மலர்களுக்கான கட்டுரை கதை களை முன்கூட்டி அனுப்பினால் அழகாகத் தயாரிக்க அவகாச மிருக்கும்.

செப்டம்பர் இதழ் காமராஜ் மாவட்ட மலராக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பொறுப்பு ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# என்னடி செல்லம்மா...

பசுமைக்குமார்

கல்லக் கண்டு சாமியின்னு
கஷ்ட மெல்லாம் தீருமின்னு
கையெடுத்துக் கும்பிட்டோமே
செல்லமா—இப்ப
கண்டபலன் ஒண்ணுமில்லே
பாரம்மா!

படியரிசி பிடியரிசி
மடிநிறைய வாக்குறுதி
ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்தோம்
செல்லம்மா—இன்னும்
ரோட்டுமேலே கெடக்கறோமே
ஏன்மமா?

பச்சரிசி புழுங்கரிசி
ரேஷன்கடை பழுப்பரிசி
கல்லும் மண்ணும் கலந்திருச்சு
செல்லம்மா—நாம
கண்கலங்கி வாடுறோமே
ஏனம்மா?



படிப்பகம்

www.padippakam.com

கொட்டும்பனி குளிரடிக்கும்
கட்டுப்துணி கிழிஞ்சிருக்கும்
ரோட்டோரம் குப்பமேடு
செல்லம்மா—நம்ம
வீட்டோரம் காந்திசிலை
ஏனம்மா?

உழுதவனுக்கு நிலமுமில்லே
உக்கார இடமில்லே
படிக்க வைக்க காசுமில்லே
செல்லம்மா—புள்ள
படிச்சுமுடிச்சா வேலையில்லே
ஏனம்மா?

வேலையில்லா திண்டாட்டம்
விரட்டிஅடிக்க போறோமின்னு
விடியவிடிய சொன்னாங்க
செல்லம்மா—பொழுது
விடிஞ்சுபாத்தா ஆளக்காணோம்
ஏனம்மா?

லாரியிலே ஏறிவந்து
பெட்ரோல்ஊத்தி- கொளுத்திவிட்டு
சேரியிலே பொண்ணெடுத்தா
செல்லம்மா—அங்கே
எரிஞ்சஜனம் பொழைச்சிடுமா
செல்லம்மா?





படிப்பகம்

www.padippakam.com

# ஒரு சாவில் ஒருஜனனம்

சூரங்குடி
அ. முத்தானந்தம்

மூணு மெத்து வீடு மூனா பனா கானா அன்று மூந்திக் கருக்கல் நேரம் சிவலோக பதவி அடைந்து விட்டார். அந்நேரமே பிணம் சோடிக்கும் பொன்னையனாசாரியைக் கூட்டிக் கொண்டு வந்து, குளிப்பாட்டி, கைக்குக் காப்பு, காதுக்குக் கடுக்கன், கழுத்துக்குத் தங்க உத்திராட்சம் எல்லாம் மாட்டி, பச்சைப் பட்டு வேஞ்சி கட்டி, மாலை போட்டு மாப்பிள்ளை மாதிரி நாற்காலியில் உட்கார வைத்து விட்டார்கள்.

பாட்டையா பழுத்த பழம். மனைவி கினைவி, மக்கள் கிக்கள், பேரன் கீரன், பேத்தி கீத்திகளோடு வளமையான பெரு வாழ்வு வாழ்ந்த மனிதர்! அவரைக் கோலாகலமாகக் கொண்டு சேர்க்க வேண்டுமென்று குடும்பத்தார் ஏற்கனவே போட்ட திட்டம் தான்!

கடலாடி பம்பை மேளத்திற்கும், முத்தையாபுரம் உறுமிச் சொதைக்கும், பெருநாழி டங்காங் கொட்டுக்கும் சொல்லி வ்ட்டாயிற்று. உள்ளூர் 'சிம்ளாங், கொட்டு வேற இருக்கு. கட்டாப் பாடு வாண வெடிக்கு ரூபாய் ஐந்நூறு. புஷ்பத்துக்கு நானூறு ரூபாய். தூத்துக்குடி கரகாட்டச் செட்டுக்குப் பேரன் ஆள் அனுப்பினான்.



படிப்பகம்

www.padippakam.com

ஊர் ஊருக்கு ஓலை எழுதி அனுப்பி வைத்தார்கள். மறு நாள் மத்தியானத்துக்குள் சுமந்த ஆள் வந்து இறங்கிவிடும். வந்தவர்களுக்கு ரெண்டு மூடை அரிசியாவது பொங்கித் தட்டணும். அரிசிக்கும், காய்கறி, மஞ்சள் மசால்ச் சாமான்களுக்கும் எஸ் கேட்டி பொறுப்பேற்றுக் கொண்டான். சௌந்திரம் பஸ்ஸில் வந்திறங்கும் வெற்றிலைக் கட்டுகளை எல்லாம் துஷ்டி வீட்டுக்குத் திருப்பிவிட வகை பண்ணியாகி விட்டது.

ராத்திரி முழுக்கப் பாட்டும் படிப்பும் கூத்துமாக...அமர்க்களம்.

நேரம் பளபளவென்று விடிந்தது.

பெரிய்ய வீட்டுத் துஷ்டி. அவ்வளவு நேரத்துக்குள் ஊர்க் கூட்டம் வந்து நிரம்பிவிட்டது. பந்தல் போடும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இழவு வீட்டுப் பந்தல் என்றாலே நாலு கம்பு, நாலு தட்டிதான். இந்தச் சீமான் வீட்டுக்குத் தெருவெல்லாம் கொட்டகை. வாரி வளைகளும், தென்னந் தட்டிகளும் வண்டியில் வந்து இறங்கிய வண்ணமிருந்தன. ஓர் ஓரமாக உட்கார்ந்து பந்தலுக்குக் கருக்குக் கிழித்துக் கொண்டிருந்த தோழர் சங்கரன் மாமாவிடம் வந்து உட்கார்ந்த ஒரு நடுவயசுக்காரர் மெதுவாகச் சொன்னார்: ''மாமா, பாத்தீளா? பணநாயகத்துக்கு இருக்கிற மதிப்ப! போன மாசம் செத்துப்போன இட்லிக்காரி கிட்ணம் மாவத் தூக்கிப் போட ஆளே கிடையாது; இன்னைக்குப் பாத்தீளா எம்புட்டுக் கூட்டம்ன்னு!.... இவங்க வீட்டுக்கு உசுரக் குடுத்து ஒழைக்கிற வேலைக்காரங்களுக்கு ஒரு கிளாஸ் கடுங் காப்பி குடுக்க மாட்டாங்க; பட்டினின்னு வந்து தலைகீழ நின்னாலும் பத்துப் புல்லுக் கிளம்பாது! இன்னைக்குப் பாத்தீளா ..எம்புட்டுச் செலவுன்னு!...''

சங்கரன் மாமா தலையை ஆட்டிக் கொண்டார், மேலும் கீழுமாக.

அதிகாலையிலேயே வண்ணானும், குடிமகனும் ஓடிவந்து, தலையிலுள்ள துண்டை எடுத்துக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, துஷ்டி வீட்டுக்காரர்கள் ஒவ்வொருவரையும் கும்பிட்டுக் குழைந்து ஆஜர் கொடுத்துக் கொண்டார்கள். அந்தப் பெரிய இடத்துக்கு அடிமைகளாக வேலை செய்யும் பொம்பளைகளும் பவ்வியமாக வந்து நின்று சேலையை ஒடுக்கிப் பிடித்துக் கூனிக் குறுகியபடி கும்பிட்டு விட்டு ஓர் ஓரமாய் ஒதுங்கிப்



படிப்பகம்

www.padippakam.com

போய் நின்று கொண்டார்கள். சீதக்காதி(!) இறந்து விட்டாரே என்று அவர்களுக்குக் கண்ணீர் பொங்கித் தத்தளித்தது.

பந்தல் போடும் வேலையில் அப்போது கோளாறு சொல்லிக் கொண்டிருந்த கோப்பைய நாயக்கர், தன் நாரத வாயைப் பூப்போல திறந்து விட்டார்: "ஆமா நேரம் பொழுது புறப்புட்டுருச்சு! இன்னும் துட்டி வீட்டுல தப்புச் சத்தத்தக் காணோமே...?"

"அதெல்லாம் அந்த ஆழ்வார்ப் பயலோட சரிய்யா விடியக்காலம் மம்மல்லேயே வந்து தீப்போட்டுத் தப்பு வாட்டி, கூனமுதுகுல போட்டுச் 'சஞ்சனக்கடி, சடசடக்கடி'ன்னு அத வளைச்சு அடிச்சான்னா, வைகுண்டத்துக்குக் கூட கேக்கும்.... தப்புச்சத்தம் கேட்டுத்தான ஊருலதுட்டியினே தெரியும்?" என்று அலுத்து கொண்டார் கண்ணாடி வீட்டுக் கருப்பையா சேர்வார்.

"ஆமா. ஆழ்வாரோட அது போச்சுன்னா சொல்றீய மாமா? அவன் வாரிசாத்தான் அவன் மகன் ஆண்டிப்பய இருக்கான்ல்ல!" என்றார் ஒருவர்.

"ஹும். நீங்க ஒன்னு. அப்பன மாதிரி அந்தச் சிரிக்கி புள்ள ஊருக்குத் தொண்டூழியம் பாக்கும்ன்னு நெனக்கிளா? ..தப்புச் சத்தம் வேணும்ன்னா நாமதான் இனிமே அவங்கிட்ட இருக்கிற தப்ப வாங்கிக் கழுத்துல போட்டுக்கிட்டு அடிக்கணும்! அந்த நெலம வராமலா போகப் போகுது?" —ஜயனேர் அய்யாச்சாமி மைனர் இப்படி ஆத்திரப் பட்டுக் கொண்டார்.

பந்தலக்கால்கள் நட்டிக் கொண்டிருந்த சிலர் சிரித்துக் கொண்டார்கள். "ஓங்களுக்கு இளிப்பு என்ன வந்து வாழுது? நாமெல்லாம் இந்தப் பந்தக் கால்ல முட்டிக்கிட்டுச் சாகணும்! அந்தச் சின்னையா சொல்றதுல என்ன தப்பு இருக்குனு நெனச்சீயெ? அந்தச் சின்னச் சாதி புள்ள வர்ற வரத்தப் பாத்தா தீயை அள்ளிப் போட்டது மாதிரி இருக்கு. அந்த ஏழக்கழுதமுநாயி தூத்துக்குடிப் பள்ளிக் கூடத்துக்குப் போயி என்னமோ பீரப் பீரப் படிச்சுருச்சாம். தேவடியா மகன் வர்ர வரத்து அந்தப் பெருந்தனாச்சித் தாயிக்குங் கூட பொறுக்காது. .......நாலு நாளைக்கு முன்னால இந்த நெறைஞ்ச ஊர்ல என்ன நடந்தது தெரியுமா?! அந்த வெளக்க மாத்துக் கொண்ட சூட்டும், சட்டையும் போட்டுக் கிட்டு நம்ம ஊர் மடத்துக்கு முன்னால கூடிப் போயிருக்கு! கழுத



படிப்பகம்

www.padippakam.com

நாயிக்குக் கால்ல செருப்பு வேற! — அவுகளுக்கு மணிக்கட்டுல வாட்சு! கையில பொஸ்தகம்! பையில பௌண்டன் பேனா ! அப்போ ஊர் மடத்துல யார், யார் இருந்தான்னு தெரியுமா சின்னையா? நம்ம பிரசிடெண்டுச்சாமி, நம்ம தபால்கார ஐயா, அஞ்சாப்புச்சாரு, கீழ வீட்டுக்கினாப் பீனா, ஓட்டு வீட்டுமாமா, உழக்கரிசிப் பாட்டையா, கிடுகட்டிச் செட்டியாரு இவுகெல்லாம் இருந்ததாக அந்தச் சாதி கெட்ட நாயிக்கு எவ்வளவு நெஞ்சுரமிருந்தா இவுகளுக்கு முன்னால செருப்புப் போட்டுக்கிட்டுப் போயிருக்கும்?''—முதலாளி பேரனுக்கு வந்த கடு கடுப்பு இன்ன மட்டுமென்றில்லை.

ரேஸ் வண்டி ரெங்கசாமிக்கும், அந்த ஆழ்வார் மகன் ஆண்டிப் பயலை நினைக்கும்போது மிளகாயைப் பிச்சு வச்ச மாதிரி இருந்ததோ என்னமோ, அவன் வண்டியையும் அந்த இடத்தில் ஓடவிட்டார்: ''இத ஒரு அதிசயமாச் சொல்லிட்டீளாக்கும். நேத்து நான் கம்மாயில மாடு குளிப்பாட்டிக் கிட்டு இருக்கேன்! அந்த வெங்கன் பயபுள்ள வாசனச் சோப்புப் போட்டுக் குளிக்கி! — அப்பன் பல்லே தேய்க்க மாட்டான்! இந்தச் சாதிகெட்ட ஏழத் தேவடியா புள்ள புருஷ் வச்சு மொறை, மொறையாப் பல்லுத் தேய்க்கி! இந்தச் சிரிக்கி புள்ள ஊருக்கு அடிமையாயிருந்து என்னத்தச் சேவகம் பண்ணும் ?''

''சேவகம் பண்ணாட்ட ஒதை வாங்கிச் சாகிறது யாரு?'' சாராயக் கடை சாமிநாதன் சாதாரணமாகச் சொன்னார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தோழர் சங்கரன் மாமா, ''என்னப்பா இப்படியெல்லாம் பேசுறீயே? அவனும் மனுசந்தானே?'' என்றார். அவ்வளவுதான். அவரை எக்கு, எக்கு என்று எக்கிவிட்டார்கள் சிலர். சில பேர்கள் ஒரு மாதிரியாக முறைத்துப் பார்த்தபடி இருந்தார்கள். அப்போது அவரது தோஸ்து—பருத்தி வியாபாரி பாபு செட்டியார் சொன்னார்: ''ஏன் சனியனே! ஒமக்குத்தான் ஒரு சங்கையும் கெடையாதே ..! எல்லாரையும் ஒன்னுன்னு நெனைக்கிறவரு —வாய வச்சுக்கிட்டுச் சும்மா கெடந்தா என்ன? எடந் தெரியாமத் திரியுறிரு ..''

நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்னால் துஷ்டி வீட்டுக்காரர், ஆழ்வார் மகன் ஆண்டிப் பயலைப் போய்க் கூட்டிக்கொண்டு வரும்படி சொல்லியனுப்பிய ஆள் போய் விட்டு வந்துவிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

—குடிசை சாத்திக் கிடக்குதாம், மகனையும் காணோமாம், அடிக்கிற தப்பும் குச்சியும் வீட்டுக்கு முன்னால உள்ள வேலிக் கருவல செடியில தொங்குதாம்.

பெரிய முதலாளி பேரனுக்குப் பொங்கி வந்தது கோபம்:- ''சிரிக்கி புள்ளைக வேணும்னே ஊரவிட்டுப் போயிருக்கிற மாதிரி இருக்குது தப்பை எடுத்து வெளியே வச்சுட்டுப் போயிருக்குன்னா என்ன அர்த்தம்! வேணும்னா நாம எடுத்துத் தோள்ல போட்டும் அடிச்சிக்கிறணுமாம்!''

''ஏன் மாப்பிள்ள! நாமஎடுத்து அந்தத் தப்ப அடிச்சா சத்தம் என்ன வராத? நாம தப்படிச்சா நம்ம செங்கோல் என்ன இறங்கியா போயிரும்? அந்தச் சாதிக் காரங்கதான் அதத் தொட்டு அடிக்கனும்ன்னு என்ன இருக்கு?'' =சங்கரன் மாமா சும்மா கிடக்காமல்ச் சொன்—னார், கேலியாகவும் குத்தலாகவும்.

''ஆமாம் நீங்களும் ஒங்க ஆளுகளும் இப்படித்தான் பேசுவீங்க.'' பெரியமுதலாளி பேரன் முகத்தைச் சுழித்துக் கொண்டு எரிந்தான்.

தோழர் சங்கர மாமாவின் பேச்சை ஜீரணித்துக் கொள்ள முடியாத ஒருவர் கேட்டார்: ''சரிசங்கரா! தப்பெடுத்து அடிச்சாக் கொறைஞ்சா போயிடுவோம்னு சொல்ற; சரி..., பொணத்தைப் பொதைக்கிறதுக்கு நீ குழி வெட்டிருவயா? ஆழ்வார் மாதிரி சுடுகாட்டுல நின்னு பொனத்தைச் சுட்டுருவயா?''

''கூலி குடுத்தா அழாகாச் செய்வேன்.''

''செய்வ. செய்வ சும்மா வாய் விடாத! அந்த ஜனத் தொழில அவங்க தாம்ப்பா செய்யணும்!''

''ஏன்....? நாம செய்தா என்ன ...?''

''சும்மா கெடப்பா வாய மூடிக்கிட்டு.''

பேச்சோடு பேச்சாகப் பந்தல்ப் போட்டு மு !

நேரம் மதியம். நாலா ஊர் ஜனங்களும் வந்து குவிந்த வண்ணமிருந்தனர். துஷ்டி வீட்டுக்காரனின் மாட்டுத் தொழுவில் சமையல் ஏற்பாடுகள்'போடு போடு' என்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிணத்தைத் தூக்கிக் கொண்டு போன பின், குளித்து விட்டு, வந்த



படிப்பகம்

www.padippakam.com

வர்கள் சாப்பிட்டு விட்டுப் போவதுதான் வழக்கம். இழவு வீட்டுப் பருப்புக் கறியும், புளிக் குழம்பும் தனி—ருசி!

படப்படி கொட்டாரத்தில் அஞ்சுமுக வண்டித்தேர் கட்டுகிறார்கள். கிராமத்தில் இப்படிப் பட்ட தனவந்தர்களுக்கு மட்டும் தான் இந்த விசேச வண்டித் தேர். வண்ணான் மாத்துக்களாலும், வண்ண வண்ணப் பூக்களாலும் தேர் ஜோடனையாகிக் கொண்டிருந்தது.

அவர்கள் சாதியில் கஞ்சிக்கு இல்லாமல் செத்தவர்களைக் சுடுவது வழக்கம். விற்காததை விற்றுக் கூட வீட்டுக்காரன் கொடுத்து விடுவான், விறகுக்குக்கும் எருவுக்கும். நம்ம வீட்டுப்புள்ளி மூனா பானா கானாவுக்கு என்ன தங்கத் துக்கு! அதிலும் அவர் தலைப் பிள்ளை! மகாத்துமா காந்தியை மாதிரி சந்தனக் கட்டை கொண்டு எரிக்க ஆவல் குடும்பத்தார்க்கு. ஆனால் அவ்வளவு கட்டைக்குத் திடீரென்று எங்கு போவது? அஞ்சுலட்ச ரூபாயுக்குப் புது வீடு போடுவதற்கு வாங்கி வைத்திருந்த தேக்குமரங்களைத் தூக்கி விட இருந்தார்கள் அவர்கள் சுட்ட சாம்பலை அள்ளி உடனே சிப்பிகுளம் சங்கம் முகத்தில் கொண்டு கரைத்து விட்டு வரவேண்டும் உயிரோடு இருக்கும் போதே பெரியவர், குடும்பத்தாரிடம் தன் அபிலாசையைச் சொல்லி வைத்திருந்தார். சொர்க்கம் போக நினைப்பு!

ஆழ்வார் மகன் ஆண்டிப் பயலை எங்கிருந்தாலும் தேடிக் கொண்டு வந்ததாக வேண்டிய திருக்கிறது. அவன் வந்துதான், அவன் பார்க்கிற அந்த ஈமக் காரியங்களைப் பார்க்கணும். அப்பன் காலத்திலேயே எல்லாவற்றையும் தெரிந்து கொண்டவன்தான் அவன். மதியத்துக்குப் பிறகு இரண்டு பேர்களை அனுப்பி, அவனைத் தேடிக் கண்டு பிடித்து பிடரியில் ரெண்டு கொடுத்து இழுத்துக் கொண்டு வர கிராமத்தில் ஏற்பாடாயிற்று. மேற்கே விளாத்திகுளம் பக்கம் அவனது சொந்தக்காரர்கள் ஊர்களில்தான் அவன் இருக்க வேண்டும்.

நேரம் சாயந்திரம். பாண்டியன் பஸ்ஸு வந்து விட்டது. போனவர்களைக் காணவில்லை. துஷ்டி வீட்டுக்காரர்களுக்கு மனச்சங்கடம் சாஸ்தி.

இன்னும் இங்கு ஏகப்பட்ட ஜோலிகள் கிடைக்கின்றன. நீர் மாலைக்குப் போய்வரணும்;



படிப்பகம்

www.padippakam.com

பெரியவருக்குச் சவரம் செய்து, குளிப்பாட்டிக் கோடி உடுத்தி, அலங்காரம் பண்ணி பந்தலில்., கொண்டு வந்து வைக்கணும். நெய்பந்தம், மோட்ச விளக்கு, நிறைநாழி, கோடி போடுவது, தாலிவாங்குவது, எதிர்மாலை என்று இருக்கவே இருக்கு. சூரிய முகம் இன்று சரியாகத் தெரிய வில்லை. மழை வேறு அரட்டிக் கொண்டிருந்தது. கார்த்திகை மாசத்து மழை— காற்றாய்ப் போனாலும் போச்சு, மழையாய்ப் போனாலும் போச்சு வடக்கே வெகு தூரத்தில் மழைக் கால்கள் இறங்கி இருப்பது தெரிந்தது.

மற்ற சாஸ்திர சம்பிரதாயங் களை எல்லாம் முடித்து வைத்து விட்டுத் தயாராக இருந்தால் ஆழ்வார் மகன் ஆண்டிப் பயல் வந்ததும் தேர் எடுத்து விடலாம்.

இங்கு கொட்டுக் காரன்களும், ஆட்டக் காரங்களும் போடும் ஆரவார முழக்கம் தேவலோகத் தைக் கூட அசத்தி வைத்திருக் கும்! அதனால் மு. ப். க. வுக்கு அங்கு செல்வாக்குக் கூடி, அத னால் அவர் செய்தபாவங்களுக்கு உரியதண்டனைகள் கூட ரத்துச் செய்யப் பட்டுப் பதவி உயர்வு கூட அவருக்குக் கிடைக்கலாம்!

வாணவெடிக் காரர்கள் ஒரு சாக்கு வெடிகளோடு டவுன் பஸ் ஸுக்கு வந்து இறங்கி விட்டார் கள்.

பொழுதடைய ஒரு பாகம் பொழுது இருக்கிற நேரத்துக்குத் தான் ஆண்டிப் பயலைத்தேடிப் போனவர்கள் வந்து சேர்ந்திருந் தார்கள். எங்கெங்கெல்லாமோ தேடியும் அவன் தட்டுப்படவே இல்லையாம். அவன் தாய்மாமங் காரங்கிட்டப் போய், விஷயத் தைச் சொல்லிக் கூப்பிட்ட போது அவன் சொன்னானாம்:- ‘‘எங்க சாதிக் காரங்க தான் பிணம் சுட ணும்ன்னு இருக்கா? ஏன், ஒங்க பொணத்த நீங்களே சுட்டா என்ன?— நாங்க வேணும்ன்னா சுட்டுத் தர்றோம்; ஆனா ஞாய மான கூலிய நீங்க குடுத்துறணும். ரெண்டு பேரு வருவோம்; தலைக்கு இருபத்தஞ்சு ரூபா!’’

அதற்கு இவர்கள் சொன்னார் களாம்:- ‘‘என்னப்பா இப்படி அநியாயமா கேக்குறீங்க? அரிச் சந்திரன் காலத்துல கால்ப் பண மும், முழத்துண்டும் தான். இப்போ என்னமோ... காலத்துக் குத் தக்கன ரெண்டே கால்ப் பணம் (ரூபாய்) குடுத்துக் கிட்டு இருக்கோம். உன் மருமகன் செய் யுற கடமையத் தான நீ செய்யப் போற? ஏற்பட்ட ‘சொதந் திர’த்த வாங்கிக் கிட்டு சோலிய முடிச்சுட்டுப் போப்பா!’’ என்று



படிப்பகம்

www.padippakam.com

அதற்கு அவன் நின்று கூடப் பேசாமல் அவன்பாட்டுக்கு 'விசு விசு'ன்னு போயிட்டானாம்.

அவர்கள் சொல்லச் சொல்ல துட்டி வீட்டில் சிலர், தக்கடா "புக்கடா' என்று குதித்தார்கள். வசைமாரி பொழிந்தார்கள். தோழர் சங்கரன் மாமா, 'அவன் சரியான சூடு கொடுத்திருக்கான்' என்று எண்ணிக் கொண்டார்,

எப்போதுமே, கட்டத்தலத்தில் வைத்து இப்போது செத்துக் கிடக்காரே... மூனா பானா கானா, அவர் 'தொழிலாளி' களுக்குக் கூலி கொடுக்கும் போது நடந்து கொள்வது சங்கரன் மாமவுக்கு ஞாபகத்துக்கு வந்தது —மு. ப. க இடது கையால் 'சொதந்திரப் பணத்தைத் தூக்கி விட்டெறிவதும் அவர்கள் அதைக் குனிந்து ரெண்டு கையாலும் வாங்கிக் கொள்வதும் அருவருப்பாக இருக்கும்.—

—மூனு மைல்களுக்கு அப்பாலிருந்து, கிராமத்துக்குப் பயந்து வரும் குருக்களையாவுக்குக் கால்பணம் (கால் ரூபாய்). பகலெல்லாம் ஏவிய வேலையைப்பார்த்துக் கொண்டு துஷ்டி வீட்டுப் பந்தலடியிலேயே கிடக்கும் குடிமகனுக்கு அரைப் பணம் ஒரு பொதித் துட்டி வீட்டுத் துணிகளைத் துவைத்துத் தரும் வண்ணானுக்கு முக்கால் பணம். ராத்ரி யெல்லாம் சுடுகாட்டில் கிடந்து விழித்திருந்து பிணத்தை வேக வைக்கும் ஆழ்வாருக்கும் அவன் மகனுக்கும் சேர்த்து ரெண்டே கால்ப் பணம் இன்னும் சில இப்படியே.

இதனைக் கண்டு ரொம்ப நாட்களாக மனசுக்குள் குமுறிக் கொண்டிருந்த தோழர் சங்கரன் மாமா ஒருநாள், கட்டத் தலத்தில் வைத்து, மு.ப.க விடம் கேட்டு விட்டார்: "அம்மானு! காலத்துக்குத் தக்க படி தொழிலாளிகளுக்குக் கட்டும் படியாகச் சொதந்திரப் பணத்தக் கூட்டிக் குடுக்கலாமில்ல?"

சங்கரன் மாமாவை ஏற்கனவே பிடிக்காத மு.ப,க. முறைத்துப் பார்த்துவிட்டுக் கத்தினார்: "ஏம்பா! நீங்க இப்படித்தான் பேசுவீயெ! இந்தச் 'சொதந்தரம்' நானறிய அறுபது வருசமா நடந்துக்கிட்டு இருக்கு. இத இன்னைக்கினு மாத்த முடியாது. ஒருவேளை நீ இந்த நாட்டுக்கு முதல் மந்திரியா வந்து, சட்டம் போட்டேன்னு வச்சுக்கோ, அப்பவும் இத மாத்தறது கஷ்டம்ப்பா! தெரிஞ்சுக்கோ."

இன்னைக்கு — இப்போது துஷ்டி வீட்டுக்காரர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

பெரிய்ய கவலை. பெரியவரைக் கொண்டுபோய் எப்படியும் நல்லபடியாச் சேர்த்து, வேக வைத்து முடிக்க வேண்டுமே! ஆண்டிப் பய மாமன்காரன் கேட்ட அந்த ஐம்பது ரூபாயுக்குச் சம்மதிப்பதாகச் சொல்லி அவர்களைக் கூட்டுக்கொண்டு வரும்படி மீண்டும் அந்த இருவரையுமே அனுப்பி வைத்தார் மு.ப.க.வின் மூத்த குமாரர். இது கூட அங்கணக்குள்ள இருந்த சிலருக்கு முணுமுணுப்புத்தான்;- 'புதுசாக ஒன்றை இவர் இழுத்து வைக்குறாரே' என்று.

பொழுது அடைவதற்கு இன்னும் கொஞ்ச நேரமே இருந்தது. மழை வேறு புணுபுணுத்துக் கொண்டிருந்தது. எதிர்த்த வீட்டு ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த தூனா முதலாளி, விறுவிறு வென்று வந்து, அவருக்கே உரிய தொண்டையைத் திறந்து பெரிய்ய சத்தம் போட்டுக் கத்தினார்: என்னப்பா! மழை வேற வர்றாப் போல இருக்கு! பெரியவர கொண்டு சேர்க்க வேண்டாமா? நேத்துச் செத்த மனுசன்!.... வெளியூர்க்காரர்க வேற காத்துக் கெடக்குறாங்க! ம். தேர இழுத்துட்டு வாங்கப்பா! தேரு மயானத்துக்குப் போய்ச் சேர்றதுக்கும், பொணம் சுடுறவங்க வந்து சேர்றதுக்கும் நேரம் சரியா இருக்கும்!''

பெரியவர் மு.ப.க வீதிக்கு வந்து சோந்ததும், பொசு, பொசு வென்று விழுந்து கொண்டிருந்த மழை, சட சட வென்று வந்து ஒரே .. வெள்ளக் காடாகக் கொட்டித் தீர்த்து விட்டது. கொட்டுக்காரன்களும் குழல்க்காரன்களும், ஆட்ட பாட்டக் காரன்களும் பிச்சுப் பிடிங்கிப் போன இடமே தெரியவில்லை. வாண வெடிக் காரன்களைக் காணமே காணோம். தேருக்குப் பின்னால்ப் போய்க் கொண்டிருந்த ஜனங்களும், நன்றாகக் குளித்து முழுகி முடித்து விட்டார்கள். முழங்கால் அளவு ஓடும் அளவு கரிசல்க் கட்டுத் தண்ணீர்த்தான் பெரியவர் மு.ப.க மிதந்த படி சென்றார். தேர் முக்கு ரோட்டைத் தாண்டிப் போகும் போது இருபது, இருபதைந் பேர்களே மிச்சம். அவர்களிலும், கோயிந்தா, என்று முக்கிக் கொண்டுகத்தும் சங்கர மாமாவின் சத்தமே ஓங்கி ஒலித்தது.

அப்போது முக்குரோட்டில் நாலா பக்கமும் போகும் பஸ்கள் வந்து நின்றன. அவற்றில்வெளியூர்க்காரர்கள் தப்பித்தோம் பிழைத்தோமென்று தொற்றிக் கொண்டார்கள். அந்நேரம் துஷ்டி வீட்டுக்கு ரொம்பவும் வேண்டிய ஒருவர் அவர்களிடம், ''சோறு ரொம்பப் பொங்கிப்



படிப்பகம்

www.padippakam.com

போட்டிருக்கு; வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுட்டுப் போகலாமே?'' என்றார். ஆனால் அவர்கள் அதைக் காதில் வாங்கியதாகவேதெரியவில்லை. முக்கு ரோடுவரைவந்த உள்ளூர்க்காரர்கள் பலர், ஆங்காங்கே இருந்த டீக்கடையவளைப் பார்த்து ஒதுங்கி நின்று கொண்டார்கள். வாடை வேறு 'கிடுகிடு'வென்று அவர்களை ஆட்டிக் கொண்டிருந்தது. மிச்சம் மீதி இருப்பவர்களும் தேரைக் கொண்டு, மயானத்தில் அடுக்கப்பட்டிருந்த தேக்கங் கட்டைகளுக்குப் பக்கத்தில் நிறுத்திவிட்டு, அருகிலுள்ள பேச்சிப் புலவர்வீட்டுச்சமாதியில் போய் ஏறி நின்று கொண்டார்கள். கரிசல் காட்டில் மழை பெய்து விட்டால் தரையில் கால் பாவ முடியாது; எங்கும் ஒரே சேறும் சகதியும்.

மழை கொஞ்சம் வெறித்தது மாதிரித் தெரிந்தது. நாலா பக்கமும் ஜோடித்த மின்னலால் திடீரென்று கரண்டுக் கட்டு வேறு ஆகிவிட்டது. பொழுதடையப் பொருத்திய பெட்ரோமாக்ஸ் லைட்டுகளும் மழையில் நனைந்து அணைந்து விட்டன. மீண்டும் அவற்றை ஏற்றி வரப் போனவர்களை இன்னும் காணவில்லை. எங்கும் ஒரே இருட்டு மயம். பெரிய வீட்டு மு.ப.க. இப்போது நரகத்தில் இருப்பதாக நம்ம சங்கரன் மாமா நினைத்துக் கொண்டார்.

மேற்கே இருந்து வந்த ஏழரை மணி டவுன் பஸ்ஸில்தான் பிணம் சுடுபவர்களைக் கூப்பிடப் போனவர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். அப்போது முக்கு ரோட்டில் நின்றுகொண்டிருந்த ஜனங்களைப் பார்த்த உடன், தேர் மயானத்துக்கு வந்துவிட்டதாக அவர்கள் ஊகித்துக் கொண்டார்கள். கையிலுள்ள பேட்டரி லைட்டைப் பிடித்தவாறு நேராகத் தேர் நிற்கும் இடத்திற்குப் போனார்கள். மழை நின்றிருந்ததால் தேரைச் சுற்றிலும் அப்போது நிறையப் பேர்கள் நின்றிருந்தார்கள். அவர்களுக்கு இவர்களைப் பார்த்தவுடன் ஒரே ஆச்சரியம்! அவர்கள் கேட்டார்கள்: ''பிணம் சுடுறவங்க வரலையா?'' இவர்கள், போய் வந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் பின் சொன்னார்கள்:—அவங்களுக்கு இன்னைக்குச் சங்கக் கூட்டமாம்; அதனால வர ஏலாதாம்; கூட்டத்தின் நடுவே ஆழ்வார் மகன் ஆண்டிப் பயதான் கத்திக் கத்திப் பிரசங்கம் பண்ணிக்கொண்டு இருக்கிறானாம்!

மழை லேசாகத் தூறத் தொடங்கிற்று. கொஞ்ச நேரத்தில் மறுபடியும் பெருமழையாக வந்தாலும் வரலாம். ●



படிப்பகம்

www.padippakam.com



# சேவல் சண்டை

காஷ்மீரி மூலம் : அமீன்கமில்

ஆங்கிலத்தில்: நீர்ஜாமோட்டோ

தமிழில்;

திருவைகாவூர். கோ. பிச்சை

குலாம் கான் கையில் சேவலுடன் சுற்றுப் புறச்சுவரின் படியில் நுழைந்தபோது ஷஹ்மால் ஆராய்வது போல் அவனைப் பார்த்து எழுந்து நின்றாள். தனது ஆடையில் அவளது ஆறுமாதக் குழந்தை அசுத்தம் செய்திருந்தைக் கூட கழுவ மறந்து விட்டாள். புதையலைக் கண்டு பிடித்தது போல் உணர்ந்து தன் புருஷனை நோக்கி திடீரென, 'ஆக இன்று கொண்டு வந்து விட்டீர்கள்! இன்றும் நீங்கள் வெறுங்கை யுடன்தான் வருவீர்கள் என்று பயந்து கொண்டிருந்தேன்.'' என்று கத்தினாள்.

தனது கணவனின் கையிலிருந்த சேவலை வெடுக் கெனப் பிடுங்கிக்கொண்டு அதன் இறகுகளையும், கொண்டையையும் தடவிக் கொடுத்தாள். மட்டரகமான சேவல் அல்ல என்று ஷஹ்மாலைத் திருப்தி படுத்த ரூபாய் நாலரை என்பதை அழுத்தி ''நான் இதற்கு நாலரை ரூபாய் கொடுத்து வாங்கி வந்திருக்கிறேன்'' என்றான் குலாம்கான்.

அவன் கொடுத்த விலையைப் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. அவளது கண்கள் சேவலின் மீதே பதிந்திருந்தன. அதைப்பார்த்த அவளது உள்ளம் மகிழ்ச்சியால் குமிழி



படிப்பகம்

www.padippakam.com

யிட்டது. சேவலைத் தரையில் வைத்து விட்டு, தனது புருவத்தை உயர்த்தி தலையை நீட்டி தனது கணவனைப் பார்த்து சற்று உரத்த குரலில் ''இந்த மாதிரியான சேவலைத் தான் வாங்க வேண்டு மென்றிருந்தேன். இரவும் பகலும் சந்தையில் குப்பையைக் கிளறிக் கொண்டு திரியும் சேவலைத் தான் பக்கத்திலுள்ளவர்கள் எல்லோரும் வாங்கியிருக்கிறார்கள்.'' என்று சொன்னாள். குலாம்கான் எதுவும் சொல்லாமல் உள்ளே சென்றான்.

சேவலின் கால்கள் இரண்டும் மெல்லிய கம்பியால் சேர்த்து கட்டப்பட்டிருந்ததால் அது சிரமத்துடன் தத்தியது. கால்களைக் கட்டி இருந்த கம்பியை மூக்கால் கொத்தியபடி தனது சுற்றுப்புறங்களை அளவெடுக்க மேல் நோக்கி பார்வையை ஓட்டியது.

ஷஹ்மாவிடம் ஏற்கனவே இரண்டுகோழிகள் உள்ளன. அவைகள் அப்போது சுற்றுச் சுவர் ஓரமாக இருந்த குப்பைக் கிளறிக் கொண்டிருந்தன. சேவலின் கூவல் காதில் விழுந்ததும் அவை திகைத்து நின்று அதை சந்தேகத்துடன் பார்த்தனவா அல்லது புதிய நபரான இதன் இயல்பையும் நடத்தையும் மதிப்பிட முயற்சித்தனவா?

ஒரு கோழி அந்த சேவலைப் பார்ப்பதில் ஆர்வ மில்லாதது போலும், தனது இஷ்டத்துக்கு உலவுவது போலும் தனது உடம்பை ஒயிலாக அசைத்துக் கொண்டு சேவலை நோக்கிச் சென்றது. மற்றொரு கோழி குப்பையைக் கிளறி புழுதியைக் கிளப்பியவாறு அதில் புரண்டது. ''அதை ஏதோ ரொம்ப மேலா நினைத்தேன். அது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். அதனால் எனக்கென்ன வந்தது?''

ஷஹ்மால் ஒரு பிடி அரிசியை எடுத்து வந்து சேவலின் முன் தூவினாள். அதைக் கண்டதும் பலநாட்கள் பட்டினி கிடந்தது போல அந்த சேவல் லபக் லபக் கென்று கொத்தித் தின்றது.

சேவலுக்கு செய்யப்படும் பிரத்தியேக சலுகையைக் கண்டு அந்தக் கோழிகள் விரைந்து வந்து சிதறிக் கிடந்த அரிசியை வேகமாகக் கொத்தின.

அடுத்த வீட்டு ஜன்னலின்மீது மீண்டும் ஷஹ்பால் தன் பார்வையை வீசினாள். அங்கு யாரும் இல்லாததைக் கண்டு கோழிகளைப் பார்த்து, ''ஷூ, ஷு! நீங்க கொள்ளையிலே போக! பாவம் பசியோட வந்திருக்கு! அதை நிம்மதியாக தீனி எடுக்க விடமாட்டீர்கள் போலி





படிப்பகம்

www.padippakam.com

ருக்கே, பல நாளா தீவனம் இல்லாமல் நீங்கள் பட்டினி கிடப்பதாக பார்க்கிறவர்கள் நினைப்பார்கள்'' என்று கத்தினான்.

கிளுக்-கிளுக் என்று சத்தமிட்டபடி கோழிகள் ஓடிவிட்டன. ஷஹ்மால் யாரை நினைத்துக் கொண்டு இப்படி திட்டுகிறாள் என்று கோழிகளுக்குத் தெரியும். இல்லை என்றால் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவா அவைகள் ஓடின? ஆனாலும் கைக்கெட்டாத தூரத்திலிருந்தபடி பயத்துடன் சேவலைச் சுற்றி இறைந்து கிடந்த தானியங்களைக் கொத்தித் தின்றன.

''ரொம்ப சந்தோஷம்! இந்த சேவல் எப்போ வந்தது?'' என்று தன் வீட்டு ஜன்னலில் சாய்ந்தபடி ஜானிஸ் கின்னி ஷஹ்மாலைக் கேட்டாள்.

சேவல் வந்ததிலிருந்து இதற்காகத்தான் ஷஹ்மால் காத்துக் கொண்டிருந்தாள். இதைக் கேட்ட உடனேயே தனது காதுகளில் உள்ள வெள்ளி வளையம் நன்கு தெரியும்படியாகதலையை உயர்த்தி ஆட்டி அபிநயத்துடன் கசங்காத தனது ஆடைகளை சரிசெய்து கொண்டு ''இப்போது தான் என் வீட்டுக்காரர் வாங்கி வந்தார். நாலரை ரூபாய் கொடுத்து இதை வாங்கி இருக்கிறார்'' என்று சற்றுமுன் தன் கணவன் சொல்லியதை விட ''நாலரை ரூபாய்'' என்ற வார்த்தைக்கு மேலும் அதிக அழுத்தம் கொடுத்து ஷஹ்மால் சொன்னாள்.

''நல்ல சேவல். கிராமப்புறத்தில் இருந்து வாங்கி இருக்க வேண்டும். பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது என்று அப்பாவித்தனமாக தனது அபிப்பிராயத்தை ஜானி சொன்னாள். ''இதற்கு ஏழு மாதம் தானாகிறது'' என்று தன்னிச்சையாக சேவலுக்கு வயது நிர்ணயித்தாள் ஷஹ்மால். மேலும், ''இது வழக்கமாக நகரத்துக்கு விற்பனைக்கு வருவது போன்றவைவை அல்ல. இது உயர்ந்த ஜாதி சேவல். விலையும் மிக அதிகம்! யாரு இவ்வளவு விலைகொடுத்து வாங்குவார்கள்?'' என்று சொல்லி சற்று நேரம் கழித்து, இகழ்ச்சியான குரலில், ''இங்குள்ளவர்களுக்கெல்லாம் தெருவில் குப்பையை சீய்த்து மேய்ந்து திரியும் சேவல்கள் தான் பிடிக்கும்.'' என்றும் சொன்னாள்.

இந்த வார்த்தைகள் ஜானிக்குக் கோபமூட்டின. இந்த நிந்தனையான வார்த்தைகள் தன்னைக் குறித்துத் தான் என்பது அவளுக்குத் தெரியும். கோபத்



படிப்பகம்

www.padippakam.com

தால் முகம் சிவக்க, ''எனக்கு அடுப்பிலே வேலை கிடக்கு, நீ, தீனி போட்டு அதற்கு உபசாரம் செய்து கவனி'' என்று ஜானி இரைந்து விட்டு தன் வீட்டிற் குள்ள போய் விட்டாள்.

ஜானிவிட்டு ஜன்னல் காலி யானதைப் பார்த்து உள்ளூர சிரித்தபடி தன் கோழிகளைப் பார்த்து, ''ஷு ஷு நீங்கள் செத்து ஒழியுங்களேன்!'' என்று திட்டிவிட்டு மீண்டும் மகிழ்ச்சி யுடனும், கர்வத்துடனும் சேவல் பக்கமாக திரும்பினாள். ஜானி யிடம் ஒருசேவல் இருப்பது போல தனக்கும் அப்படி ஒன்று வேண்டும் என்ற வீம்பில் தான் இந்த சேவலை வாங்கினாள் என்பது தான் உண்மை.

ஜானியிடம் ஐந்து கோழி களும் ஒரு சேவலும் இருந்த போது, ஷஹ்மாலிடம் இரண்டு கோழிகள் இருந்தன.

உண்மையில்அவளிடம் மூன்று கோழிகள் இருந்தன. ஆனால் ஒன்று தன்னுடைய ஐந்துகுஞ்சு களுடன் நோயினால் இறந்து போயிற்று.

ஜானியின் சேவல் அவளது வீட்டுச்சுவரிலிருந்து இருவர் வீட்டிற்கும் இடையிலுள்ள சுவ ரின் மீது ஏறி ஷஹ்மால் வீட்டு முற்றத்துக்குள் குதித்து வந்து விடும். தனக்கென்று சேவல் வருவதை தன் அதிர்ஷ்டம் தான் என்று வரவேற்றாள். ஆனால் நெல்லோ வேறு தானியங் களோ காய வைத்திருக்கும் சமயங்களில் அது வரு வதை அவள் அடியோடு வெறுத் தாள். அந்த சமயங்களில் ஜானி யின் சேவல் ஷஹ்மாவின் முற் றத்திற்குள் வந்து ஒட்டுண்ணி போலத் தங்கிவிடும். அதனால் எதையும் காயவைக்க ஷஹ்மால் பயந்தாள். கடைசியில் ஒரு நாள் ஷஹ்மால் பொறுமை இழந்து அடங்கி இருந்த ஆத் திரம் பீறிட அந்த சேவலை கடுமையாகத் திட்டித்தீர்த்து விட்டாள். இதைக் கேட்ட ஜானி தனது ஜன்னலில் வந்து நின்ற படி, ''உனக்கென்று சொந்த மா ஒருசேவலை வாங்கிக்கொண் டாலென்ன? சில சமயங்களிலே என்சேவல் அங்கு வருவது உனக்கு அவசியமா இருக்கு? இல்லையா? அப்படி இருக்க ஏதோ கொஞ்சம் தானியத்தை அது தின்பதால்தான் உனக்கு பெரிய நஷ்டம் வந்து விடுதா'' என்று கேலியாகப் பதிலிறுத் தாள்.

இந்த சுடுசொல் ஷஹ்மாவின் மனதைப் புண்படுத்தியது. அன்றிலிருந்தே ஷஹ்மால் தன் கணவனை சேவல் வாங்கி வரும் படி வற்புறுத்தி வந்தாள். ஜானி



படிப்பகம்

www.padippakam.com

யும் தன் சேவல் ஷஹ்மால் வீட்டுப் பக்கம் போகாமலிருக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டாள்.

குலாம்கான் பதினைந்து நாட்களாக ஏதேதோ சாக்குப்போக்கு சொல்லி சேவல் வாங்குவதை தவிர்த்து வந்தான். இனியும் அவனால் தவிர்க்கமுடியாததாகி விட்டது! மைசுமா கடை வீதியில் ஒரு வியாபாரியிடம் மூன்று ரூபாய்க்கு இந்த சேவலை வாங்கி வந்தான்.

''ஹூ என்ன மட்டமான சேவலை வாங்கி வந்திருக்கிறாய்! வேறு எங்குமே இதை விட நல்லதாக கிடைக்கவில்லையா?'' என்று தன் மனைவி நீட்டி முழக்கிப் பேசாமலிருப்பதற்காக வாங்கிய விலையை விட ஒன்றரை ரூபாய் கூட்டி சொல்லி வைத்தான்.

ஜானியின் சேவல் சிகப்பு. அதன் உடலெங்கும் பரவலாக கறுப்புப் புள்ளிகள் இருந்தன. ஷஹ்மாவின் புதிய சேவல் பனிக்கட்டி போன்று வெள்ளை நிறமானது. கண்ணைக் கூசும்படியாக அவ்வளவு அழகு. ஜானியின் சேவலின் நடையைவிட அதன் நடை கவர்ச்சியாக இருந்தது. ஆனால் ஜானியின் சேவல் பலமானதாகவும் அதன் உறுப்புகள் தடிமனாகவும் காணப்பட்டன. இதுதான் வித்தியாசம். மற்றபடி இரண்டுமே ஒரே வகையானதும் ஏறக்குறைய ஒரே விலையுள்ளதும்தான்.

இரவாகி விட்டது. எல்லோரும் படுத்து விட்டனர். ஷஹ்மல் முழங்கையை தலையணை மீது வைத்து முழங்கையை மடக்கி தன் உள்ளங்கையில் தலையை சாய்த்து ஒரு பக்கமாக சாய்ந்து படுத்து குழந்தையை மார்புடன் அணைத்து பால் கொடுத்தபடி ''சேவலைப் பார்த்ததும் ஜானிக்கு வயிற்றெரிச்சல் கண்டிருக்க வேண்டும்! என்னைப் பார்த்து நேருக்கு நேராக அவள் சொன்ன வார்த்தைகளை நான் மறக்க முடியுமா? அவள் சேவல் மட்டும் இந்தப் பக்கம் வரட்டும்; அதோட காலை முறிக்கல்லேன்னா நான் ஷஹ்மால் இல்லே.''

இந்தத் தீர்மானத்துடன் தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள். தன்னால் விவரிக்க முடியாதபடி அழகாக அவளுக்குத் தோன்றினான். இதை நினைக்கவே அவளது முகம் மகிழ்ச்சிப் பெருக்கால் சிவந்தது. முழங்கையை எடுத்துவிட்டு தலையணைமீது தலையை சாய்த்த போது கோழிக் கூட்டிலிருந்து சேவலின் கொக்கரக்கோ சத்தம் வந்தது. ஷஹ்மால் அதிர்ந்து போனாள். இது மனப் பிரமை



படிப்பகம்

www.padippakam.com

யாக இருக்குமோ என்று எண்ணி தலையைத் தூக்கி உற்றுக் கேட்டாள். சந்தேகத்துக்கிட மின்றி மீண்டும் ஒருமுறை கொக்கரக்கோ சத்தம் வந்தது. ஷஹ்மால் தனது கழுத்து நெறிக்கப் பட்டதுபோல் உணர்ந்தாள். படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கணவனை நோக்கி, ''கவனித்தீர்களா? காதில்விழுந்ததா? எழுந்து போய் பாருங்கள்'' என்று கத்தினாள்.

குலாம்கான் திடுக்கிட்டு எழுந்து, ''ஏன்? என்ன நடந்தது? என்னைக் கூப்பிட்டாயா?'' என்று கேட்டான்.

''உங்கள் காதில விழ வில்லையா? அந்த சேவல்; அது தான் இப்போது கூவியது. இப்பத் தானே நாம் படுத்தோம்.'' என்று ஷஹ்மால் அழமாட்டாத குறையாக சொன்னாள். ''இந்த சனியன் பிடித்த சேவலை வாங்கி வந்து விட்டீர்களே.''

''சேவலா கூவியது?'' முகத்தைச் சுழித்தவாறு குலாம்கான் கேட்டான், ''இப்ப என்ன செய்யலாம்? இந்த சேலல் முன்னிர வில் கூவியதை நம்பி ரம்ஜான் நோம்பில் தூங்காமலிருப்பது போல் விழித்துக் கொண்டிருக்க வேண்டியது தானா?''

''என்ன அபத்தமா பேசுறீங்க. சீக்கிரமா எழுந்து போய் அதைக் கொல்லுங்கள். இப்படி முன்னிரவில் கூவுகிற சேவலை உடனடியாகக் கொன்று விட வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா? இது நம்மைப்பிடிக்க வந்த சனியன்.'' என்று ஷஹ்மால் கோபத்துடன் கத்தினாள்.

''சனியனாவது இன்னொன்றாவது? இந்தப் பழங்கால கிழவிகளின் பேச்சை மறந்து விட்டுப் போய் தூங்கு'' என்று சொல்லி விட்டு குலாம்கான் போர்வையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டான். கொஞ்ச நேரம் ஷஹ்மால் நச்சரித்துப் பார்த்தாள். ஆனால் அவன் வாய் திறக்க வில்லை. நிம்மதியாக உறக்கத்தில் ஆழ்ந்து போனான். வழக்கம் போல் காலை ஏழு மணிக்குத் தான் எழுந்தான்.

இந்த சேவல் முன்னிரவுநேரத்தில் கூவியதற்காகக்கூட ஷஹ்மால் அவ்வளவாக கவலைப்பட வில்லை. எங்கே ஜானி இந்த சத்தத்தைக் கேட்டிருப்பாளோ என்றுதான் அதிகம் கவலைப் பட்டாள். இது நிச்சயமாக அவளது வாயைக் கிளறும். அவளது கேலிப் பேச்சு ஷஹ்மாலின் மனதைப் புண்படுத்தும். ''இதற்குத் தான் இந்த மாதிரி அற்புதமான உயர்ஜாதி சேவல் வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்



படிப்பகம்

www.padippakam.com

தாயோ? உலகத்திலுள்ள எல்லா சேவல்களுமே பொழுது விடியப் போவதை அறிவிக்கத்தான் கூவும். ஆனால் இந்த கேடு கெட்ட சேவலுக்கோ பொழுது சாய்ந்ததுமே பேய் பிடித்து விடு கிறதே பார்த்தாயா?''

கோழிக் கூட்டைத் திறந்த பிறகு ஜானிக்குப் பயந்து கொண்டு ஷஹ்மால் வெளி முற் றத்தின் பக்கம் போகவே இல் லை. மிகவும் சங்கடமாக இரு ந்தது. ஏனென்றால் ஜானியின் குத்தலான பேச்சுக்கு இவள் பதில் சொல்ல வேண்டி வரும் என்று மருகிப் போனாள். வீட் டைப்பார்த்து ஜாடைபேசுவாள்.

அவளது கோழிகள் சுற்றுச் சுவரின் அருகில் சேவலுடன் திரிந்து கொண்டிருந்தது ஷாஹ் மால் மனம் நொந்தபடி வீட்டிற் குள்ளேயே அடைந்து கிடந் தாள். அந்த சேவலைப்பார்க் கவே அவளுக்கு மனம் வெறுத் துப் போனது. இதை எல்லாம் பற்றி அறியாத அந்தசேவல் தன் இறக்கைகளை விரித்துக் கொண்டு கோழிகளின் கவனத் தைத் தன் பக்கம் ஈர்க்க அவை களைச் சுற்றிச் வந்தது, ஆனால் அந்தக் கோழிகள், ''உனக் கென்ன வாயிற்று? இது முறை யா? அக்கம் பக்கம் பார்ப்பதில் தில்லையா?'' என்று சொல்வது போல்பறந்து சென்றன.

பிறகு அவைகள் சமைய லறைப் பக்கம் எட்டிப்பார்த்தன. என்ன அதிசயம்: ''ஏன் இன்று அவள் எங்கும் கண்ணில் பட வில்லை? எங்களுக்கு ஏதாவது தானியம் போடுவாளே என்று பார்த்தோம்!'' அவைகள் சமை யல் அறையை நோக்கி ஓடின. சேவலும் அவைகளின் எண் ணத்தைப் புரிந்து கொண்டு சென்றது.

ஷஹ்மாலின் பார்வை சேவ லின் கால்களில் பதிந்தது பாதத்திலிருந்து அதன் மேல் பாகம் வரை சேவலின் கால்கள் விகாரமாக அவளுக்குப் பட்டது. அவளது வெறுப்பு மேலோங்கி யது. அவள் கோழிகளை வெளி யே துரத்தத் துணியவில்லை. ஏனென்றால் ஜானி அவள் வீட் டின் ஜன்னலில் நின்று கொண்டு கேலி செய்வதை அவள் விரும்ப வில்லை. ஒரு பிடி அரிசியை அள்ளி தூரத்தில் இருந்தபடி கோழிகளிடம் இறைத்தாள்.

சேவலுக்குஅவள் போடவேண் டாம். ஆனால் கோழிகளை என்ன செய்வது? அவை களை நாள் முழுவதும் பட்டினியபோடக் கூடாது. பாவம்!

புதிய சேவலின் கூவல் சத்தம் சுவரின் அடுத்த பக்கத்திலிருந்த ஜானியின் சேவலுக்குக் கேட்ட



படிப்பகம்

www.padippakam.com

போது அது தனது கழுத்தை உயர்த்தி விரைப்பாக்கிக் கொண்டு நெஞ்சை முன்புறம் நீட்டியது.; அதன் உடம்பு இறுகி நரம்புகள் புடைத்தன. உரத்த குரலில், "கூக்கு கூக்கு" "என்று, அடுத்த வீட்டுக்கு வந்திருக்கும் பிசாசே யார் நீ" என்று புதிய சேவலை வாவெளியே எனஅழைப்பது போல் கூவியது.

"குக்கூ கூகுக்" என்று ஷஹ்மாலின் சேவல் பதில் கூறுவது போல் தனது கழுத்தை செங்குத்தாக உயர்த்திக் கொண்டு, "நான்தான் அழகன். நீ இங்கே வந்து உன் பலத்தைக் காட்டு பார்க்கலாம். அந்தப் பக்கத்தில் நின்று கொண்டு ஏன் முறைக்கிறாய்?"

ஷஹ்மாலுக்கு இந்த இரைச்சலைக் கேட்கப் பிடிக்கவில்லை. ஜானி தனது ஜன்னலில் வந்து அசையாது ஒட்டிக் கொண்டு இதன் சத்தத்தைக் கேட்காமலிருக்க இதன் வாய் அடைத்துப்போகக் கூடாதா என்று எண்ணமிட்டாள். அதைவெளியே துரத்துவதற்குப் பதிலாக ஒரு மண்ணாங் கட்டியை எடுத்து கோபத்துடன் அதன் தலையைக் குறி பார்த்து வீசினாள். குறி தவறி விட்டது. ஆனால் சேவல் திடுக்கிட்டு மேலும் உரத்தக் குரலில் கூவியது. ஜானிதான் ஜன்னலுக்கு வந்து விட்டாள். "காலங் காத்தாலே உனக்கு என்னகோபம்? என்று கேட்டாள்.

கையுங்களவுமாக பிடிபட்ட திருடனைப் போல உணர்ந்தாள் ஷஹ்மால். உடம்பு முழுதும் வியர்த்துக் கொட்டியது. இது போன்ற ஒரு எதிர்ப்படுதலைத் தவிர்க்க அவள் கவனத்துடன் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பயனில்லாமல் போய் விட்டன. ஜானியின் அந்தப் பேச்சு முன்னிரவில் அது கூவியதை அவள் கேட்டிருப்பாள் என்ற தனது சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்தியதுடன் அவளது வார்த்தைகள் மறைமுகமான பரிகசிப்பாக இருந்தது. ஷஹ்மால் தைரியத்தை திரட்டிக் கொண்டு, "எனக்கென்ன கோபம்? பாவம் இந்தக் கோழிகளைத் தானியத்தின் பக்கம் வர விடமாட்டேனென்கிறது. அதனால் தான் அதைத் துரவிரட்டினேன்." என்றாள்.

"புதிதாக வந்ததனால் அப்படி இருக்கிறது நீ கொஞ்சம் பொறுத்திருந்து பாரேன். நாளையிலிருந்து அது தானே கோழிகளை கவனித்துக் கொள்ளும்" என்று சொல்லி ஜானி சிரித்தாள்.

"அதெல்லாம் வாஸ்தவம் தான். ஆனால் அதை நாங்கள் வைத்துக் கொள்வதாக இருந்



படிப்பகம்

www.padippakam.com

தால் தானே. கறி சமைக்கத் தானே இதை அவர் வாங்கிவந்தார். நேற்றே அறுத்து சமைத்திருப்போம். காலையிலே பார்த்துக் கொள்ளலாமென்றிருந்து விட்டோம்.'' என்று ஜானி கேலி செய்வதற்கு சந்தர்ப்பமளிக்காத வாறு சொல்லி விட்டதாக ஷஹ்மால் நினைத்துக் கொண்டாள்.

''ஏன்? அதை ஏன் கொல்லப் போகிறீர்கள்? அது எவ்வளவு அழகா இருக்கிறது பார். அதன் குரலும் கூட இனிமையாக இருக்கிறது.'' அவர்கள் தங்களுக்கென அதை வைத்துக் கொண்டால் தனது சேவல் தனியாக விடப்படும் என ஜானி கருதினாள் போலும்.

ஷஹ்மாலின் முகம் வெளிறிப் போனது. இறுதியாக இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அதன் குரலை ஏன் அவள் புகழ்கிறாள்? என்று ஷஹ்மால் யோசித்தாள். தனது பதிலில் இந்த புகழ்ச்சியைப் புறக்கணித்துப் பேச விரும்பினாள்.

''சந்தையில் மலிந்து கிடக்கின்ற இந்த வாதிரி அசிங்கமான நாற்றமெடுக்கிற சேவலை நாங்கள் வர்ப்போம் என்று நீ நினைக்கிறாய். நாங்கள் வாங்க விரும்பிய மாதிரியான சேவல் அன்று கிடைக்க வில்லை இப்போது வேறொருவர் உயர் ஜாதி சேவல் வாங்கித் தருவதாக உறுதியளித்திருக்கிறார்.''

ஜானியால் எதுவும் சொல்ல முடியவில்லை. ஷஹ்மாலின் இந்தப் புதிய கோபத்தைக்கண்டு வியப்படைந்தாள். நேற்று இந்த சேவலை ஆகாயத்தில் தூக்கி வைத்து மெச்சிக் கொள்ள வில்லையா? இன்று என்ன வந்தது? ஒருக் கால் ஷஹ்மாலின் வார்த்தைகள் தனக்காக—தான்தெருப் பொருக்கும் சேவல் வைத்திருக்கிறேன் என்று சொல்லிக் காட்டுவதாக இருக்கலாம். இதற்கு சூடாக பதில் கொடுக்க ஜானி நினைத்தாள். அதற்குள் ஷஹ்மால் வீட்டிற்குள் நுழைந்து விட்டாள். ஜானி தன் கோபத்தை விழுங்கிக் கொள்ளும் படியாகி விட்டது.

அடுப்பில் வேலைகளை கவனித்துக் கொண்டே சேவலினால் ஏற்பட்ட பிரச்சனைகளைப் பற்றி மேலும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் ஷஹ்மால். தன் கணவனை விட்டு இதை அறுத்து சமைத்து விட வேண்டும். அவர் சம்மதிக்காவிட்டால் கசாப்புக் கடை சமதுவை அழைத்து வந்து இதைக்கொன்று விட வேண்டும். சாப்பாட்டில், சமைத்த இறைச்சியை பரிமாறும் போது அவர் எப்படி எதிர்ப்பு



படிப்பகம்

www.padippakam.com

தெரிவிக்கிறார் என்று பார்க்கலாம்!

குலாம்கான் பள்ளி வாசலிலிருந்து வந்ததும் அவனுக்கு ஒரு கோப்பையில் தேநீரை ஊற்றிக் கொடுத்து விட்டு, இந்தத் தேநீரைப் பருகிவிட்டு இந்த சேவலைத் தீர்த்துக் கட்டுங்கள். அண்டை அயலார்கள் என்ன சொல்வார்கள்? அவர்கள் மத்தியில் நாம் வாழவேண்யிருக்கிறதில்லையா? என்று சொன்னாள்.

"இதைப்பற்றி அவர்களுக்கு என்ன வந்தது? ரொட்டியை மென்று கொண்டே குலாம்கான் கேட்டான். இது ரம்ஜான் மாதமில்லையே விடியற் காலத்தைப் பற்றி சந்தேகம் எழுவதற்கு?"

"ஹும்! உங்களுக்கு எப்படிப் பேசி வாதம் செய்வது என்பது மட்டும் தான் தெரியும்." என்று சொல்லி விட்டு, மேலும், "நீங்கள் செய்ய விரும்ப வில்லை என்றால் செய்ய வேண்டாம். நானே கசாப்புக் கடைக்கார சமதுவைக் கொண்டு அதை முடித்து விடுகிறேன். இந்த ராட்சஸ சைத்தானை நான் தீனி போட்டு கொழுக்க வைப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்றாள்.

"உன் இஷ்டம் போல செய்து கொள். ஆனால் மறுபடி இன்னொரு சேவல் வாங்கிவா என்று என்னைக் கேட்கக் கூடாது." என்று குலாம் கான் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

"நான் கேட்க மாட்டேன். என்னவோ பட்டணத்திலேயே சேவலுக்குப் பஞ்சம் வந்து விட்டாப் போல'பேசுறீங்களே." என்று சொல்லி விட்டு ஷஹ்மால் அடுப்படிக்கு பாய்ந்து சென்றாள். அப்புறமென்ன? ஜானியினுடைய சேவல் நாள் பூறாவு நமது முற்றத்தில் தனே சுற்றி வருகிறது. அதனாலே நமக்கு இன்னொரு சேவலுக்கு அவசியமென்ன?

ஷஹ்மால் எப்படி யாவது இந்த சேவலைத் தொலைக்க தீர்மானித்து விட்டாள். அதன் மீது அவளுக்கு ஆழ்ந்த வெறுப்பு உண்டாகி விட்டது. ஜானி தனது வெண்ணிறப் பற்களால் பழிப்புக் காட்டுகிறாள். அந்த சேவல் தனது இறக்கைகளை படபடவென்று அடிக்கும் சத்தம் ஜானியின் ஏளனச் சிரிப்பு போன்று அவள் காதில் தாக்குகிறது. அவளது இழிவிற்கும் அவமானத்திற்கும் முழு முதற்காரணம் அந்த சேவல் தான் என்று அவளுக்குத் தோன்றியது.

குலாம்கான் வேலைக்குப் புறப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டுச் சென்ற உடனேயே சமது வீட்டிலிருக்கிறானா என்று பார்க்கப் போனாள். இரண்டு மூன்று வீடுகள் தள்ளி தான் அவன் வீடு. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு சேவல்களை அறுத்து உரித்துக் கொடுப்பதுதான் அவனதுதான் அவனது தனித்திறமை. இந்த வேலை தெரிந்த பலர் அங்கிருந்தனர். ஆனாலும் பறவைகளை அறுத்து நறுக்கிக் கொடுப்பதில் கைதேர்ந்தவன் என்ற பெயர் அவனுக்கு நிலைத்து விட்டது.

சமது வீட்டிலிருந்தான். ஜன்னல் வழியாகப் பார்த்து அவள் வரும் காரியத்தை யூகித்துக் கொண்டான் ''வீட்டுக்குப் போய் அதைக் கொண்டுவா. ஆனால் ஞாபகம் இருக்கட்டும், நானும் சாப்பாட்டுக்கு வந்து விடுவேன். நீங்கள் இருவர் மட்டுமே பங்கிட்டு சாப்பிட்டு விடலாமென்று நினைத்துக் கொள்ளாதீர்கள்,''

''நீ தாராளமாக வரலாம்.'' என்றாள் ஷஹ்மால். உதட்டில் புன்னகையுடன் மனநிறைவோடு வீடுவந்தாள். இனி தான் தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்று அவள் சந்தோஷமடைந்தாள். பொழுது விடிந்தால் பொழுது போனால் இனி ஜானி நெஞ்சை அறுக்கும் சுடு சொற்களைக் கேட்க வேண்டியிருக்காது. ஆனால் ஒரு விநோதமான காட்சி அவள் கண்களில் பட்டது. அவள் தனது காம்பவுண்டுக்குள் நுழைந்தபோது கோழிகள் ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டன. ஜானியின் சேவலும் இவளுடைய சேவலும் தங்களைச் சுற்றி புழுதி மண்டலத்தைக் கிளப்பியபடி மூர்க்கமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஜானி தன் வீட்டு ஜன்னலில் அமர்ந்தபடியே இந்த சண்டையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் மகிழ்ச்சி பொங்கியதை ஷஹ்மால் கவனித்தாள். அவளது சேவலின் வெற்றி பிரத்யட்சமாக உறுதியாகி விட்டது. அதன் கொண்டை சிறிய தானாலும் தடிமனாகவும் அடர்த்தியாகவும் இருந்தது அதனுடைய பருமனான உறுப்புகள் அதை ஒரு தேர்ந்த போர் வீரனாக எடுத்துக் காட்டியது. அது சண்டையில் அண்டை அயல் சேவல்களை முற்றிலுமாக தோற்கடித்து இருந்தது. ஷஹ்மாவின் முகம் சுண்டிப் போனது. அவளது இதயம் வேகமாகத் துடித்தது.

சேவல்களின் கழுத்து இறகுகள் செங்குத்தாக சிலிர்த்து நின்றன. அவைகளின் தல்லகள்



படிப்பகம்

www.padippakam.com

டுங்கி கோபாவேசத்தால் குலுங்கின. இந்த குலுக்கல் அலைகளின் இறகுகளுக்கு மின் சாரம்போல் பாய்ந்து நிலைகுத்தி நிற்க வைத்தன. அலைகளின் உடல் வெளியே இழுக்கப்பட்டது போலவும் அலைகளின் வால் இறகுகள் உப்பியது போலவும் தோன்றின. அலைகள் ஒன்றை ஒன்று வெறித்து நோக்கி சீறிக் கொண்டே தங்களது துடிக்கும் தலைகளை முன்னுக்கு நீட்டி அனல் பறக்கும் ஆத்திரத்தை பரிமாறிக் கொண்டன. ஆங்கா ரத்தோடு பாய்ந்து பரஸ்பரம் அலகினால் கொத்திக் கொண் டும் கூர்மையாகக் கிழித்துக் கொண்டும் மூர்க்கமாகத் தாக்கிக் கொண்டன. ஷஹ்மால் முற்றத் தத்திற்குள் நுழைந்ததைப் பார்த்தவுடன் ஜானி நம்பிக்கை யுடன் தனது ஜன்னலில் பிறர் கவனிக்கும்படியான பாங்கில் அமர்ந்து கொண்டாள்- "உனது நாலரை ரூபாய் சேவலை எதிர்த்து நிற்க எனது பலவீன மான சேவலுக்கு எப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது பார். ஆபத்தில் மாட்டிக்கொள் ளும் கழுதையை யார் தடுக்க முடியும்? அதற்கு மானம் வெட் கம் இருக்குமா?" அவள் தனது பரிகாசக் குரலை தவிர்த்து, "ஆனால் நான் உன்னை எச்ச ரிக்கிறேன்." என் சேவல் உனது சேவலைத் துரத்திவிடும். ஏற் கனவே பக்கத்து வீட்டு சேவல் களை எல்லாம் என் சேவல் தோற்கடித்துள்ளது."

ஷஹ்மாலின் இதயம் குன்றிப் போனது. அவள் என்ன சொல்ல முடியும். நிகழ்ச்சிப் போக்கைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போனாள். வேண்டுமென்றே தான் ஜானி தன் சேவலை இங்கு அனுப்பி இருக்கிறாள் என்ற சந் தேகம் அவள் மனதில் உதித் தது. எழுந்து சென்று ஜானியின் சேவலின் குரல் வளையை நெறித்து விட வேண்டுமென்ற அடங்காத கோபாக்னி மூண் டது. ஆனால் அதை அடக்கிக் கொண்டுதான் கேலிக்கு ஆளா வதற்குள்ளாக தன்னை தற்காத் துக் கொள்ள ஆரம்பித்தாள்.

"அயலூர் சேவல் உள்ளூர் சேவலைத் துரத்திக் கொண்டி ருக்கிறது. இந்தப் பழமொழி உனக்குத் தெரியாதா? அதே சமயம் என்னுடையது சண்டைக் கான சேவலல்ல. அது வேறு வகையானது என்பது உனக்குத் தெரியும். அதனால் தான் அதன் வலை அவ்வளவு அதிகம்.

சேவல்கள் ஆக்ரோஷத்துடன் சண்டையிட்டு இடத்தையே நரகமாக்கி விட்டன. ரத்தம் கொட்டும் வரை அவைகள் பரஸ் பரம் இறகுகளைக் கொத்திப் பிடுங்கிக் கொண்டன. ஜன்னல்



படிப்பகம்

www.padippakam.com

கம்பிகளை கெட்டியாகப் பிடித்து தலையை குலுக்கினாள் ஜானி— சேவல்களின் ஒவ்வொர் அசைவிலும் முகம் சிவந்தது.

முடிவைப் பற்றி நிச்சயமற்ற மனோநிலையில் ஷஹ்மாலும் இறுக்கமாக இருந்தாள். நடந்து கொண்டிருப்பார்த்து எரிச்சடைந்து சஞ்சலத்தில் மூழ்கிப் போனாள். "உன் மூக்கு நொறுங்கித் தூளாகட்டும்; உன் கால்கள் இழுத்து முடமாகிப் போகட்டும்." என்று மனதிற்குள் சபிக்கு மளவுக்கு ஜானியின் சேவலைம் பார்த்து எரிச்சலுற்றாள். ஜானியின் சேவல் சிகப்பும் கறுப்புமாக இருந்ததால் அதன் மீது படிந்த ரத்தக்கறை வெளியில் தெரியவில்லை. ஆனால் ஷஹ்மாலின் சேவல் வெண்ணிறமானதால் அது ரத்தத்தில் குளித்தது போல் இருந்தது. இதைக் கண்டு ஷஹ்மால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் வெடித்தாள். "எல்லா அவக்கேடுகளும் உன் தலையிலே விழட்டும். உன் அலகு இழுத்துக் கோணிப் போகட்டும்."

"ஜாக்கிரதை, ஷஹ்மால். ரொம்ப பேச்சை நீட்டாதே. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடும் படியாக ஒன்று மற்றொன்றைத் துரத்தப் போவதைப் பார். என்ன நினைத்துக் கொண்டிருந்தாய்? நாற்றமடித்த சேவல் ஒன்றும் அவ்வளவு மட்டமல்ல." என்று சொல்லி ஜானி புன்னகை செய்வதாக பாவனை செய்தாள்.

ஷஹ்மால் அடியோடு நம்பிக்கை இழந்தாள். இந்த சேவல் வந்ததிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக துர் அதிர்ஷ்டமான சம்பவங்கள் அவளுக்கு நேர்ந்தன. இதே இகழ்ச்சிக்குரலில் ஜானிக்கு அவள் பதில் சொல்லி இருக்கலாம். ஆனால் ஜானி சும்மா விட்டிருக்க மாட்டாள். ஏனென்றால் திருப்பி பதில் அடி கொடுப்பதில் அவள் ஷஹ்மாலுக்கு சளைத்தவளல்ல. இந்த சேவலில் ஒன்று தோற்றுப் போய் ஓடி இராவிட்டால் இந் நேரம் இவர்களது வாக்கு வாதம், காரசாரமாக திட்டிக் கொள்ளும் பெருத்த வாய்ச் சண்டையில் முடிந்திருக்கும் ஷஹ்மாலின் சேவல் ஜானியின் சேவலை துரத்தி விரட்ட ஆரம்பித்தது.

எண்ணெய் சட்டியின் அடிப்பாகம் கறுத்திருப்பது போல ஜானியின் முகம் கறுத்து வியர்த்து விறுவிறுத்துப் போனதாக ஷஹ்மால் எண்ணிக் கொண்டாள். இந்த சண்டையின் முடிவைப் பற்றி சிறிது கூட கவலை கொள்ளாதவள் போல் ஜானி நடந்து கொண்டதையும் அவள் பார்த்தாள்.

"இந்த சேவலை நீ கொல்லப்



படிப்பகம்

www.padippakam.com

றாயா? அல்லது வளர்க்கப் கிறாயா?'' என்று கன்னத்தில் கையை ஊன்றியபடி ஜானி கேட்டாள்.

''எனது பேச்சை நீ பெரிதாக எடுத்துக் கொண்டாயா?'' என்று காதிலுள்ள வெள்ளி வளையம் ச்லுங்க தலையை ஆட்டியவாறு ஷஹ்மால் கேட்டாள். எனது சேவலிடம் ஆயிரம் குறைகள் இருக்கலாம். அது முன்னிரவிலும் கூட கூவலாம். அதெல்லாம் எனக்கு ஒன்றும் பெரிதாகப் படவில்லை. ஆனால் அதற்குத் திறமையாக சண்டை போடும் வல்லமை இருந்தால் அதுவே போதுமானது. இம் மாதிரி ஒரு சேவலைத்தான் நான் வாங்க விரும்பினேன். இல்லா விட்டாம் சந்தையில் பெருமளவில் குப்பையைக் கிளறி மேய்ந்து திரிந்து கொண்டிருக்கும் சேவலையா விரும்புவேன்.''

---

# விடியல் வரும் வேளை

புத்துயிர் பெற்று புறப்படு தோழா
புதியதோர் சரித்திரம் படைக்க
நிம்மதி குலைந்து நிலைகெடலாமோ
நீண்ட இடைவெளி கடந்து
நீதிதன்னை நிலைநாட்டிடவே
நீ இன்று புறப்படலானாய்
வங்கக் கடலே பொங்கிவந் தாலும்
சிங்கம் என நீ சீறி எழுவாய்
பெருமை சேர்க்கும் நேரம் வந்துற்றது
துயரம் இனிமேல் கனவாய் மாறும்.
விடியல் வந்திடும் வேளையைக் கொணர
புத்துயிர் பெற்றுப் புறப்படு தோழா.

—ஆர். ரவி



படிப்பகம்

www.padippakam.com

# 'புதிய முகில்கள்'

## நூல் வெளியீட்டு விழா

நமது தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் இராஜபாளையம் கிளையின் சார்பில் 'புதிய முகில்கள்' என்ற சுற்று வட்டார எழுத்தாளர்களை ஒருங்கிணைத்து சிறுகதை தொகுப்பு 7.7.90 மாலை 5 மணியளவில் வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை செயலர் சிவ அருணாசங்கர் வரவேற்று பேசினார். விழாவிற்கு பன்மொழிப்புலவர் திரு மு. கு. ஜெகநாத ராஜா தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

'புதிய முகில்கள்' நூலை முது பெரும் எழுத்தாளர் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள் வெளியிட முதல் பிரதியை சுமை தூக்கும் தொழிலாளர் திரு K.அய்யாச்சாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழகத்திலேயே முதன் முதலாக நூலைப் பெறுபவர் ஒரு சாதாரண சுமைதூக்கும் தொழிலாளி. இவரை அழைத்து வெளியிட்டதன் மூலம் இராஜபாளையம் கலை இலக்கிய பெருமன்றக் கிளை புதுமை செய்துள்ளது.

முதல் பிரதியை பெற்றுக் கொண்ட K. அய்யாச்சாமி அவர்கள் பேசும் போது ''எங்களைப் போன்ற தொழிலாளிகளுக்கும் இலக்கியம் போய் சேர வேண்டும் என்பதற்காக இந்த நூலின்

தகவல்:
சிவ. அருணாசங்கர்



படிப்பகம்

www.padippakam.com

...தியை சாதாரண சுமை ... தொழிலாளியான என் ...ம் தந்து தமிழகத்திலேயே முதன் முதலாக இந்த புதுமை செய்துள்ளீர்கள். இதற்கு தொழிலாளி வர்க்கம் உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளது இதற்காக த.க.இ. பெருமன்ற இராஜபாளையும் கிளைக்கும் வெளியிட்ட வல்லிக்கண்ணன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

பின் வல்லிக்கண்ணன் அவர்கள் தனது சிறப்புரையில் தற்போது வார, மாத இதழ்களில் வெளிவருகிற சிறுகதைகள் பற்றியும், பத்திரிகைகளின் தரத்தையும் பற்றி ஆக்ரோசமாக பேசினார்.

நூலில் உள்ள இராஜபாளையும் மற்றும் சுற்று வட்டார இருபத்திமூன்று எழுத்தாளர்களின் கதைகளை டாக்டர் சி. கனகசபாபதி அவர்கள் பல்கலைக் கழக ஆய்வு நோக்கிலே விமர்சித்தார் இவருடைய விமர்சனப்பார்வை வித்தியாசமான கோணத்தில் புதுமையாக இருந்தது.

கே. சி. எஸ் அருணாசலம் அவர்கள் புத்தக மதிப்பீட்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்னதாக 'தாமரை' என்ற இசைக்குழு சார்பாக இரு நிஜநாடகங்கள் நடத்தப்பட்டன. 'வேலை' என்ற நாடகத்தில் கருப்பசாமியும், ராமசுப்ரமணியனும், 'மனிதர்கள்' என்ற நாடகத்தில் கருப்பசாமி, இலதா சிவ. அருணாசங்கரும் நடித்தனர்.

முதல் முயற்சியாக இருந்தாலும் இளைஞர்கள் நிஜநாடகத்தில் இயல்பாய் நடித்ததை வந்திருந்த படைப்பாளர்கள், ஆர்வலர்கள் பாராட்டினர்.

சிறுகதைகளை தொகுத்த குறிஞ்சிச் செல்வர் கொ. மா கோதாண்டம் அறிமுக உரை நிகழ்த்தினார்.

இறுதியில் இலதா நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

—●—

161, பிரகாசம் சாலை, சென்னை-108. ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் எஸ். எஸ். தியாகராஜன்,
ஆசிரியர்: ப. மாணிக்கம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com
Regd. No. 9140 THAMARAI August 1990
W.P.P.No.TN/MS(N)54 Regd. as News Paper in Srilanka

படிப்பகம்